# தமிழ் மொழியும் இலக்கியமும்

## தரம் 6

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



சகல பாடநூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக்கொள்வதற்கு
**www.edupub.gov.lk** வலைத்தளத்தை நாடுங்கள்.

| | | |
|---|---|---|
| முதலாம் பதிப்பு | - | *2014* |
| இரண்டாம் பதிப்பு | - | *2015* |
| மூன்றாம் பதிப்பு | - | *2016* |
| நான்காம் பதிப்பு | - | *2017* |
| ஐந்தாம் பதிப்பு | - | *2018* |
| ஆறாம் பதிப்பு | - | *2019* |


எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.

**ISBN 978-955-25-0071-8**

இந்நூல் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்
ஹாப்பி ஹொலிடேய்ஸ் பிரைவேட் லிமிடெட்
71/2/B, M.V. பெரேரா மாவத்தை, சின்ஹரமுள்ள, களனி
அச்சகத்தினால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

## தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

ஆனந்த சமரக்கோன்
கவிதையின் பெயர்ப்பு.



***''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம் நாட்டுக்கும் முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''***

## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி

கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமூகத்தில் காணப்படும் தொழில்வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமூகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக் கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் பொருட்டு நீங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை சீராகப் பயன்படுத்துவதும் அதன்மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்தோரின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே இலவசப் பாடநூல்களை அரசினால் உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசாக நாம், மிக வேகமாக மாறி வரும் உலக மாற்றத்திற்குப் பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதும் ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளதனாலேயேயாகும். இலவசக் கல்வியின் உச்சப் பயனை அனுபவித்து நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்றிறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்காக இந்நூலைப் பயன்படுத்தி நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகக் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் போன்றவையே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் சிறந்த பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.



**அகில விராஜ் காரியவசம்**
***கல்வி அமைச்சர்***

## முன்னுரை

உலகின் சமூக, பொருளாதார, தொழினுட்ப, கலாசார விருத்தியுடன் சேர்ந்து கல்வியின் நோக்கங்கள் மிக விரிந்த தோற்றமொன்றைப் பெற்றுள்ளன. மானிட அனுபவங்கள், தொழினுட்ப மாற்றங்கள் ஆராய்ச்சி மற்றும் புதிய குறிகாட்டிகளின்படி கற்றல் கற்பித்தல் செயற்பாடும் நவீன மயமாக்கப்பட்டுள்ளது. அதன்போது மாணவர் தேவைக்குப் பொருந்தும் விதமான கற்றல் அனுபவத்தை ஒழுங்கமைத்து கற்பித்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்திச் செல்வதற்கு பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற நோக்கங்களிற்கிணங்க பாடம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிப் பாடநூல்களை ஆக்குவது அவசியமாகும். பாடநூல் என்பது மாணவரின் கற்றல் சாதனம் மாத்திரமல்ல. அது கற்றல் அனுபவங்களைப் பெறுவதற்கும் அறிவு, பண்பு விருத்திக்கும் நடத்தை மற்றும் மனப்பாங்கு வளர்ச்சியுடன் உயர்ந்த கல்வியொன்றை பெற்றுக் கொள்வதற்கும் மிகவும் உதவக்கூடியதுமாகும்.

இலவசக் கல்விக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கிலேயே தரம் 1 முதல் தரம் 11 வரையிலான சகல பாடநூல்களும் அரசினால் உங்களுக்கு வழங்கப்படுகின்றன. அந்நூல்களிலிருந்து உயர்ந்தபட்சப் பயன்களைப் பெற்றுக்கொள்வதுடன், அவற்றைப் பாதுகாப்பதும் உங்களது கடமையாகும் என்பதையும் நினைவூட்டுகின்றேன். பூரண ஆளுமைகொண்ட நாட்டிற்குப் பயனுள்ள சிறந்ததொரு பிரசையாகுவதற்கான பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கு இப்பாடநூல் உங்களுக்குக் கைகொடுக்கும் என நான் எண்ணுகிறேன்.

இப்பாடநூலாக்கத்தில் பங்களிப்புச் செய்த எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
*2019.04.10*

## கண்காணிப்பும் மேற்பார்வையும்

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
*கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,*
*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.*

## வழிகாட்டல்

**டபிள்யூ.ஏ. நிர்மலா பியசீலி**
*கல்வி வெளியீட்டு ஆணையாளர் (அபிவிருத்தி),*
*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.*

## இணைப்பாக்கம்

**லெனின் மதிவானம்**
*பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,*
*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.*

**யூ. எல். உவைஸ்**
*உதவிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,*
*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.*

## எழுத்தாளர் குழு

**கலாநிதி ந. இரவீந்திரன்**
*சிரேஷ்ட விரிவுரையாளர்,*
*ஆசிரியர் கலாசாலை, மகரகம.*

**என். அருளானந்தம்**
*பிரதிக் கல்விப் பணிப்பாளர்,*
*வலயக் கல்வி அலுவலகம்,*
*மாத்தளை.*

**இ. ரதி தேவசுந்தரம்**
*ஆசிரிய ஆலோசகர்,*
*கண்டி கல்வி வலயம்,*
*கண்டி.*

**தே. கணேஷ்**
*ஆசிரியர்,*
*நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயம்,*
*நோர்வூட்.*

## பதிப்பாசிரியர் குழு

**பேராசிரியர் துரை மனோகரன்**
ஓய்வுநிலைப் பேராசிரியர்.

**பேராசிரியர் செ. யோகராசா**
கிழக்குப் பல்கலைக்கழகம்.

**வ. செல்வராஜா**
துணைப் பீடாதிபதி,
ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி, பத்தனை.

**வ. விஜயலெட்சுமி**
பணிப்பாளர், தமிழ் மொழித் துறை,
தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

**லெனின் மதிவானம்**
பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்.

## பதிப்பாசிரியர் (மொழி)

**க. சிவபாலசுந்தரம்**
ஆசிரிய ஆலோசகர்.

## சரவை நோக்கு

**என். சகிலா**
அபிவிருத்தி அலுவலர், கல்வி அமைச்சு.

**ஆர். கவியாழினி**
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## ஓவியங்கள்

**கனிவுமதி**

## அட்டைப்படம், தளக்கோலம், கணினி தட்டெழுத்து

**எச்.எஃப். ரிஸ்னா**
கணினி வடிவமைப்பாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

# தமிழ் மொழி வாழ்த்து

*வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி*
*வாழிய வாழியவே!*
*வான மளந்த தனைத்தும் அளந்திடும்*
*வண்மொழி வாழியவே!*

*ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி*
*இசைகொண்டு வாழியவே!*
*எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி*
*என்றென்றும் வாழியவே!*

*சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்*
*துலங்குக வையகமே!*
*தொல்லை வினைதரு தொல்லை யகன்று*
*சுடர்க தமிழ்நாடே!*

*வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி*
*வாழ்க தமிழ்மொழியே!*
*வானம் அறிந்த தனைத்தும் அறிந்து*
*வளர்மொழி வாழியவே!*

*- சுப்பிரமணிய பாரதியார் -*

## பாடநூல் கருப்பொருட் பாடல்

மனதில் பூ பூத்திடும் புதிய புத்தகம்
வாசமே
கண்களில் காட்சி தோன்றும் எமது
உலகமே வெளிச்சமே...//

புத்தகம் அறிவு வரும் முகங்களில்
மகிழ்வு தரும்
புதிய புத்தகம் புதிய பொலிவு பெறும்
தினமுமே.

புத்தகம் கண்கள் தானே அதை
காப்பது போலவே
அறிவைத் தரும் புத்தகங்களை
மகிழ்வுடன் காப்போமே.

மனதில் பூ பூத்திடும் புதிய புத்தகம்...//

பாடலாசிரியர் :- சரத் குமார பெரேரா
இசை :- மகேஷ் தெனிப்பிட்டிய

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| 1. தங்கம் விதைத்தால் தங்கம் விளையுமா? | 1 |
| 2. எலியும் சேவலும் | 15 |
| 3. ஏமாந்த நாய் | 24 |
| 4. குரங்குச் சேட்டை | 29 |
| 5. தந்தை மகனுக்கு எழுதிய கடிதம் | 39 |
| 6. பறவைகள் பலவிதம் | 48 |
| 7. அழ. வள்ளியப்பா பாடல்கள் | 57 |
| 8. மூட ஆமை | 62 |
| 9. தென்னமரக் கும்மி | 67 |
| 10. புதிய ஆத்திசூடி | 71 |
| 11. கண்ணகி வழக்குரைத்தல் | 82 |
| 12. செய்தித் தாள் | 90 |
| 13. செய்ந்நன்றி அறிதல் | 95 |
| 14. சேர். ஐசாக் நியூற்றன் | 100 |
| 15. புகழ்ச்சி இகழ்ச்சியை அளித்த கதை | 103 |
| 16. ஈசலும் புற்றும் | 106 |
| 17. ஒழுக்கம் உயர்வளிக்கும் | 113 |
| 18. மரங்கள் வாழ்க! மாநிலம் வாழ்க! | 116 |
| 19. குறும்பா | 119 |
| 20. கம்பரிற் பாலர் கல்வி | 122 |

# 1 தங்கம் விதைத்தால் தங்கம் விளையுமா?

ஓர் ஊரில் பெருஞ்செல்வன் ஒருவன் இருந்தான். அந்த ஊரிலிருந்த பெரும்பாலான நிலங்கள் அவனுக்கே சொந்தமாக இருந்தன.

பேராசை கொண்டிருந்த அவன் ஏழை மக்களுக்கு அதிக வட்டிக்குப் பணம் கொடுத்தான். பணம் திருப்பித் தர இயலாதவர்களின் நிலங்களைப் பிடுங்கிக் கொண்டான். தன் நிலங்களில் அவர்களை அடிமை போல வேலை வாங்கினான்.



அவனது கொடுமைகளுக்கு அளவே இல்லாமல் போயிற்று.

ஊர் மக்கள் எல்லோரும் இவனுக்குச் சாவு வராதா என்று புலம்பிக் கொண்டிருந்தார்கள்.

அந்த ஊருக்குத் தன் கழுதையில் அமர்ந்து ஈஃபண்டி வந்தான்.

ஏழைகளுக்கு உதவுபவன்; அவர்கள் துன்பத்தை நீக்குபவன்; நல்ல உள்ளம் கொண்டவன் ஈஃபண்டி; இப்படி அவனைப் பற்றி முன்னரே கேள்விப்பட்டிருந்தார்கள், அந்த ஊர் மக்கள்.

அவனை வரவேற்ற அவர்கள் அந்தச் செல்வனின்

கொடுமைகளைப் பற்றிச் சொன்னார்கள். 'நீங்கள்தான் அவனுக்கு நல்ல பாடம் கற்றுக்கொடுக்க வேண்டும் எங்களைக் காப்பாற்ற வேண்டும்' என்று வேண்டினார்கள்.

சிந்தனையில் ஆழ்ந்த அவன் ''அந்தச் செல்வன் எதற்கு எல்லாம் ஆசைப்படுவான்? அதைச் சொல்லுங்கள்'' என்று கேட்டான்.

''அவனது ஆசைக்கு அளவே இல்லை. பேராசை பிடித்த அரக்கன் அவன். எவ்வளவு கிடைத்தாலும் அவன் மகிழ்ச்சி அடைய மாட்டான்'' என்றான் அவர்களில் ஒருவன்.

''அது போதும் எனக்கு. பேராசை கொண்ட ஒருவனை ஏமாற்றுவது எளிது. உங்களில் பலரிடம் சிறிதளவு தங்கம் இருக்கும். எல்லாவற்றையும் திரட்டுங்கள். அவற்றை என்னிடம் கொடுங்கள். அந்தத் தங்கத்தை வைத்துத்தான் அவனை மடக்க வேண்டும்'' என்றான் அவன்.

தங்களிடம் இருந்த தங்கத்தை எல்லாம் அவர்கள் திரட்டினார்கள். அவற்றை அவனிடம் கொடுத்தார்கள்.

மறுநாள் காலையில் வழக்கம் போல அந்தச் செல்வன் தன் நிலங்களைப் பார்வையிட வந்தான்.

வழியில் ஒரு மரத்தின் நிழலில் ஈஃபண்டி அமர்ந்திருந்தான். சல்லடையில் எதையோ அவன் சலித்துக் கொண்டிருந்தான். சல்லடையிலிருந்த சிறு சிறு பொருள்கள் பளபளத்தன.

வியப்பு அடைந்த செல்வன் ''டேய்! இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?'' என்று அதட்டினான்.


''ஐயா! நான் என்ன செய்கிறேன் என்பது உங்களுக்கு தெரியவில்லையா? நிலத்தில் விதைப்பதற்காகப் பொன்னைச்

சலித்துக் கொண்டிருக்கிறேன். அவற்றில் பெரிய விதைகளை எடுத்து நிலத்தில் விதைப்பேன்'' என்றான் ஈஃபண்டி.

வியப்பு அடைந்த அவன் ''உண்மையைச் சொல். இப்படி விதைத்தால் பொன் விளையுமா?'' என்று கேட்டான்.

''என்ன இப்படிக் கேட்டுவிட்டீர்கள்? இன்று நான் பத்து கிராம் பொன்னை இங்கே விதைக்கப் போகிறேன். அடுத்த வாரத்தில் நூறு கிராம் பொன் எனக்குக் கிடைக்கும்'' என்றான் ஈஃபண்டி. அவன் பேச்சில் உறுதி தெரிந்தது.

''நான் இன்னும் பெருஞ்செல்வனாக வேண்டும் என்பது கடவுளின் விருப்பம். அதனால்தான் இவனை இங்கு அனுப்பி இருக்கிறார்'' என்று உள்ளுக்குள் மகிழ்ந்தான் அந்தச் செல்வன்.



''நான் உன்னை நம்புகிறேன். நாம் இருவரும் சேர்ந்தே செயல் படுவோம். நிலம் என்னுடையது. பொன் உன்னுடையது. பொன் அறுவடையானதும் அதில் எட்டுப் பங்கை என்னிடம் தர வேண்டும். மீதி இரண்டு பங்கை நீ எடுத்துக் கொள்ள வேண்டும். நிலத்தின் சொந்தக்காரனுக்கு அதிகப் பங்கு. இது உனக்கே தெரியும்''.

''நீங்கள் சொல்வது சரிதான். பத்து கிராம் பொன்னை விதைத்தால் எனக்கு இருபது கிராம் பொன் கிடைக்கும். எப்படியும் இரண்டு பங்கு பொன் கிடைக்கிறது. எனக்கு அது போதும்'' என்றான் ஈஃபண்டி.

வெறும் பேச்சால் என்ன பயன்? இவன் ஏமாற்றிவிட்டால் என்ன செய்வது என்று சிந்தித்தான் செல்வன்.

சாட்சி வைத்து இவனிடம் எழுதி வாங்கிக்கொள்வது என்ற முடிவுக்கு வந்தான்.

அந்த ஊர் நீதிபதியை அங்கு அழைத்து வந்தான்.

அவர் முன்னிலையில் எந்த இடத்தில் வேண்டுமானாலும் ஈஃபண்டி பொன்னை விதைக்கலாம். அறுவடை முடிந்ததும் எட்டுப் பங்கு பொன்னைச் செல்வனிடம் கொடுத்துவிட வேண்டும் என்று இருவரும் ஒப்புக் கொண்டார்கள்.

மகிழ்ச்சியாக அங்கிருந்து சென்றான் செல்வன்.

ஒரு வாரம் கழிந்தது.

செல்வனின் மாளிகைக்கு வந்தான் ஈஃபண்டி. எண்பது கிராம் பொன்னை செல்வனிடம் கொடுத்தான்.

''உங்கள் பங்குப் பொன். எண்பது கிராம் இருக்கிறதா? எடை போட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்றான்.

அவன் தந்த பொன் கட்டிகளை உற்றுப் பார்த்தான் செல்வன். உரைகல்லில் வைத்துத் தேய்த்துப் பார்த்தான். எந்த ஏமாற்று வேலையும் இல்லை. எல்லாம் சொக்கத் தங்கம் என்பது அவனுக்கு புரிந்தது. மகிழ்ச்சியில் திளைத்த அவனால் ஏதும் பேச முடியவில்லை.

''நான் வருகிறேன்'' என்று புறப்பட்டான் ஈஃபண்டி. உணர்வு வரப் பெற்ற அவன் ''உன்னைப் போன்ற திறமைசாலியை நான் பார்த்ததே இல்லை. பொன்னை விதைக்கும் கலையைத் தெரிந்து

வைத்திருக்கிறாய். உன்னிடம் உள்ள இருபது கிராம் தங்கத்துடன் இந்த எண்பது கிராம் தங்கத்தையும் சேர்த்து விதை. அடுத்த வாரம் எண்ணூறு கிராம் தங்கம் தர வேண்டும். என்னை ஏமாற்றிவிடாதே'' என்றான்.

''என் மதிப்பிற்கு உரியவர் நீங்கள். உங்களை நான் ஏமாற்றுவேனா? அறுவடை முடிந்ததும் உங்களிடம் எண்ணூறு கிராம் தங்கம் இருக்கும். ஒரு கிராம் குறையாது'' என்ற ஈஃபண்டி அங்கிருந்து புறப்பட்டான்.

அடுத்த வாரம் எண்ணூறு கிராம் தங்கத்தை அவனிடம் கொடுத்தான் ஈஃபண்டி.

அதைப் பார்த்து ''நீ ஏன் நிறைய பொன்களை விதைக்கக் கூடாது? அறுவடை முடிந்ததும் ஏராளமான பொன் கிடைக்காதா?'' என்று கேட்டான்.

''எனக்கும் அப்படி விதைக்க ஆசைதான். அவ்வளவு பொன்னிற்கு நான் எங்கே போவேன்? நிறைய பொன் என்னிடம் கிடைத்தால் போதும். மலை போலப் பொன்னை அறுவடை செய்வேன்'' என்றான் ஈஃபண்டி.

பேராசை கொண்ட அவன் ''உனக்கு நான் நிறைய பொன் தருகிறேன்'' என்றான்.

தான் சேர்த்து வைத்திருந்த செல்வத்தை எல்லாம் திரட்டினான் அவன். இரண்டு பெட்டி நிறைய தங்கம் சேர்ந்தது. அந்தப் பெட்டிகளை ஈஃபண்டியிடம் கொடுத்தான்.

''என் வாழ்நாள் முழுமையும் பாடுபட்டுச் சேர்த்த தங்கம் இது. அடுத்த வாரம் இதே போல பதினாறு பெட்டித் தங்கம் வர வேண்டும். அதில் சிறிதும் குறையக் கூடாது'' என்றான்.

அந்தப் பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு அங்கிருந்து சென்றான் ஈஃபண்டி. அடுத்த வாரம் வந்தது.

தலை கவிழ்ந்தபடி அந்தச் செல்வனின் வீட்டிற்கு வந்தான் ஈஃபண்டி.

அவனை மகிழ்ச்சியுடன் வரவேற்றான் செல்வன்.

''சொன்னது போலவே வந்து விட்டாயே கழுதைகளின் மேல் ஏற்றப்பட்ட தங்கப் பெட்டிகள் மாளிகைக்கு வெளியே நிற்கின்றனவா? நான் அவற்றைப் பார்க்க வேண்டும். வா'' என்றான்.

''ஐயா! நான் என்ன செய்வேன்? எல்லாத் தங்கமும் போய்விட்டது'' என்று அழுதான் அவன்.

அதிர்ச்சி அடைந்த செல்வன் 'என்னை ஏமாற்றவா பார்க்கிறாய்? உன்னை என்ன செய்கிறேன்? பார்' என்று கோபத்துடன் கத்தினான்.


''ஐயா! நான் எந்த நேரத்தில் பொன்னை நட்டேனோ தெரியவில்லை. பொன் செடிகள் அனைத்தும் வெயிலில் கருகி விட்டன. உங்கள் தங்கம் போனது போலவே என் தங்கமும் போய்விட்டது. என்ன செய்வேன்?'' என்று அழுது புலம்பினான் அவன்.

கோபத்தின் உச்சிக்கே சென்றான் செல்வன்.

''பொய்யனே! எங்காவது நிலத்தில் பொன் விளையுமா? பொன் செடிகள் காய்ந்து கருகிவிட்டதாக யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்?'' என்று கத்தினான்.

''என் பேச்சை நீங்கள் நம்பவில்லை. நாம் ஒப்பந்தம் செய்த

போது சாட்சியாக இருந்த நீதிபதியை இங்கே அழையுங்கள். அவர் என்ன தீர்ப்பு தருகிறாரோ அதை ஏற்றுக் கொள்வோம்'' என்றான் அவன்.



நீதிபதியின் வீட்டிற்குச் சென்ற செல்வன் அவரை அழைத்து வந்தான்.

இருவரையும் பார்த்து அவர் ''யார் பொய் சொன்னாலும் எனக்குப் பிடிக்காது. கடுமையான தண்டனை கிடைக்கும்'' என்று கண்டிப்புடன் சொன்னார்.

அவரைப் பார்த்து ஈஃபண்டி ''நீதிபதி அவர்களே! நீங்கள்தான் நாங்கள் ஒப்பந்தம் செய்த போது சாட்சியாக இருந்தீர்கள். நிலத்தில் பொன் விளையும் என்பதை இப்பொழுது நம்பவில்லை என்கிறார். நம்பாவிட்டால் இவர் என்னிடமிருந்து எண்பது கிராம் பொன்னை ஏன் பெற்றுக் கொண்டார்? இரண்டாம் முறையாக எண்ணூறு கிராம் பொன்னையும் எப்படிப் பெற்றுக் கொண்டார்?

ஒரு வாரமாக மழை இல்லை. பொன் காய்க்கும் செடிகள் அனைத்தும் கருகிவிட்டன. இவர் என்னிடம் தந்த பொன்னும் மண்ணோடு மண்ணாகிவிட்டது. இதைச் சொன்னாலும் நம்ப மறுக்கிறார். நான் ஏமாற்றிவிட்டேன் என்கிறார். நீங்கள்தான் நல்ல தீர்ப்பு வழங்க வேண்டும்'' என்று பணிவுடன் சொன்னான்.

செல்வனைப் பார்த்தார் அந்த நீதிபதி. ஏதும் பேசாமல் அமைதியாக நின்றான் அவன்.

''வழக்கைத் தள்ளுபடி செய்கிறேன்'' என்ற அவர் அங்கிருந்து சென்றார்.

'ஐயோ! இப்படி ஏமாந்துவிட்டேனே' என்று வருந்தினான் செல்வன்.

ஊர் மக்களை எல்லாம் அழைத்தான் ஈஃஃபண்டி. அவர்கள் தந்த பொன்னைப் போலப் பத்துப் பங்கு திருப்பிக் கொடுத்தான். மீதியிருந்த பொன்னை மற்றவர்களிடம் கொடுத்தான்.

''இனி அந்தச் செல்வனின் கொடுமை இருக்காது. மகிழ்ச்சியாக வாழுங்கள்'' என்று தன் கழுதையில் அமர்ந்து கொண்டான்.

எல்லோரும் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் அவனை வழியனுப்பி வைத்தார்கள்.

**பேராசிரியர் சோதி**

### ◆ அரும்பதங்கள்

| | |
|---|---|
| பெருஞ்செல்வன் | - அதிக சொத்துக்களை தன்வசம் வைத்திருப்பவன் |
| பேராசை | - திருப்தி கொள்ளாத ஆசை |
| வேண்டினார் | - பணிவாகக் கூறுதல், கேட்டல் |
| திரட்டுதல் | - ஒன்று சேர்த்தல் |
| பாடுபட்டு | - மிகவும் கஷ்டப்பட்டு |

## கிரகித்தல் பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. செல்வந்தன் ஊர் மக்களுக்கு எவ்வாறு துன்பம் செய்தான்?
2. ஈஃபண்டி எப்படிப்பட்டவன்?
3. செல்வந்தனை ஏமாற்ற ஈஃபண்டி கூறிய யோசனை யாது?
4. செல்வந்தனுக்கும் ஈஃபண்டிக்கும் இடையே நடைபெற்ற உரையாடலை எழுதுக.
5. செல்வந்தனிடம் இருந்து பெறப்பட்ட தங்கங்களை ஈஃபண்டி என்ன செய்தான்?
6. இக்கதை உணர்த்தும் படிப்பினை யாது?

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

1. மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாக்கி தங்கம் விதைத்தால் தங்கம் விளையுமா என்ற கதையை மௌனமாக வாசித்து சாராம்சத்தைக் கூற வழிப்படுத்துக.
2. ஈஃபண்டியின் புத்திசாதுர்யத்தைப் பற்றி வகுப்பறையில் மாணவர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.
3. இக்கதையினை நாடகமாக நடித்துக் காட்டுவதற்கான களத்தை அமைத்துக்கொள்ள வழிகாட்டுக.

**பயிற்சி**

இப்பாடத்தில் வரும் பின்வரும் சொற்களுக்குரிய ஒத்த கருத்தையும், எதிர்க்கருத்தையும் எழுதுக.

| **சொல்** | **ஒத்த கருத்து** | **எதிர்க்கருத்து** |
|---|---|---|
| மகிழ்ச்சி | ................. | ................. |
| ஆசை | ................. | ................. |
| எளிது | ................. | ................. |
| கோபம் | ................. | ................. |
| மாளிகை | ................. | ................. |

**செயற்பாடு**

அறியப்படாத சீனத்துத் தெனாலி இராமனின் கதைகளை நூல் நிலையத்திலிருந்து பெற்று வாசித்து அதனைத் தெளிவாகக் கூற வழிப்படுத்துக.

# ஒலி வேறுபாட்டுச் சொற்றொகுதிகளை உச்சரித்தல்

தமிழ் எழுத்துக்களில் சில ஒலிப்பில் ஒத்த தன்மை உடையனவாய் இருப்பதால் அத்தகைய எழுத்துக்களை எவ்வாறு உச்சரிப்பது என்பது பற்றி இங்கு பார்ப்போம்.

ஒத்த ஒலியையுடைய தமிழ் எழுத்துக்கள் மூன்று தெகுதிகளாக வகுக்கப்படுகின்றன.

1. லகர, ளகர, ழகரங்கள் (ல,ள,ழ)
2. ரகர, றகரங்கள் (ர,ற)
3. னகர, ணகர, நகரங்கள் (ன,ண,ந)

## லகர, ளகர, ழகர

1. அலை - கடலின் அலை
   அளை - கறையான் புற்று
   அழை - அழைத்தல்

2. ஆல் - ஆலமரம்
   ஆள் - ஒரு மனிதன் (ஆள் அடையாள அட்டை)
   ஆழ் - கடல் ஆழம்

3. இலை - மர இலை
   இளை - இளைத்தல் (உடல் இளைத்தல்)
   இழை - சோக உணர்வு இழையோடியது.

4. வலி - நோ (வலித்தல்)
   வளி - காற்று
   வழி - பாதை

ஒத்து ஒலிப்பனவாகவும் மயக்கம் தருவனவாகவும் அமைந்த பின்வரும் சொற்களை அவற்றின் வேறுபாடு தோன்ற உச்சரிப்பதுடன் வாக்கியங்களில் அமைக்கவும் பழகிக்கொள்க.

1. அழகு - வடிவு, வனப்பு
   அளகு - பெண் பறவை
   அலகு - பறவையின் வாய், பறவையின் மூக்கு, பிரிவு

2. உழவு - உழுதல், பயிர்த்தொழில்
   உளவு - வேவு
   உலவு - உலவுதல், உலாவு

3. ஆழி - கடல், சக்கரம்
   ஆளி - யானை, சிங்கம்
   ஆலி - அமுதம், மழைத்துளி (ஆலங்கட்டி மழை)

4. குழவி - பிள்ளை
   குளவி - ஒரு வகை வண்டு
   குலவி - உறவாடி

## னகர, ணகர சொற்கள்

1. அன்னம் - சோறு, ஒருவகைப் பறவை
   அண்ணம் - மேல்வாய்

2. ஆன் - பசு
   ஆண் - ஆண் மகன்

3. ஆனி - மாதத்தின் பெயர்
   ஆணி - இரும்பாணி, எழுத்தாணி

4. என் - எனது
   எண் - இலக்கம்

5. கனி - பழம்
   கணி - கணக்கிடு

6. கான் - காடு
   காண் - பார்த்தல்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

7. நான் - தன்மை, ஒருமை
நாண் - கயிறு

8. பானம் - பருகும் நீர்
பாணம் - அம்பு

9. வன்னம் - நிறம்
வண்ணம் - அழகு, விதம்

10. வன்மை - திறமை
வண்மை - கொடை

## ரகர, றகர சொற்கள்

1. அரி - அறு, விஷ்ணு, அரித்தல், சிங்கம், வண்டு
அறி - தெரிந்துகொள்ளல்

2. அரம் - ஓர் ஆயுதம்
அறம் - நீதி

3. மரம் - விருட்சம்
மறம் - வீரம், தீயநெறி

4. இரை - ஒலியெழுப்பு, பறவை, மிருகங்களின் உணவு
இறை - வெளியேற்று, கடவுள், அரசன்

5. ஏரி - குளம்
ஏறி - மேலே தொற்றுதல்

6. கரை - ஓரம்
கறை - குற்றம்

7. மரித்தல் - இறத்தல்
மறித்தல் - தடுத்தல்

8. விரல் - கைவிரல்
விறல் - வலிமை

9. வரை - மலை, கீறு
வறை - வறுவல்

10. சிரை - மொட்டையடித்தல்
சிறை - மறியல்

**பயிற்சி**

*1. பின்வருவனவற்றில் இடம்பெறும் ரகர, றகரங்களை உரிய முறையில் உச்சரியுங்கள்:*

| | | | |
|---|---|---|---|
| இரத்தல் | - இறத்தல் | எரி | - எறி |
| உருக்கு | - உறுக்கு | நரை | - நறை |
| இரை | - இறை | இரக்கம் | - இறக்கம் |
| மருப்பு | - மறுப்பு | உரை | - உறை |
| கரை | - கறை | பாரை | - பாறை |

*2. பின்வருவனவற்றில் இடம்பெறும் னகர, ணகர, நகரங்களை உரிய முறையில் உச்சரியுங்கள்:*

| | | | |
|---|---|---|---|
| அண்ணம் | - அன்னம் | அரன் | - அரண் |
| என்பது | - எண்பது | கணம் | - கனம் |
| தண்மை | - தன்மை | ஆணி | - ஆனி |
| ஆணை | - ஆனை | ஏணம் | - ஏனம் |
| காண் | - கான் | காணல் | - கானல் |

*3. பின்வரும் சொற்களை வைத்து பொருள் விளங்கத்தக்கதாக வாக்கியங்களை அமையுங்கள்:*

| | | | |
|---|---|---|---|
| நாண் | - நான் | புணை | - புனை |
| மணம் | - மனம் | கரி | - கறி |
| விரை | - விறை | பணி | - பனி |
| பேண் | - பேன் | அருகு | - அறுகு |
| கரு | - கறு | நிரை | - நிறை |
| கணை | - கனை | வாணம் | - வானம் |
| அரை | - அறை | பரி | - பறி |


# 2 எலியும் சேவலும்

பாத்திரங்கள்: தாய் எலி, சேய் எலி, பூனை, சேவல்

**முதலாம் காட்சி**

***சேய் எலி:***

*வெய்யிற் கொடுமையம்மா! மேனி வேர்க்குதம்மா!*
*பைய உலாவிவரப் பரிந்துவிடை தாருமம்மா!*
*பொல்லாத வெப்பமம்மா! புழுங்கி யவியுதம்மா!*
*மெல்ல உலாவிவர விரும்பிவிடை ஈயுமம்மா!*



***தாய் எலி:***

*ஆசை மிகுந்த மைந்தா! அன்பான கண்மணியே!*
*மோசம் வரும் மகனே! முற்றத்திலும் போக வேண்டாம்.*
*பொல்லாத துட்டர் மைந்தா! புறத்தே பதுங்கி நிற்பர்*
*அல்லா தன புரிவார் ஐயா நீ போக வேண்டாம்.*

**சேய் எலி:**

*ஆண்பிள்ளை நானலனோ! அன்னாய் பயமுனக்கேன்
வீண்பிள்ளை யாக்காதே விடையருளிச் செய்யுமம்மா
கும்பிட்டேன் அன்னையுனைக் குறுக்கேநீ மறிக்காதே
வெம்பிப் புழுங்குமிங்கு வெளியேபோய் வருவேனம்மா*

**தாய் எலி:**

*மகனே! 'பெற்றமனம் பித்து; பிள்ளைமனம் கல்லு'
என்பதுபோலப் பிடிவாதமாய் நிற்கிறாய். சரி, நீ
நினைத்தபடி,*

*போய்வருவாய் என்மகனே!
புத்தியுடன் பத்திரமாய்
நீ திரும்பு மவ்வளவும்
நின்றுவழி பார்த்திடுவேன் - போய்வருவாய்.*

## இரண்டாம் காட்சி

**சேய் எலி:**

*தொங்கிச் சுவரிற் குதிப்பேன் - மிகத்
துரிதமாக ஓடித் துள்ளி மிதிப்பேன்
அங்கு மிங்குமாக நடிப்பேன் - சுவைத்
தருந்து முணவை மணந்து பிடிப்பேன்*

*ஆனந்த மான வெளிச்சம் - மகிழ்
வாக வுலாவுதற் கணுகுமோ வச்சம்
தேனுந்து மாமலர் வாசம் - வரும்
சில்லென்று தென்றலும் மிகுந்தவுல் லாசம்*

அடுக்களைப் புறத்திலே ஓடி - அங்கே
அப்பமும் வெண்ணெயு மருந்துவென் தேடி
எடுத்துக் கடித்துண்டு கொண்டு - மிக
இன்புறுவே னோடி யன்னையைக் கண்டு.

## மூன்றாம் காட்சி

**பூனை:**

மாஅஅயோ - மாஅஅயோ - மாஅஅயோ
மாஅஅயோ.......
முள்ளெலும்பு நோக முதுகு மிகவலிக்க
உள்ளம் நடுநடுங்க ஓங்கி யடித்தாளே -மாஅஅயோ

மெத்த வலிப்பெடுக்க மேனி நடுநடுங்க
மத்தா லடித்தாளே! மனமிரங்கா மாபாவி - மாஅஅயோ

மெய்யொடிய மத்தால் வெடுக்கென் றடித்தவள்தன்
கையொடிந்து மெத்தக் கலங்காளோ மாபாவி -
மாஅஅயோ

**சேவல்:**

பூனையரே! பூனையரே! புத்திமிகக் கலங்கிப்
பாதிவிழி மூடிப் பாடுகிறீர் காரணமென்ன?
காலைநக்கி நக்கியிரு கண்ணுமுக முந்துடைத்து
வாலைக் குழைத்தனுங்க வந்த வருத்தமென்ன?

**பூனை:**

சட்டியிற் காய்ச்சிய பாலைத் - தோய்த்துச்
சமையற்காரி வைத்தாள் உறியதன் மேலே
எட்டிப் பரண்மேலே தாவிக் - குதித்
தேறினேன் உறியினில் இனிதாக மேவி

*பார்க்கப் பார்க்கப் பசிமீறும் - பசும்*
*பாலின் மணத்தினால் வாய்மிக வூறும்*
*ஆர்க்குங் காணாமலங் கிருந்தே - வெகு*
*ஆனந்தமா யுண்டேன் அமுதொத்த விருந்தே*

*காண்பார்க ளென்று நினைத்தே - இரு*
*கண்களை மூடியென் நாவை நனைத்தே*
*மாண்பாக யானுண்ணும் போது - அங்கே*
*வந்தாளே அந்த மடைக்குல மாது*

*சத்தப் படாமலே வந்து - மேலே*
*தங்கி யருந்துங் களவினைக் கண்டு*
*மத்தா லடித்தாளே பாவி - உடல்*
*வலிக்குதே ஐயையோ! மறுகுதே யாவி*

**சேவல்:**

*ஐயா! களவு பொல்லாதது - இதை*
*அறியாது செய்ததால் வந்ததே தீது*
*மெய்யா யடாதுசெய் தோரே - மிக*
*வெம்பிப் படாது படுவார்கள் நேரே*

**பூனை:**

*பொல்லாது சூதொடு வாதும் - என்று*
*புத்தி சொல்லவந்தீர் போமினிப் போதும்*
*நல்லாய்ப் பசிக்குது காணும் - இனி*
*நானங்குப் போயிரை தேடுதல் வேணும்.*

## நாலாம் காட்சி

***பூனை:***

*ஒகோ! அங்கேயோர் எலி வருகிறது. அதை மெல்லப் பதுங்கியிருந்து பிடித்து உண்ண வேண்டும்.*

*எலியே நீ வருவாய் - எனக்*
*கிரையாகவே வருவாய்*
*நலியா தென்பசி நானுனைத் தின்னுவேன்*
*எலியே நீ வருவாய்*

**(பூனை எலியைப் பிடிக்கப் பாயப்போகும் நேரத்தில் சேவல் கூவுகின்றது)**

***சேவல்:***

*கொக்கறொக்கோஒ கொக்க றொக்கோ கூஉ*
*மிக்கவெயில் இக்கணமே போஒஒ*
*விண்ணும் மண்ணும் மூடியிருள் வாஅஅ*
*கொக்க றொக்கோஒ கொக்கறொக்கோ கூஉ*

**(எலி பயந்து தாயைக் கூப்பிட்டுக்கொண்டு ஓடுகிறது)**

***சேய் எலி:***

*ஓடிவருவாயம்மா உள்ளங் கலங்குதம்மா*
*வாடி நடுங்குகின்றேன் வந்துபயம் தீருமம்மா*
*மேவி ஒருவனம்மா விண்ணதிரச் சத்தமிட்டான்*
*ஆவி அகத்ததோ புறத்ததோ அன்னையே வாரும்*

**(தாயெலி வந்து சேய் எலியைத் தழுவிக்கொண்டு வினாவுகிறது)**

***தாய் எலி:***

*அன்பு மிகுந்த என் செல்வா - என்ன*
*ஆபத்து நேர்ந்த தறிந்திடச் சொல்வாய்*
*என்பு முறிந்திட வோடி - இங்கே*
*இரங்கியே வந்தனை யேங்கியே வாடி*

***சேய் எலி:***

*கொண்டையி லிரத்தந் தோய்ந்த*
*கூரிய வாளொன் றுண்டு*
*கண்டத்தி லிரண்டு கத்தி*
*கட்டியே தூங்கு மம்மா*
*சண்டைசெய் வீரன் போலச்*
*சடசட வென்ற டித்து*
*விண்டது பெரிய சத்தம்*
*மெய்ம்மறந் தறிவு சோர்ந்தேன்.*

*விடுவிடு என்றுகை தட்டி - அம்மா*
*வினாவிசைக் குறிபோற் கழுத்தை வளைத்துக்*
*கொடுமைசெய் கூற்றுவன் போல - வந்து*
*கூவினதே யொரு பொல்லாப் பிராணி*

*அல்லாது போனாலென் அம்மா - நான்*
*அருமை யானவோர் தோழனைக் கண்டு*
*நல்லசல் லாபஞ்செய் வேனே - அதை*
*நாசப் படுத்திய தேயப்பி ராணி*

(என்ன ஒரு அருமையான பிராணி. பஞ்சு போல மெதுமையான மயிர். பளிங்குபோல இரண்டு கண்கள். சத்தப்படாமல் என்னை இருந்து பார்த்துச் சிரித்து என்னோடு ஏதோ பேச எழும்பியது. அடா! அந்த நேரத்திலே செவ்வரத்தம் பூப்போலத் தலையையுடைய உந்தப் பொல்லாத பிராணி சத்தஞ் செய்து வெருட்டி விட்டதம்மா!)

(அதற்கு, தாயெலியின் பதில் இவ்வாறு அமைகிறது)

***தாய் எலி:***

*கண்மணி போன்ற மகனே - நீ*
*கண்டு பயந்ததனை நன்றுரை செய்யின்*
*வண்ண முடையசேவல் - ஒரு*
*வஞ்சகமு மில்லாநல்ல செஞ்சொற் சேவல்*

*மற்றைப் பிராணி மகனே! எம்மை*
*மறைவி லிருந்து பிடித்துண்டு மகிழும்*
*குற்ற முடைய பூனை - அதன்*
*கோலத்தினால் மயங்கல் சாலத் தவறே.*

(தாய் எலி சேய் எலிக்குப் புத்தி புகட்டுகிறது)

***தாய் எலி:***

*கண்மணி யனைய என்னரு மகனே!*
*உண்மகிழ் வாக உரைப்பது கேட்பாய்*
*வெளிப்புற வேடப் பொலிவினை நோக்கி*
*உள்ளகத் தெண்ணம் உரைத்திடப் போமோ?*

*பொல்லா மறவன் புதரினில் மறைந்தும்*
*மெல்லெனப் பறவையை வீட்டுதல் போல*
*நல்ல வேடம் தன்னிலே மறைந்து*
*அல்லன செய்யும் மாந்தரும் உளரே*

*கடுஞ்சொற் கூறி இனிமை பயக்கும்*
*நடுநிலை நண்பரும் பலருண் டதனால்*
*அகமும் புறமும் ஆராய்ந்து*
*தகுதி நண்பரைத் தான்கொளல் முறையே.*

**நவாலியூர் சோமசுந்தரப் புலவர்**

## ◆ அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| மேனி | - | உடல் |
| கூற்றுவன் | - | இயமன் |
| வீட்டுதல் | - | வீழ்த்துதல் |

### கிரகித்தல் பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. இவ்வுரையாடலில் பங்குகொள்ளும் பிராணிகளின் பெயர்களைத் தருக.
2. தாய் எலி, சேய் எலிக்கு கூறிய அறிவுரைகள் எவை?
3. சேய் எலி தனக்குள் கூறிக்கொண்டவை எவை?
4. சேவல் பூனைக்குக் கூறிய அறிவுரை யாது?
5. சேய் எலி கூறும் சேவலின் தோற்றத்தைக் கூறுக.
6. இப்பாடத்தின் மூலம் பெற்றுக்கொள்ளும் படிப்பினை யாது?

### மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

1. இவ்வுரையாடலை நடித்துக்காட்ட மாணவர்களை வழிப்படுத்துக.
2. இதுபோன்ற சிறு உரையாடல்களை எழுத மாணவர்களுக்கு வழிகாட்டுக.
3. இப்பாடப் பகுதியில் கூறப்பட்டுள்ள பிராணிகளின் இயல்புகள் பற்றி கலந்துரையாடச் செய்க.
4. இக்கதைப் பாடலை வசன நடையில் உரையாடலாக எழுத வழிப்படுத்துக.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

# ஒத்த கருத்துச் சொற்கள்

| | |
|---|---|
| அகிலம் | - பூமி |
| அவலம் | - பரிதாபம் |
| அனல் | - நெருப்பு |
| ஆபரணம் | - அணிகலன் |
| ஆயுள் | - வாழ்நாள் |
| ஆரம்பம் | - தொடக்கம் |
| ஆலோசனை | - கருத்து |
| இரை | - உணவு |
| இலட்சியம் | - குறிக்கோள் |
| தீர்மானம் | - முடிவு |
| கோபம் | - மூர்க்கம் |
| சந்தோஷம் | - மகிழ்ச்சி |
| சிநேகிதம் | - நட்பு |
| மேகம் | - முகில் |
| யுத்தம் | - போர் |

# 3 ஏமாந்த நாய்

ஓர் ஊரில் ஒரு உணவகம் இருந்தது. உணவகத்தின் பின்புறத்தில் சமையல்காரன் வடை சுட்டுக் கொண்டிருந்தான். காக்கா ஒன்று சன்னலில் காத்திருந்தது. சமையல்காரன் விறகு எடுப்பதற்காக கீழே குனிந்தான். காக்கா வடை ஒன்றைக் கொத்திக்கொண்டு பறந்தது.



அவ்வேளை ஓட்டல் முதலாளியும் வந்தார். சமையலாளனை ஏசினார். எவனாவது பையன் திருடியிருந்தால் அவர் பிடித்து அடித்திருப்பார். காக்காவை அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை.



காக்கா ஒரு வேப்பமரத்துக் கிளையில் உட்கார்ந்து, மற்றக் காகங்களையும் அழைத்து விருந்து போட எண்ணியது.

அதற்கிடையில் நாய் ஒன்று ஓடிவந்து காக்கைக்குக் கீழே உட்கார்ந்தது. அண்ணாந்து மேலே பார்த்தது. நாவை நீட்டியது.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

அதிலிருந்து நீர் சொட்டியது. காக்காவை ஏமாற்றி வடையைப் பறிக்க எண்ணியது.

''காக்கா, காக்கா, நீ அழகான காக்கா. குயில் குஞ்சைக் கூட நீ தான் அடைகாத்து குரல் சொல்லிக் கொடுப்பாயாம். ஒரு பாட்டுப் பாடுவாயா? கேட்க ஆவலாயிருக்கு.'' நாய் நயமாகக் கேட்டது.

காக்கா உடனே வடையைக் கால் நகங்களிடையே வைத்துப் பிடித்துக் கொண்டது.

''என் பாட்டி ஒருத்தி நரியிடம் ஏமாந்த கதையை நானும் கேட்டிருக்கிறேன். அதே போல தொடர்ந்து எங்களையெல்லாம் ஏமாற்றிவிடலாம் என்று எண்ணிவிடாதே. நான் பாடத்தான் போகிறேன். உனக்காக அல்ல. என் இனத்தவர் எல்லோரையும் அழைப்பதற்காக. நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து இந்த வடையை பகிர்ந்து சாப்பிடுவோம். உன்னைப் போல உன் இனத்தவரையே வெறுக்கிற சாதியல்ல நாங்கள். இந்த வடை உனக்குக் கிடைத்தால் நீயே சாப்பிட்டுவிடுவாய். இன்னொரு நாய் வந்தால் இந்த வடையை விட்டுவிட்டு உன் சகோதரனையே கடிப்பாய். உன்னைப் பார்க்கவே வெட்கமாயிருக்கு. ஓடிவிடு''

காக்கா சொல்லிக்கொண்டே எச்சமிட்டது. அது நாயின்மேல் விழுந்தது.

'கா...கா...கா..' என்று காக்கா கத்தியது.

பல காக்கைகள் எல்லாத் திசைகளிலிருந்தும் பறந்து வந்தன.

ஏமாந்த நாய் தலை குனிந்தபடி ஓடியது.

**செ. கணேசலிங்கன்**

◆ **அரும்பதங்கள்**

அழைத்தல் - கூப்பிடுதல்
எண்ணியது - நினைத்தது
ஆவலாயிருக்கு - ஆசையாயிருக்கு
எச்சம் - பறவைகளின் மலம்

## கிரகித்தல் பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. காகம் வடையைக் கொத்திச் சென்ற சந்தர்ப்பத்தைக் கூறுக.
2. வேப்பமரத்தில் அமர்ந்த காகத்தின் யோசனை யாது?
3. நாயின் வாயிலிருந்து நீர் சொட்டியதற்கான காரணம் யாது?
4. நாயின் திட்டம் என்ன?
5. காக்கையிடம் காணப்பட்ட நல்ல பழக்கம் ஒன்றையும் தீய பழக்கம் ஒன்றையும் கூறுக.
6. இறுதியில் நாய்க்கு என்ன நடந்தது?

## மொழி விருத்திச் செயற்பாடுகள்

1. ஏமாந்த நாய் எனும் இக்கதையை வகுப்பறையில் தெளிவாகக் கூறுவதற்கு வழிப்படுத்துக.
2. கதையினைத் தொனி பேதங்களுடன் வாசிக்க வழிப்படுத்துக.
3. ஏனைய மாணவர்கள் கதையை அவதானமாகக் கேட்க வழிப் படுத்துக.
4. காக்கை தான் அறிந்ததாகக் கூறப்படும் கதையினை வகுப்பறையில் மாணவர்கள் கூறுவதற்கான செயற்பாட்டை முன்னெடுக்குக.
5. இது போன்ற கதைகளை மாணவர்கள் வாசித்துக் கூறுவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்குதல் அவசியமாகும்.

# எழுத்துக்களின் வகை தொகையை அறிதல்

| உயிர் எழுத்துக்கள் | மெய்யெழுத்துக்கள் | உயிர்மெய் எழுத்துக்கள் |
|---|---|---|
| (பன்னிரண்டு) | (பதினெட்டு) | (இருநூற்றுபதினாறு) |
| 12 | 18 | 216 |

| | | |
|---|---|---|
| உயிர் எழுத்துக்கள் | - | 12 |
| மெய் எழுத்துக்கள் | - | 18 |
| உயிர்மெய் எழுத்துக்கள் | - | 216 |
| ஆய்த எழுத்து | - | 1 |
| மொத்தம் | = | 247 |

## உயிர் எழுத்துக்கள்

அ, ஆ. இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய பன்னிரண்டு எழுத்துக்களும் உயிர் எழுத்து எனப்படும். இவற்றை இரண்டாக பிரிக்கலாம்.

1. குறில் - அ, இ, உ, எ, ஒ
2. நெடில் - ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ

## மெய் எழுத்துக்கள்

இதனை மூன்றாகப் பிரிக்கலாம்.

1. வல்லின மெய் - க், ச், ட், த், ப், ற்
2. மெல்லின மெய் - ங், ஞ், ண், ந், ம், ன்
3. இடையின மெய் - ய், ர், ல், வ், ழ், ள்

## உயிர்மெய் எழுத்துக்கள்

உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் இணைந்து உருவாக்கப்படும் எழுத்துக்கள் உயிர்மெய் எழுத்துக்கள் எனப்படும். அவ்வாறு உருவாகும் எழுத்துக்களின் எண்ணிக்கை 216 ஆகும்.

உதாரணம்


| | | | | |
|---|---|---|---|---|
| க் | + | அ | = | க |
| க் | + | ஆ | = | கா |
| க் | + | இ | = | கி |
| க் | + | ஈ | = | கீ |
| ட் | + | உ | = | டு |
| ல் | + | ஓ | = | லோ |
| ந் | + | அ | = | ந |

இவ்வாறு 18 மெய்களும் 12 உயிருடன் சேர்ந்து உயிர்மெய் எழுத்துக்கள் உருவாகும்.

## ஆய்த எழுத்து - ஃ

# 4 குரங்குச் சேட்டை

மரங்களடர்ந்த காட்டில் வானளாவிய மரங்கள் பல, ஒன்றோடொன்று நெருங்கிப் பின்னிக் கிடக்கின்றன.



மரக்கிளை ஒன்றில் ஒரு பெரிய குளவிக் கூடு தொங்குகின்றது. அது ஒரு கருங்குளவிக் கூடு. அக்குளவிக் கூட்டை ஓர் ஆண் குரங்கு கண்டது. ஆண் குரங்குக்கு 'கடுவன்' என்று பெயர். அக்கடுவன் என்ன செய்தது தெரியுமா? குரங்குச் சேட்டையை நீங்கள் அறிவீர்களா? அக்கடுவன் ஒரு கல்லை எடுத்துக் குளவிக் கூட்டை நோக்கி வீசியது. அக் கல் குளவிக் கூட்டை உடைத்து விட்டது. குளவிக் கூட்டைக் கல்லால் எறிந்து உடைத்தால் என்ன நடக்கும்? நீங்கள் எப்போதாவது குளவிக் கூட்டை எறிந்து உடைத்திருக்கின்றீர்களா?

**கட்டிவிட்ட கருங்குளவிக் கூட்டை ஒரு கடுவன்**
**கல்லாலே எறிந்துடைக்கக் கலைந்தகடுங் குளவி**
**கொட்டிவிட அக்கடுவன் கூனிநடு நடுங்கல்**
**குளிர்சுரத்து முன்னர்வரு குலைப்பனது நடுங்கல்**

(இலங்கை வளம்)

இப்பொழுது என்ன நடைபெற்றது என்று பார்த்தீர்களா?

என்ன நடைபெற்றது? கல்லுப்போன திசை வழியே ஒரு குளவி வேகமாக வந்தது, அதைத் தொடர்ந்து பல குளவிகள் வேகமாய் வந்தன. பாவம்! கடுவன் குரங்குக்கு குளவிகள் கொட்டிவிட்டன.

அது கூனிக் கொண்டு நடுநடுங்குகின்றது. அந்த நடுக்கம் எப்படிப்பட்டது என்பதற்கு இப்பாடலில் ஓர் உவமானங் கூறப்பட்டிருக்கின்றது.

உங்களில் யாருக்காவது 'மலேரியா' காய்ச்சல் வந்திருக்கின்றதா? அல்லது அந்த காய்ச்சல் வந்தவர்களைக் கண்டிருக்கின்றீர்களா? அக்காய்ச்சலுக்குக் குலைப்பன் காய்ச்சல் என்றும், குளிர் காய்ச்சல் என்றும் பெயர்கள் உண்டு. அது தொடங்கும்போது குளிர் அதிகமாய் இருக்கும். ஆகையால் அக்காய்ச்சல் தொடங்கும்போது குலைப்பன் நடுக்கம் இருக்கும். அந்த நடுக்கமும், இந்தக் கடுவனின் நடுக்கமும் ஒரே மாதிரியானவை என்று இப்பாடலில் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்கள் ஒரு நல்ல உவமானம் கூறியிருக்கின்றார்.

இன்னொருமுறை இப்பாடலைப் படித்துப் பாருங்கள். இது ஒரு குரங்கு பட்ட பாடு. இன்னும் சில குரங்குகள் படுகிற பாட்டை இனிப் பார்ப்போம்.

ஒரு பெரிய மருத மரம். மிகவும் விசாலித்து வளர்ந்திருக்கிறது. மந்திகள் மருதமர நிழலில் குந்திக் காவடியெடுத்து ஆடுகின்றன. அந்தக் குரங்குகளின் கழுத்தில் இருப்பன யாவை? அவைகள் ஏன் துள்ளித் துள்ளி விளையாடுகின்றன? ஏதோ சப்தமும் கேட்கிறதே! முதலில் தா, திமி, திமித்தி என்ற சப்தம்! அதைத் தொடர்ந்து வாத்தியங்களின் ஓசை போன்ற சப்தம், இவைகள் என்ன சப்தங்கள்? ஓகோ! அம் மந்திகள் காவடியாடுகின்றன, அக்காவடியாட்டத்தைப் பற்றி நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்கள் என்ன சொல்லுகிறார் பாருங்கள்!

மாமருதின் நீழலிலே மந்தியினம் குந்தி
  மாதவ ரெனப்பெரிய காவடி எடுத்து
தா, திமி, திமித்தியென ஆடிவர நரிகள்
  சங்கினொடு காகளம் இசைந்துவரு மன்றே.

காகளம் என்பது ஒரு வாத்தியம். நரிகளின் ஊளைச் சப்தம் சங்கு காகள வாத்தியங்கள் என்பவற்றின் ஓசைபோல இருக்கிறதாம். எப்படியிருக்கிறது குரங்குகளின் காவடி! இவையெல்லாம் குரங்குச் சேட்டைகள்.

### ◆ அரும்பதங்கள்

வானளாவிய - மிகவும் உயரமாக வளர்ந்த
கடுவன் - ஆண் குரங்கு
கொட்டுதல் - குளவிகள் கடிப்பதை இவ்வாறு கூறுவர்
மந்தி - பெண் குரங்கு
சப்தம் - ஒலி

#### கிரகித்தல் பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. மரத்தில் தொங்கிய குளவிக் கூட்டின் பெயர் என்ன?
2. ஆண் குரங்கையும், பெண் குரங்கையும் எவ்வாறு அழைப்பர்?
3. குரங்கின் சேட்டையாகக் கூறப்படும் விடயம் யாது?
4. குரங்கின் சேட்டைக்குக் கிடைத்த பரிசு யாது?
5. மலேரியாக் காய்ச்சலை வேறு எவ்வாறு கூறுவர்?
6. குரங்கின் நடுக்கம் எதனுடன் தொடர்புபடுத்திக் கூறப்படுகின்றது?

#### மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

1. குரங்குச் சேட்டை கதையினை எழுத்துக்கள், சொற்கள் என்பவற்றிற்கு ஏற்ப அழுத்தம் கொடுத்து வாசிக்கச் செய்க.
2. மாணவர்கள் தனித்தனியே கதையினை சுவாரசியமாகக் கூற வழிப்படுத்துக.
3. கதையில் மாணவர்கள் நயந்த பகுதியைக் கேட்டு ஏனையோருக்கும் கூறச் செய்க.

**ஆக்கத்திறன் செயற்பாடு**

முடிவுறாத கதைப்பகுதி ஒன்றினை மாணவர்களுக்கு வழங்கி அதனை முழுமையாக எழுதி முடிப்பதற்கான செயற்பாட்டை வழங்குக.

**மேலதிகச் செயற்பாடு**

1. குளவி கொட்டினால் செய்யப்பட வேண்டிய முதலுதவிகளைக் கேட்டறிக.

2. பின்வரும் சொற்களுக்கான ஒத்த சொற்களை எழுதுக.

    1. காடு
    2. சேட்டை
    3. திசை
    4. விசாலம்
    5. கொட்டுதல்

## எதிர்க்கருத்துச் சொற்கள்

| | | |
|---|---|---|
| உள்ளே | - | வெளியே |
| பொருத்தமான | - | பொருத்தமற்ற |
| நீதி | - | அநீதி |
| கோபம் | - | சாந்தம் |
| ஆரம்பம் | - | கடைசி |
| நியாயம் | - | அநியாயம் |

# சொற்றொடர் வாக்கியம் என்பவற்றின் வகையை அறிதல்

## சொற்றொடர்

சொற்றொடர் என்பது வாக்கியத்தின் ஓர் உறுப்பு ஆகும். இது ஒரு சொல்லாகவும், சொற்களின் தொகுதியாகவும் அமையலாம்.

எடுத்துக்காட்டு

பூ- பெயர்த்தொடர்
படித்தான் - வினைமுற்றுத்தொடர்

வாக்கியங்களிலும் சொற்றொடரை நாம் அவதானிக்கலாம்.

எடுத்துக்காட்டு

**அம்மா சோறு சமைத்தாள்.**

இங்கு அம்மா என்பது எழுவாய்த்தொடர்

சோறு சமைத்தல் என்பது வினைமுற்றுத்தொடர்

***பயிற்சி***

பின்வருவன எவ்வகைச் சொற்றொடர் எனக்கூறுக.

*(மரம், வந்தான், விழுந்தது, படித்தான், பறக்கிறது, மழை, பூமி, புத்தகம், வீடு, எழுதுகிறாள், அழுகிறது)*

## வாக்கியம்

சொற்கள் ஒரு குறிப்பிட்ட ஒழுங்குமுறைக்கு ஏற்ப ஒன்றுடன் ஒன்று அமைப்பு ரீதியாக இணைந்து முழுமையான பொருள் தருமாயின் அதனை வாக்கியம் என்பர்.

எடுத்துக்காட்டு

★ கவிதை அக்கா எழுதிக் கொண்டிருக்கின்றாள் ஒரு

(இது பொருள் உள்ள வகையில் அமையவில்லை. எனவே இது ஒரு பூரண வாக்கியம் அல்ல)

இதனைப் பொருள் புலப்படும் வகையில் முறையாக அமைக்கும் போது இவ்வாறு அமைகிறது.

**அக்கா ஒரு கவிதை எழுதிக்கொண்டிருக்கிறாள்.**

## வாக்கியங்களின் வகைகள்

வாக்கியம் என்றால் என்ன என்பதை ஞாபகப்படுத்திக்கொள்க.

இனி வாக்கியங்களின் வகைகளைப் பார்க்கும்போது,

அவற்றின் அமைப்பு அடிப்படையிலே பின்வருமாறு வகைப் படுத்தலாம்.

1. தனி வாக்கியம்
2. கூட்டு வாக்கியம்
3. கலப்பு வாக்கியம்

## தனி வாக்கியம்

ஒரு வாக்கியத்தில் ஓர் எழுவாயும், ஒரு பயனிலையும் காணப்படுமாயின் அது தனி வாக்கியமாகும்.

1. கிளி பறக்கின்றது.
2. ஆசிரியர் வகுப்பறைக்கு வருகிறார்.
3. புலி வேகமாக பாய்ந்தது.

மேலுள்ள வாக்கியங்கள் அனைத்தும் ஓர் எழுவாயினையும் ஒரு பயனிலையையும் கொண்டு அமைந்திருப்பதைக் காணலாம்.

**பயிற்சி**

தனி வாக்கியத்திற்கு ஐந்து உதாரணங்கள் எழுதுக.

### வாக்கியங்களின் இயல்பை அறிவோம்

1. வாக்கியங்கள் பெரும்பாலும் எழுவாய், பயனிலை என்ற இரு அம்சங்களைக் கொண்டு அமைதல் அவசியமாகும்.

எடுத்துக்காட்டு

சூரியன் உதிக்கிறது.

2. அவ்வாறு அமையும்போது திணை, பால், எண், இடம், காலம் என்ற இலக்கணக் கூறுகளின் தொடர்பினை அது பெற்றிருக்கும். இவைகளே வாக்கியங்களின் இயல்பாகும். இவ்வாறான வாக்கிய இயல்புகளை வைத்துக்கொண்டு வாக்கியங்களை இயைபுற எழுதுதல் அவசியமாகும்.

## வாக்கிய உறுப்புக்கள்

### 1. எழுவாய்

பயனிலையோடு திணை, பால், எண், இட உறவு கொண்டுள்ள பெயர்ச் சொல்லே எழுவாய் என்கிறோம்.

எடுத்துக்காட்டு

*1. அண்ணன் வந்தான்.*
*2. காகம் கரைந்தது.*
*3. தேனீக்கள் பறந்தன.*

இங்கு எழுவாயைக் கண்டுபிடிப்பதற்கு யார், எது, எவை என்ற வினாக்களில் பொருத்தமான வினாவை வினவுகையில் கிடைக்கப்பெறும் விடை எழுவாயாகும்.

எடுத்துக்காட்டு

*1. யார் வந்தான்?*
*2. எது கரைந்தது?*
*3. எவை பறந்தன? என்ற கேள்விக்கு விடையாக அமைவது* ***அண்ணன், காகம், தேனீக்கள்*** *என்பனவாகும்.*

எனவே இவைகளே மேலுள்ள வாக்கியங்களின் எழுவாய்கள் ஆகும்.

யார் என்பதற்குப் பதிலாக எவை? எது? என்ற வினாவையோ, எது? என்பதற்கு பதிலாக யார்? எவை? என்ற வினாவையோ, எவை? என்பதற்கு பதிலாக யார்? எது? என்பதையோ வினவ முடியாது.

## 2. பயனிலை

ஒரு வாக்கியத்தின் கருத்து முற்றுப்பெறும் இடம் பயனிலை ஆகும்.

பயனிலை பெரும்பாலும் வினைச் சொற்களாகவே அமையும்.

★ ரவி ஓடினான்.

பெயர்ச் சொற்களும் பயனிலையாக வருவதுண்டு

★ பாரதியார் சிறந்த புலவர்.

மேலே கூறப்பட்ட வாக்கியங்களில் ரவி, பாரதியார் என்பன எழுவாய்களாகும். இவற்றின் கருத்தை முற்றுப்பெறச் செய்வது ஓடினான், புலவர் என்பவைகளாகும். எனவே ஓடினான், புலவர் என்பன பயனிலைகளாகும்.

**பயிற்சி**

எழுவாய், பயனிலை அடங்கிய ஐந்து வாக்கியங்களை எழுதுக.

## 3. செயப்படுபொருள்

ஒரு வாக்கியத்தில் வினைச் சொல்லின் செயற்பாட்டிற்கு உட்படும் பெயர்ச்சொல் செயப்படுபொருளாகும்.

★ நான் சோறு சாப்பிட்டேன்.

இங்கு சாப்பிட்டேன் என்ற சொல் பயனிலை ஆகவும் வினைச்சொல் ஆகவும் அமைகிறது. இங்கு வினைச் சொல்லின் செயற்பாட்டில் உட்பட்டது சோறு என்பதால் அதனைச் செயப்படுபொருள் என்கிறோம்.

செயப்படுபொருளைக் கண்டுபிடிப்பதற்கு எதை என்ற வினாவை அவ்வாக்கியத்தின் பயனிலையோடு சேர்த்து வினவும்போது விடையாக வருவது செயப்படுபொருள் என இலகுவாக காணலாம்.

★ தம்பி படம் வரைந்தான்.

இங்கு எதை வரைந்தான்? என வினவும்போது படம் என்பது விடையாக வருகிறது. எனவே படம் செயப்படுபொருளாகும்.

***பயிற்சி***

*எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பன அமையுமாறு பத்து வாக்கியங்கள் எழுதுங்கள்.*

# 5 தந்தை மகனுக்கு எழுதிய கடிதம்

***அ. தமிழ்ச்செல்வன்,***
***இல: 91, வட்ட வீதி,***
***கலுதாவளை,***
***மாத்தளை.***
***20.10.2014.***

அன்பு மகன் அருள்செல்வனுக்கு,

நல்வாழ்த்துக்கள்! இங்கு நானும் உன் அம்மாவும் நலம். அங்கு உன்னுடைய நலத்தையும் உன் நண்பர்கள் நலத்தையும் அறிய விழைகிறேன். உன்ஆசிரியப்பெருமக்களுக்குஎன்வணக்கத்தைக்கூறு.

கடந்த வாரம், நீ எழுதிய மடல் கிடைத்தது. மகிழ்ச்சி. நீ காலாண்டுத் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற்று, வகுப்பில் முதன்மை பெற்றதை அறிந்து நானும், உன் அம்மாவும் மகிழ்ச்சியடைகிறோம். உனக்கு எங்கள் பாராட்டுக்கள்.

நீ தங்கியிருக்கும் விடுதி பற்றி உன் மடலில் குறிப்பிட்டிருந்தாய். அங்கு உனக்குச் சுவையான உணவு வழங்கப்பெறவில்லை என்றும் எழுதியிருந்தாய். உணவு உண்பது நாவின் சுவைக்கு அன்று. நல்ல உடல் வளர்ச்சிக்கே. அதுபற்றி உனக்குச் சில கருத்துக்களைத் தெரிவிப்பதே இம்மடலின் நோக்கமாகும்.

செல்வா! நீ ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். நாம் உணவு உண்பது எதற்காக? நம் உடலை வளர்ப்பதற்காக. நாம் உண்ணும் உணவில் உள்ள சத்துப்பொருள் நம் உடலை வளர்க்கிறது. எனவே, சத்துள்ள உணவை உண்டு உடலை வளர்க்க வேண்டும்.

நீ தங்கியிருப்பது மாணவர் விடுதி. அங்கே நூற்றுக்கணக்கில் மாணவர் இருப்பர். மாணவர் அனைவருக்கும் அவரவர் விருப்பத்திற்கேற்ப உணவைச் செய்துகொடுக்க முடியுமா? முடியாதல்லவா? நாம் உண்ணும் உணவு வயிற்றை நிரப்புவதற்கு மட்டுமன்று. உடலுக்கும் உடல்நலம் பயக்க வேண்டும். இதயம், நுரையீரல், மூளை முதலான உள்ளுறுப்புகளும் கை, கால், கண், மூக்கு, செவி முதலான வெளியுறுப்புகளும் நல்ல வளர்ச்சி பெற்று இயங்குவதற்கு நாம் உண்ணும் உணவு பயன்பட வேண்டும். நல்ல ஊட்டச்சத்து நிறைந்து உடல் வளர்ச்சிக்கு உகந்ததாக இருக்கும் உணவையே 'சரிவிகித உணவு' என்பர். அத்தகைய உணவு உடல் வளர்ச்சிக்கும், உறுப்புகளின் முறையான இயக்கத்துக்கும் துணை செய்யும். அது நோய்நொடியிலிருந்து உடம்பைக் காக்கும். தேவையான ஊட்டச்சத்துக்கள் சரியான அளவிலும், சரியான விகிதத்திலும் கலந்து இருப்பதால் அதனைச் சரிவிகித உணவு என்று கூறுகின்றனர்.

உடல் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச் சத்துக்களை ஐந்து வகையாகப் பிரிப்பர். அவை மாவுச் சத்து, புரதச் சத்து, கொழுப்புச் சத்து, உயிர்ச் சத்துகள், தாது உப்புகள் என்பன. இவை அனைத்தும் மிகவும் இன்றியமையாதன. புரதச்சத்து, திசுக்களைப் புதுப்பித்து உடல் வளர்ச்சிக்கு உதவுகிறது. கொழுப்பும், மாவுச் சத்தும் உடலுக்கு வேண்டிய ஆற்றலைக் கொடுக்கின்றன. தாது உப்புகளும் உயிர்ச் சத்துகளும் நோய் எதிர்ப்புச் சக்தியையும் பாதுகாப்பையும் அளிக்கின்றன.

மகனே! நாவுக்குச் சுவையான உணவையே விரும்பாமல் சரிவிகித உணவையே விரும்பு. இதை உன் நண்பர்களுக்கும் எடுத்துக்கூறு. நோயின்றி வாழலாம்.

நான் உன் விடுதிக்கு வந்திருந்தபோது உங்களுக்கு வழங்கப் பெறும் உணவை உண்டேன். அவர்கள் வழங்குவது சரிவிகித உணவு என்பதை அறிந்தேன். ஆனால் நீ, உண்பதில் குறையேதும் வைக்காமல்

நன்கு உண்டு மகிழ்க. உடல் நலம் பெறுக. உடலைப் பாதுகாப்பவன், உயிரைப் பாதுகாப்பவன் ஆவான். உடல் நலமாக இருந்தால்தான் கல்விகற்க முடியும். 'சுவரை வைத்துத்தானே சித்திரம் எழுத முடியும்?' நீ சிறந்த கல்வியைப் பெற முதலில் உன் உடம்பைப் போற்றுக! சத்துமிக்க சரிவிகித உணவை உண்டு மகிழ்க! பிற பின்னர்,

**அன்புத் தந்தை,**
**தமிழ்ச் செல்வன்.**

### ◆ அரும்பதங்கள்

| | |
|---|---|
| விழைகிறேன் | - ஏதேனும் விடயம் பற்றிக் கூற விரும்புகிறேன். |
| மடல் | - கடிதம் |
| தேர்வு | - மாணவர்களுக்கு நடத்தப்படும் பரீட்சை |
| விடுதி | - மாணவர்கள் தங்கியிருந்து படிக்கும் இடம் |
| சரிவிகித உணவு | - உடல் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து சக்திகளும் கொண்ட உணவு |

**கிரகித்தல் பயிற்சி**

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. இக்கடிதத்தை எழுதியவரின் பெயர், விலாசம், திகதி என்பவற்றைக் குறிப்பிடுக.
2. பெற்றார்கள் மகிழ்ச்சியடைவதாக எழுதியதன் காரணம் யாது?
3. இக்கடிதத்தில் கூறப்படும் மனிதனின் உள் உறுப்புகள், வெளியுறுப்புகள் என்பவற்றைப் பெயரிடுக.
4. உடல் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச் சத்துக்கள் எவை?
5. இக்கடிதத்தில் இடம்பெறும் முதுமொழி யாது?

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

1. இக்கடிதத்தினை வாசித்து அதன் உள்ளடக்கம் பற்றி முன்வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்க.
2. நாம் விடுதியில் தங்கிக் கல்வி கற்கும் ஒருவராக கருத்திற் கொண்டு, எந்த விடயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் எனக் கலந்துரையாடுக.
3. உடல் நலத்தை மையமாகக்கொண்ட பழமொழிகளை சேகரிக்குக.
4. மாணவர்கள் தம்மை விடுதியில் தங்கியிருப்பதாகக் கருதி, கற்றலுக்குத் தேவையான பொருட்களைக் கேட்டுத் தந்தைக்கு ஒரு கடிதம் எழுதுக.
5. இதுபோன்ற உறவுமுறைக் கடிதங்களைத் தேடிப்பெற்று வாசித்து அவற்றின் உள்ளடக்கங்களைக் கலந்துரையாடுக.

**பயிற்சி**

பின்வரும் சொற்களைத் தெளிவாகவும் சத்தமாகவும் வாசிக்க வழிப்படுத்துக.

1. விழைகிறேன்
2. நூற்றுக்கணக்கு
3. இதயம்
4. நுரையீரல்
5. மூளை
6. உள்ளுறுப்புகள்
7. வெளியுறுப்புகள்
8. ஊட்டச்சத்து
9. சரிவிகித உணவு
10. மாவுச்சத்து
11. கொழுப்புச்சத்து
12. உயிர்ச்சத்து
13. தாது உப்புக்கள்

# வாக்கிய இயைபு

வாக்கியங்களில் எழுவாயாக அமையும் பெயர்ச் சொல்லுக்கும், பயனிலையாக அமையும் வினைச் சொல்லுக்கும் இடையே திணை, பால், எண், இடம், காலம் என்ற இலக்கணக் கூறுகளின் அடிப்படையில் ஒரு தொடர்பு காணப்படுவதையே வாக்கிய இயைபு என்கிறோம்.

## எழுவாய் பயனிலை இயைபுடன் எழுதுதல்

எடுத்துக்காட்டு

1. கண்ணன் வந்தான்.
2. மாலதி வந்தாள்.
3. கிளி பறந்தது.

இங்கு எழுவாய், பயனிலை என்பவற்றுக்கிடையே இயைபான தொடர்பு காணப்படுவதைக் காணலாம். அதாவது வந்தான், வந்தாள், பறந்தது என்பவற்றுடன் கண்ணன், மாலதி, கிளி என்பன நேரடியாக இயைபு கொண்டுள்ளதை அவதானிக்கலாம்.

**செயற்பாடு**

ஒரு வாக்கியத்தில் குறைந்தது மூன்று சொற்களையேனும் உள்ளடக்கி எழுவாய், பயனிலை இயைபுபட ஐந்து வாக்கியங்கள் எழுதுக.

## திணை, பால், எண், இடம், காலம் என்பன இயைபுபட எழுதுதல்

### திணை

திணை இருவகைப்படும்

1. உயர்திணை 2. அஃறிணை

பொதுவாக மனிதரைச் சுட்டும் பெயர்கள் உயர்திணை என்றும் மனிதர் அல்லாத ஏனைய உயிருள்ள உயிரற்ற பொருள் அனைத்தையும் சுட்டும் பெயர்கள் அஃறிணை என்றும் வகைப்படுத்தப்படும்.

எடுத்துக்காட்டு

கமலன் வந்தான் - உயர்திணை வாக்கியம்
குருவி பறந்தது - அஃறிணை வாக்கியம்

**செயற்பாடு**

இரு திணைக்கும் ஏற்ற வகையில் எழுவாய், பயனிலை இயைபுபெற ஐவைந்து வாக்கியங்கள் எழுதுக.

## பால்

பெயர்ச்சொற்கள் பால் அடிப்படையில் ஐந்து வகைப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1. ஆண்பால் | - தம்பி | - உயர்திணை | - ஒருமை |
| 2. பெண்பால் | - அரசி | - உயர்திணை | - ஒருமை |
| 3. பலர்பால் | - புலவர்கள் | - உயர்திணை | - பன்மை |
| 4. ஒன்றன்பால் | - பசு | - அஃறிணை | - ஒருமை |
| 5. பலவின்பால் | - பசுக்கள் | - அஃறிணை | - பன்மை |

எடுத்துக்காட்டு

| | |
|---|---|
| தம்பி எழுந்தான் | - ஆண்பால் வாக்கியம் |
| அரசி வருகிறாள் | - பெண்பால் வாக்கியம் |
| புலவர்கள் பாடுகின்றனர் | - பலர்பால் வாக்கியம் |
| பசு கதறுகிறது | - ஒன்றன்பால் வாக்கியம் |
| பசுக்கள் கதறுகின்றன | - பலவின்பால் வாக்கியம் |

**செயற்பாடு**

ஐம்பாலுக்கும் ஏற்ற வகையில் எழுவாய், பயனிலை இயைபு பெற ஐந்து வாக்கியங்கள் அமைக்குக.

## எண்

ஒருமை, பன்மை என்ற அடிப்படையில் பெயர்ச்சொற்களை வகைப்படுத்தல் எண் எனப்படுகின்றது.

ஒன்றைக் குறிக்கும் பெயர் ஒருமை.
ஒன்றிற்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது பன்மை.

எடுத்துக்காட்டு

1. பூ மலர்ந்தது - ஒருமை வாக்கியம்
2. நட்சத்திரங்கள் மின்னின - பன்மை வாக்கியம்

**செயற்பாடு**

ஒருமை, பன்மைக்கு ஏற்றவாறு எழுவாய், பயனிலை இயைபுபெற ஐந்து வசனங்கள் அமைக்குக.

## இடம்

தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்கள் மூவிடப் பெயர்களாகும்.

தன்மை - பேசுவோனைச் சுட்டும் பெயர்
முன்னிலை - கேட்போனைச் சுட்டும் பெயர்
படர்க்கை - பேசப்படும் பொருளைச் சுட்டும் பெயர்

எடுத்துக்காட்டு

நான் - வருகிறேன் - தன்மை ஒருமை
நாம், நாங்கள் - வருகிறோம் - தன்மைப் பன்மை
நீ - வருகிறாய் - முன்னிலை ஒருமை

நீங்கள் - வருகிறீர்கள் - முன்னிலை பன்மை
அவன் - வருகிறான் - படர்க்கை ஒருமை

அவர்கள் - வருகிறார்கள் - படர்க்கைப் பன்மை
அது - வருகிறது - படர்க்கை ஒருமை
அவை - வருகின்றன - படர்க்கைப் பன்மை

## காலம்

ஒருவினை / செயல் நடைபெற்ற காலத்தை உணர்த்தப் பயன்படுவது காலம் ஆகும்.

காலம் மூன்று வகைப்படும்.

1. இறந்த காலம் - செயல் நடைபெற்று முடிவடைந்தது
2. நிகழ்காலம் - செயல் நடைபெற்றுக்கொண்டிருப்பது
3. எதிர்காலம் - செயல் நடைபெற இருப்பது

**பயிற்சி**

| வினை / செயல் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| படி | ................. | படிக்கிறான் | .................. |
| எழுது | எழுதினான் | .................. | ................. |
| ஓடு | .................... | .................... | ஓடுவான் |
| பாய் | .................... | பாய்கிறான் | .................... |
| நில் | நின்றான் | ................. | .................... |

**பயிற்சி**

*1. நான் பாடம் படிக்கிறேன்.*
*2. நீங்கள் எங்கே போகிறீர்கள்?*
*3. மாலதி கவிதை எழுதினாள்?*
*4. நிலவு பிரகாசமாய்த் தெரிகிறது.*
*5. பறவைகளின் சத்தம் கேட்கிறது.*

இவ்வாக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| எழுவாய் | பயனிலை | திணை | பால் | எண் | இடம் | காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |
| 4. | | | | | | |
| 5. | | | | | | |

**செயற்பாடு**

மேற்போன்றவாறு இருதிணை ஐம்பால், மூவிடம், எண், மூன்று காலமும் அமையத்தக்க வாக்கியங்களை அமைக்க வழிப்படுத்துக.

# 6 பறவைகள் பலவிதம்

*(தமிழ்நிலா - காகம், தேன்மொழி - கிளி, அன்பரசன் - வாத்து, இளவழகன் - மயில் போல வேடமணிந்து நிற்கிறார்கள். அறிவண்ணன் வருகிறார்)*

*அறிவண்ணன் :-* என்ன? எல்லோரும் இன்று திடீரெனப் பறவைகள் ஆகிவிட்டீர்கள்?

*தமிழ்நிலா:-* நாங்கள் ஒரு சிறுவர் நாடகம் போடப் போகிறோம்.

*(நால்வரும் நாலு பறவை மாதிரி அசைகிறார்கள். சத்தமிடுகிறார்கள்)*

*தேன்மொழி:-* இன்று நாங்கள் செய்யப்போகிற வெள்ளுடுப்பு ஒத்திகையைப் பார்த்து நீங்கள் அபிப்பிராயம் சொல்ல வேண்டும்.

*அறிவண்ணன்:-* மெத்த மகிழ்ச்சி! யார் இந்த நாடகத்தை எழுதி நெறிப்படுத்தியது?

*அன்பரசன்:-* இளவழகன்தான் நாடக ஆசிரியர். நெறியாளர். பிரதான நடிகர் எல்லாம்.

*இளவழகன்:-* *(சிறிது தயங்கி வெட்கப்பட்டு)* ஏதோ சும்மா ஒன்று செய்து பார்ப்போம் என்று.

*அறிவண்ணன்:-* அது நல்ல முயற்சி. ஒய்வு நேரத்தில் நல்ல பயனுள்ள வேலை செய்கின்றீர்கள். பார்க்கச் சந்தோஷமாக இருக்கின்றது. ஒப்பனை எல்லாம் முடிந்ததா?


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

தமிழ்நிலா:- இன்னும் கொஞ்ச வேலை இருக்கிறது.

தேன்மொழி:- அதுவரை நாங்கள் இந்தப் பறவைகளைப் பற்றியே அண்ணாவிடமிருந்து ஏதும் பிடுங்கலாம்.

அறிவண்ணன்:- பறவைகளுக்கு எத்தனை கால்?

அன்பரசன்:- இதென்ன? பால்குடிப் பிள்ளையைக் கேட்கும் கேள்வி! இரண்டுகால் தானே?

இளவழகன்:- இல்லை நாலு கால்.

அறிவண்ணன்:- பார்த்தீர்களா? உங்களுக்குள்ளேயே கருத்து வேறுபாடு வந்துவிட்டது. பறவைகள் பறத்தலுக்காகச் சிறப்படைந்த ஊர்வன. அவற்றின் முன்னங் கால்களே இறக்கைகளாக மாறியுள்ளன. ஆகவே அவற்றுக்கு நாலு கால் என்று இளவழகன் சொன்னது அர்த்தமுள்ள பதில்தான்.

(தமிழ்நிலா, தேன்மொழி காதில் ஏதோ இரகசியம் சொல்கிறாள்)

அறிவண்ணன்:- என்னவாம் தமிழ்நிலா?

தேன்மொழி:- கிளிக்கு பல்லு இல்லையாம். நடிக்கும்போது பல்லைக் காட்டிச் சிரிக்காமல் நடிக்கட்டாம்.

(இருவரும் சிரிக்கிறார்கள். ஏனையோரும் சிரிக்கிறார்கள்)

அறிவண்ணன்:- பறவைகளுக்குப் பொதுவாகப் பல் இல்லை என்பது உண்மைதான். ஆதியிற் சில பறவை களுக்குப் பல் இருந்திருக்கின்றது. அவற்றில்

முக்கியமானது ஆக்கியொப்றெறிக்ஸ் (Archaeopteryx) இந்தப் பறவை இப்போது இல்லை.

தமிழ்நிலா:- பறக்காத பறவைகளும் இருக்கின்றனவா அண்ணா?

அறிவண்ணன்:- இருக்கின்றனவே. ஆபிரிக்காவின் தீக்கோழி, தென் அமெரிக்காவின் எமு (Emu), அவுஸ்திரேலியாவின் கசோவரி, நியூசிலாந்தின் கிவி (Kiwi) ஆகியவை பறப்பதில்லை. இவை ஓடும் பறவைகள்.

தேன்மொழி:- அப்படியானால் எங்கள் நாட்டுப் பறவைகள் எல்லாம் பறக்கும் இல்லையா?

அறிவண்ணன்:- ஆம்! நீங்கள் நன்றாக பறந்து பறந்து நடிக்கலாம்.

அன்பரசன்:- பறவைகளில் பெரியது எது?

அறிவண்ணன்:- மடகஸ்காரில் வாழ்ந்த மோவாஸ் (Moas) எனப்படும் யானைப் பறவை தான் மிகப் பெரியது. சில நூற்றாண்டுகளுக்கு முன் இது அழிந்து விட்டது. இதன் முட்டை ஓடுகள் சில இன்றும் குழந்தைகளின் குளிக்கும் தொட்டிகளாகப் பயன் படுகின்றனவாம்.

இளவழகள்:- பென்குவினும் பறப்பதில்லைத் தானே?

அறிவண்ணன்:- அந்தாட்டிக்கில் நீர் வாழ்வுக்குச் சிறத்தலடைந்த பறவை பென்குவின். அதன் முன்னங்கால்கள் துடுப்புகளாக மாறி நீந்த உதவுகின்றன.

தமிழ்நிலா:- பறவைகள் எவ்வளவு தூரம் பறக்கும்?

அறிவண்ணன்:- குடிபெயர்தலின் போது அவை நீண்ட தூரம் பறக்கின்றன. ஆட்டுக்ரேண் என்ற பறவை பாதகமான கால நிலையில் ஆட்டிக் வட்டத் திலிருந்து ஐரோப்பா, ஆபிரிக்காவின் கரையோரம் வழியே சுமார் 25000 மைல்களைக் கடந்து தென் அத்திலாந்திக் பிரதேசங்களுக்குக் குடிபெய ருகின்றது.

இளவழகன்:- பறவைகளில் ஆண் அழகானது. மனிதரிலும் அப்படித்தான். அதுதான் என்னை ஆண் மயிலாக நடிக்க விட்டிருக்கிறார்கள்.

தேன்மொழி:- யார் விட்டது? தானே எடுத்துக் கொண்டது.

அறிவண்ணன்:- என்னைப் பொறுத்தவரை பிரபஞ்சத்தில் எல்லாமே அழகுதான். அழகும், அழகின்மையும் பார்ப்பவர் கண்களைப் பொறுத்தது.

அன்பரசன்:- கண் எல்லோருக்கும் ஒரே மாதிரித் தானே தொழிற்படும்?

அறிவண்ணன்:- சரி அவரவர் மனவிசாலத்துக்கு ஏற்ப, அறிவு விருத்திக்கு ஏற்ப அழகு வேறுபடும்.

தமிழ்நிலா:- அண்ணா திடீரென ஞானியாகிவிட்டார்.

அறிவண்ணன்:- இறைவனின் படைப்பில் எல்லாமே அழகானவை என்பதை நம்ப மறுப்பவன் - கடவுளே இல்லை யென்பவன் நாத்திகன்.

இளவழகன்:- பறவைகள் வானத்தில் எந்தவிதக் கவலையு மின்றிப் பறந்து திரிவதைப் போல நாங்களும் கொஞ்ச நேரம் சந்தோஷமாய் இந்த நாடகத்தை நடிப்போம்.

அறிவண்ணன்:- பறவைகளுக்கு சுயநலம் இல்லை. ஆதிக்க வெறி இல்லை. பேராசை இல்லை. நயவஞ்சகம் இல்லை. மற்றவனை நசுக்க வேண்டும் என்ற சிந்தனை இல்லை. ஆகையால் மகிழ்வாகப் பாடித் திரிகின்றன. சரி நீங்கள் நடிக்கத் தொடங்கலாம். நான் இங்கிருந்து பார்த்து விமர்சனம் கூறுவேன்.

*(நாடகம் ஆரம்பமாகிறது. அறிவண்ணன் கதிரையில் அமர்ந்து பார்த்துக்கொண்டிருக்கிறார்)*

**கோகிலா மகேந்திரன்**

- ***அரும்பதங்கள்***

| | |
|---|---|
| வெள்ளுடுப்பு | - முதன்முதலில் பார்க்கும் ஒத்திகை |
| ஒப்பனை | - அலங்காரம் |
| பிரபஞ்சம் | - உலகம் |
| ஞானி | - முற்றும் துறந்தவர் |
| நாத்திகன் | - கடவுள் இல்லை என்பவன் |
| ஆத்திகன் | - கடவுள் நம்பிக்கை உள்ளவன் |

## கிரகித்தற் பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. இப்பாடப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பறவைகள் எவை?
2. பறவைகளுக்கு நான்கு கால்கள் எனக் கூறப்படுவதற்கான காரணம் யாது?
3. இதில் கூறப்படும் நாடுகளையும் அந்நாட்டிற்குரிய பறவை களையும் குறிப்பிடுக.
4. மோவாஸ் பறவையின் முட்டை ஓடு எதற்குப் பயன்படுகின்றது?
5. இவ்வுரையாடல் மூலம் நீர் பெறும் படிப்பினை யாது?

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

1. இப்பாடப் பகுதியை வகுப்பறையில் நடிப்பதற்கு வழிகாட்டுக.
2. பறவைகளின் விசேட இயல்புகள் பற்றிக் கலந்துரையாடல் செய்க.
3. இப்பாடப் பகுதியில் குறிப்பிடப்படாத, மாணவர்கள் அறிந்த ஏனைய பறவைகளின் இயல்புகள் பற்றிக் கலந்துரையாட வழிகாட்டுக.
4. பறவைகள் உரையாடுவதைப் போன்று உரையாடல் ஒன்றை எழுத வழிகாட்டுக.

# நிறுத்தற் குறியீடுகள்

எழுத்து மூலம் கருத்தைத் தெளிவாக தெரிவிப்பதற்குத் துணையாக நிறுத்தற்குறிகள் பயன்படுகின்றன. பேசும்பொழுது ஒருவர் தமது குரலைத் தாழ்த்தியும், உயர்த்தியும், தாமதித்தும், நிறுத்தியும் கருத்துக்களைத் தெளிவாகப் புகட்ட முடியும். எழுத்தில் இத்தகைய தாக்கங்களை ஏற்படுத்துவதற்கு இக்குறியீடுகள் துணை நிற்கின்றன.

சொற்களுக்கு இடையில் இடைவெளியில்லாமலும் பந்தி பிரிக்காமலும் குறியீடுகள் இல்லாமலும் தொடர்ந்து எழுதப்பட்டிருக்கும் விடயங்களை வாசித்துக்கொண்டு செல்கையில் கண்கள் சலிப்படைந்துவிடும்.

கண்களுக்கு ஆறுதல் தரவும் கருத்துற நோக்கவும் சொற்களுக்கிடையே இடைவெளிகளும் நிறுத்தற் குறியீடுகளும் தவிர்க்க முடியாது வேண்டப்படுகின்றன. எழுத்தைத் தொடங்க வேண்டிய இடத்தில் தொடங்கி முடித்தல், உறுப்பமைய எழுதுதல், எழுத்துக்களுக்கும் சொற்களுக்கும் இடையில் ஏற்ற இடைவெளிவிட்டு எழுதுதல், நிறுத்தற் குறியீடுகளை ஏற்ற இடத்தில் கையாளுதல் அவசியமாகும்.

பொருள் நன்கு புலப்படுவதற்குக் குறியீடுகள் உரியவாறு பயன்படுத்தப்பட வேண்டும்.

## 01. முற்றுப்புள்ளி ( . )

ஒரு வாக்கிய முடிவைக் காட்டுவது முற்றுப்புள்ளியாகும்.

- குமார் படம் வரைந்தான்.
- நான் வீட்டிற்குச் சென்றேன்.

## 02. காற்புள்ளி ( , )

சொற்களை தனித்தனியாகவோ அடுக்கடுக்காகவோ பிரிக்கும்போது காற்புள்ளி இடல் வேண்டும்.

- நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன ஐம்பூதங்களாகும்.

முகவரி எழுதும்போதும் காற்புள்ளி பயன்படுத்தப்படுகின்றது.

- திரு. ப. திவ்வியகுமார்,
  32, மலபார் வீதி,
  மட்டக்களப்பு.

## 03. வினாக்குறி ( ? )

ஒரு வாக்கியம் வினா வாக்கியமாக அமையும்போது அதற்கு இறுதியில் வினாக்குறி இடல் வேண்டும்.

- இங்கே வந்தவர் யார்?
- பூக்கள் அழகானவையா?

## 04. வியப்புக்குறி ( ! )

இதனை உணர்ச்சிக்குறி என்பர்.

- தலைவா, வருக! வருக!
- ஐயோ! பாவம்! இவன் நல்லவனாயிற்றே!

## 05. அடைப்புக்குறி ( )

அடைப்புக்குறிகள் எழுத்துப் பகுதியின் இடையே மேற்கோள்கள் அல்லது விளக்கத்தினை உண்டாக்குவதற்காகப் பயன்படுத்தப் படுகின்றன. ஆங்கிலச் சொற்களைத் தமிழ் ஆக்கங்களுக்கிடையில் பயன்படுத்தும் போதும் அடைப்புக்குறிக்குள் பயன்படுத்த வேண்டும்.

- முக்கனிகள் (வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம்) எங்கள் ஊரிலே நிறைய உள்ளன.

## 06. மேற்கோட்குறி (''.........'')

ஒருவர் கூறிய சொற்களை அல்லது கூற்றுக்களை அவர் கூறியவாறே எடுத்தாளும்போது இரட்டை மேற்கோள்குறி இடப்படும்.

- ''அறம் செய விரும்பு'' என்றார் ஔவைப் பிராட்டியார்.
- புயற்காற்று ''ஊ... ஊ...'' என இரைந்தது.

# 7 அழ. வள்ளியப்பா பாடல்கள்

## புதுவகைப் பாடல்

*தா தா தா தா தா தா தா தா தா தா க்குத் தண்ணீர் தாரான்*
*ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆக்கும் உதவான் கொள்ளை*
*லா லா லா லா லா லா லா லா லா லாக்குப் பொருளை விற்பான்*
*பா பா பா பா பா பா பா பா பா பா பாக்கே ஆளாவானே.*

## மொழித்திறப் பாடல்

*சந்தைக்குப் போனேன் சந்தைக்குப் போனேன்*
*சாம்பல் பூசணி வாங்கிடவே*
*சண்டைக்குப் போனேன் சண்டைக்குப் போனேன்*
*தாய்த்திரு நாட்டைக் காத்திடவே*

*வெல்லத்தைப் பார்த்தேன் வெல்லத்தைப் பார்த்தேன்*
*வேலுச் சாமி கடையினிலே*
*வெள்ளத்தைப் பார்த்தேன் வெள்ளத்தைப் பார்த்தேன்*
*விடாது பெய்த மழையினிலே*

*தவளையைப் பிடித்தேன் தவளையைப் பிடித்தேன்*
*தரையில் தத்திச் செல்கையிலே*
*தவலையைப் பிடித்தேன் தவலையைப் பிடித்தேன்*
*தலையில் தூக்கி வருகையிலே*

*கொல்லையில் கிடைத்தது கொல்லையில் கிடைத்தது*
*குலையுடன் எனக்கு மாம்பழமே*
*கொள்ளையில் கிடைத்தது கொள்ளையில் கிடைத்தது*
*கொடியவனுக்குத் தண்டனையே*

◆ **அரும்பதங்கள்**

சந்தை - சமையலுக்குத் தேவையான பொருட்கள் நிறைந்த இடம் (காய்கறி, மீன், பழங்கள், கீரைகள்)
வெல்லம் - சீனி
வெள்ளம் - மழைநீர் பெருக்கெடுத்து ஓடுவது
தவலை - குடத்தைக் குறிக்கும்
கொல்லை - வீட்டின் பின்புறம்
கொள்ளை - ஒருவனின் உடைமைகளை அபகரித்தல்

**கிரகித்தல் பயிற்சி**

பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளி நிரப்புக.

1. சந்தைக்குப் போனேன் ..................... ..................... வாங்கிடவே.
2. தாய்த்திரு நாட்டைக் காத்திடவே ..................... போனேன்.
3. கொல்லையில் கிடைத்தது .......................
4. கொடிவனுக்குக் கிடைத்தது .......................

**மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்**

1. மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து பாடலை ஒலி வேறுபாட்டுடன் பாடுவதற்கு ஏற்ற செயற்பாட்டைத் திட்டமிடுக.
2. பாடலில் இடம்பெறும் சொற்களின் பொருளைத் தெளிவாகக் கூறுவதற்கு மாணவர்களை வழிப்படுத்துக.
3. பாடலை மனனம் செய்து பாடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்க.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

**ஆக்கத்திறன் செயற்பாடு**

இப்பாடல் போன்று வேறு பாடல் ஒன்றை உருவாக்க மாணவர்களை வழிப்படுத்துக.

**மதிப்பீடு**

தொடர்பு படுத்துக.

| | |
|---|---|
| 1. வெல்லம் | மழை |
| 2. வெள்ளம் | தலை |
| 3. தவளை | கடை |
| 4. தவலை | தரை |

**மேலதிகச் செயற்பாடு**

இவ்வாறான சிறுவர் பாடல்களைத் தேடித் தொகுத்து, பாடுவதற்கு ஏற்ற வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்க.

## அணிற் பாடல்



அழகு மிக்க பிள்ளையே
அங்கும் இங்கும் ஓடியே
பழங்கள் தேடிப் பிடிக்கிறாய்
பையப் பையக் கொறிக்கிறாய்

வளைத்து வாலைத் தூக்குவாய்
மரத்தின் உச்சி ஏறுவாய்
கிளைகள் தோறும் தாவுவாய்
கெடுதி ஏதும் செய்திடாய்

மூன்று கோடு முதுகிலே
முன்பு ராமர் தந்ததோ?
நான்கு முகத்துப் பிரமனால்
நன்கு படைக்கப்பட்டதோ?

கேட்ட கேள்வி கேட்டதும்
கீச்சுக் கீச்சு என்கிறாய்
ஓட்டம் பிடிக்கப் பார்க்கிறாய்
ஒளிந்து கொள்ள நினைக்கிறாய்

பிள்ளை என்றே உன்னை நான்
பிரியமாக அழைக்கிறேன்
கிள்ளிக் கிள்ளிப் பழங்களைக்
கீழே எனக்கும் போடுவாய்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## கிரகித்தல் பயிற்சி

1. அழகு மிக்க பிள்ளை என அழைப்பது யாரை?
2. அணில் பிள்ளையின் செயற்பாடுகளைக் குறிப்பிடுக.
3. அணிலின் முதுகினில் உள்ள கோடு யார் தந்ததாகக் கூறப்படுகின்றது?
4. படைத்தல் கடவுளாகக் கூறப்படுபவர் யார்?
5. அணில் எவ்வாறு கத்தும்?


## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

1. மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து பாடலை இரசனையுடன் பாடுவதற்கான செயற்பாட்டைத் திட்டமிடுக.
2. மாணவர்களைக் கொண்டு பாடலை அபிநயத்துடன் பாடச்செய்க.
3. பாடலை மனனம் செய்வதற்கு வழிப்படுத்துக.
4. பிராணிகளின் பாடல்களை ஒப்படையாகத் தொகுக்கவும் பாடவும் செயற்பாட்டினை மேற்கொள்க.
5. இவ்வாறான பாடலை ஆக்குவதற்கு மாணவர்களை வழிப்படுத்துக.

# 8 மூட ஆமை

குளம் ஒன்றில் ஆமையும்
கொக்கு இரண்டும் வாழ்ந்தன
குளத்தில் தண்ணீர் வற்றவே
கூடி மூன்றும் வருந்தின

அண்டை ஊரில் உள்ளதோர்
அழகுக் குளத்தை நாடியே
இரண்டு கொக்கும் போகவே
எண்ணி முடிவு செய்தன



அதனைக் கண்ட ஆமையும்
அழுதே ''அண்ணன் மார்களே
இதனை விட்டுப் போகவே
எனக்கும் உதவி செய்யுங்கள்

நன்மைக் கால முற்றிலும்
நட்புச் செய்து வாழ்ந்தவர்
துன்பம் கண்ட போதிலே
துறந்து போதல் இல்லையே!''


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக


என்று கூறி வேண்டவே
இரண்டு கொக்கும் அதனிடம்
''நன்று நன்று தம்பியே!
நாங்கள் பறந்து செல்லுவோம்!

நீயும் வருவதெப்படி
நெடுந்தொலைவும் ஆனதே!
காயும் வெய்யில் கருக்குமே

கால்கள் சோர்ந்து போகுமே''
என்று கூறிக் கொக்குகள்
இரண்டும் வருந்தி நாளெலாம்
ஒன்றுகூடி ஆய்ந்தன!
உளவும் ஒன்று கண்டன!

''ஆமைத் தம்பி உன்னையே
அழைத்துப் போவ தென்னிலோ,
ஊமை போல்இக் குச்சிகளை
உன்றன் வாயால் பற்றிக்கொள்!

குச்சி முனைகள் இரண்டையும்
கௌவிப் பறந்து செல்லுவோம்
உச்சி வானில் செல்கையில்
உன்றன் வாயைத் திறப்பயேல்



தரையில் வந்து வீழுவாய்
தவிடுபொடி ஆகுவாய்
மறந்திடாதே'' என்றன.
''மறவேன்'' என்ற(து) ஆமையே!

குச்சி ஒன்றைக் கொணர்ந்தன
கௌவிக் கொண்ட(து) ஆமையும்
உச்சி வானில் பறந்தன
ஊரார் நின்று பார்த்தனர்

சிறுவர் கைகள் கொட்டியே
சிரித்துக் கூச்சல் போட்டனர்
துறுதுறுத்த ஆமையும்
தூக்கிச் செல்லும் நண்பரைக்

''கீழே இரைச்சல் ஏன்'' எனக்
கேட்க வாயைத் திறந்ததும்
வீழ்ந்து நொறுங்கிப் போனதே
வீணில் உயிரைத் துறந்ததே!



மூத்தோர் சொல்லைக் கேட்டிடா
மூட ஆமை செத்ததே!
காத்துக்கொள்ளல் வேண்டுமே
கடமை அடக்கம் இரண்டையே!

**பெருஞ்சித்திரனார்**


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

◆ **அரும்பதங்கள்**

| | |
|---|---|
| வருந்தின | - வேதனைப்பட்டன |
| எண்ணுதல் | - யோசனை செய்தல் |
| துறத்தல் | - நீங்கிச் செல்லல் |
| உளவு | - ஒரு செயலை செய்வதற்கான வழிமுறை |
| இரைச்சல் | - அதிகப்படியான சத்தம் |

## கிரகித்தல் பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. குளத்தில் வாழ்ந்த உயிரினங்கள் ஏன் வருந்தின?
2. ஆமை அழுதமைக்கான காரணத்தைக் கூறுக.
3. கொக்குகள், ஆமையை எவ்வாறு அழைத்துச் செல்ல முனைந்தன?
4. ஆமை எதற்காக வாயைத் திறந்தது?
5. முடிவில் ஆமைக்கு என்ன நடந்தது?

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

1. மாணவர்களைக் குழுவாகப் பிரித்து கதைப் பகுதியினை பாடலாகப் பாடுவதற்கு நடவடிக்கையினை மேற்கொள்க.
2. இக்கதைப் பகுதியினை தமது மொழிநடையில் கூறச் செய்க.
3. மூட ஆமை என்பது எவ்வாறு புலப்படுகிறது என்பதை மாணவர்களுடன் கலந்துரையாடுக.

**பயிற்சி**

(அ) பின்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்துச் சொற்களைத் தெரிவு செய்து எழுதுக:

| | |
|---|---|
| 1. குளம் | 2. அண்டை |
| 3. அழகு | 4. அழுகை |
| 5. நன்மை | 6. நட்பு |
| 7. துன்பம் | 8. தொலைவு |
| 9. கடமை | 10. உயிர் |
| 11. மூத்தோர் | 12. தரை |

(ஆ) பின்வருவனவற்றிலிருந்து பெயர்ச்சொற்களையும் வினைச் சொற்களையும் தெரிந்து எழுதுக:


குளம், ஆமை, கொக்கு, வாழ்ந்தன, வருந்தின, ஊர், செய்தன, அண்ணன், கண்டான், ஆய்ந்தன, பார்த்தனர், பறந்தன, சிறுவர், கைகள்

**செயற்பாடு**

இது போன்ற கதைப் பாடல்கள் சிலவற்றைத் தேடித் தொகுப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துக.

# 9 தென்னமரக் கும்மி

கும்மி பெரும்பாலும் பெண்களுக்கே உரிய கிராமியக் கலை வடிவம். பெண்கள் வட்ட வடிவமாய்க் கூடிநின்று கைகொட்டி ஆடுவது கும்மி என்று சொல்லப்படும். கும்மியடிக்கும்போது ஒரு குத்துவிளக்கையோ கிருஷ்ணக் கடவுளின் சிலையையோ நடுவில் வைத்து அதைச் சுற்றிப் பல பெண்கள் பாடிக்கொண்டும் கைகளில் தாளம் தட்டிக்கொண்டும் குனிந்து நிமிர்ந்து ஆடுவர்.



தென்னமரமே தென்னமரமே ஏன் வளர்ந்தாய் தென்னமரமே
நான் வளர்ந்த காரியத்தை நாட்டாரறியாரோ
ஓங்கி வளர்ந்த கதை ஊராரறியாரோ
அறியாட்டாற் சொல்லுகிறேன்

தெரியாட்டாச் சொல்லுகிறேன் தேசமெங்குஞ் சோபனமே
தென்னமரமான வகை தெரியப்படுத்துகிறேன்
மரமாக நான் வளர்ந்து மண்டலத்திலுள்ளவர்க்கு
ஏற்றமிறைப்பதற்கு யிசைந்தகயறாவேன்
வாத்தியார்க்கும் பிள்ளைகட்கும் வாய்த்த நிழலா வேன்
அடிசில் சமைப்பதற்கு அடுப்புக்குவுதவிடுவேன்
தென்னமட்டைவோலையாகி தேசத்திலுள்ளவர்க்கு

புட்பமெடுப்பதற்கு பூக்குடலை நானாவேன்
கோவில் தலங்களுக்கு குறித்த பந்தலாகிடுவேன்
கலியாண வாசலுக்குக் கனத்த பந்தலாயிருப்பேன்
சீமந்த வாசலுக்குச் சிறந்த பந்தலாகிடுவேன்
சொற்பெரிய நற்சபைக்கு சுழல்பந்தலாகிடுவேன்
சகலஜெனகாரியத்துக்கு ஜாக்கிரதையாயிருப்பேன்
மாளிகைக்கு மறைவாவேன் மாந்தருக்கு நிழலாவேன்
சன்னதிகள் சுத்திசெய்ய சார்விளக்குமாறாவேன்
மழைநாளில் சம்மங்குடை மன்னர் தலை மேலிருப்பேன்
குருத்தோலையெனையெடுத்து கூந்தலென்று கட்டிடுவார்
செத்துமடிவார்க்கு சிவலோகப் பாயாவேன்
மாண்டுமடிவார்க்கு வைகுந்தப் பாயாவேன்
கூடம்மறைப்புகட்ட குருத்து விரிவோலையாவேன்
அடுப்பெரியா பெண்களுக்கு அடுப்பூதிப்பத்த வைப்பேன்
பாளையென்றே நான்பிறந்து பலதினுசுக்குதவியாக
தென்னங்குருத்துடனே தெருப்பந்தலில் கட்டுவார்
வாசலது பந்தலிலே வரிசையுடன் கட்டிவைப்பார்
ஆப்பஞ்சுடவுதவிடுவேன் அழகு ரொட்டிக்காகிடுவேன்
ஆலயங்கள் பூசையிலே அபிஷேகமாயிடுவேன்
நீரடைப்பு கண்டவற்கு நேர்மையுடன் தீர்த்திடுவேன்
தேங்காயாய் நான் வளர்ந்து தேசத்திலுள்ளவர்க்கு
விக்கின விநாயகற்கு விருப்பமுடனெனையுடைப்பார்
தேவர்கட்கு பூசையென்றால் தேடியெனையழைத்திடுவார்
எந்தெந்த பிரார்த்தனைக்கு மெந்தனையே கூப்பிடுவார்
அம்புவியில் கழிப்புசுற்ற அவ்விடத்தில் போயிருப்பேன்
கூட்டுக்கறியாயிடுவேன் கொழம்புகளுக்குகந்திடுவேன்
துவையலுக்கு நானாவேன் துவட்டலுக்கு நானாவேன்
பச்சடிக்கு நானாவேன் பால்பிழிய நானாவேன்
தேங்காய்ப்பாலாகிடுவேன் திருவிளக்குயெண்ணெயாவேன்
கொட்டாங்கச்சி நானாகி குவலயத்திலுள்ளவர்க்கு
சாதங்கறிவகைகள் சமைப்பதுவுமென்னாலே
அறுசுவைகள் சமைப்பதற்கு அகப்பையது நானாவேன்

தென்னமரக்கும்மிதனை சீர்திருத்திப்பாடினோர்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல்வாழ்ந்திருப்பார்.

**தென்னமரக்கும்மி முற்றிற்று**

***(ஸ்ரீ சிவசுப்பிரமணியர் வள்ளயைச் சிறையெடுத்த கொப்பிப் பாட்டு தொகுதியிலிருந்து ஒரு பகுதி)***

◆ ***அரும்பதங்கள்***

அடிசில் - உணவு
சீமந்தம் - கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏழாம் மாதத்தில் நடத்தப்படும் விழா
மாந்தர் - மக்கள்
கொட்டாங்கச்சி - சிரட்டை
முசியாமல் - சேர்ந்து

## கிரகித்தல் பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.


1. தென்னை மரத்தின் பயன்கள் யாவை?
2. எங்கெங்கு பந்தல் இடப்படுவதாக கூறப்படுகின்றது?
3. தென்னை மரத்தின் பகுதிகளைப் பெயரிடுக.
4. பாடலில் உமக்குப் பிடித்த வரிகளைக் குறிப்பிட்டு அதனை விளக்குக.
5. தென்னோலை பயன்படுத்தப்படும் பல்வேறு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

1. தென்னை மரக் கும்மிப் பாடலை இசையமைத்துப் பாடுக.
2. தென்னை மரத்தின் சிறப்புக்கள் பற்றி கலந்துரையாடி அது பற்றி பேச்சொன்றை வகுப்பறையில் நிகழ்த்திக் காட்டுக.
3. தென்னை மரத்தைப் போன்று பனை மரம், வேம்பு (வேப்பை மரம்), கித்துள் மரம் ஆகியவை பற்றிக் கலந்துரையாடுக.
4. இதுபோன்று வேறு பாடல்களைச் சேகரித்து நூல் ஒன்றைத் தயாரிக்க.

# 10 புதிய ஆத்திசூடி

ஔவையார் பாடிய ஆத்திசூடியே முதன்முதலில் தோன்றியது. ஔவையார் என்பவர் ஒருவர் அல்லர் என்பது ஆய்வாளர்களின் கருத்து. எத்தனையோ ஔவையார்களில் ஒரு ஔவையார் செய்ததே ஆத்திசூடி. ஆத்தி மலர்மாலையை அணிந்தவர் சிவபெருமான்; சிவனைப் போற்றவே ஆத்திசூடி எனப் பெயரிட்டார் ஔவையார் என்று ஒரு சிலரும், ஆத்திமலர் மாலையை அணிந்தவர்கள் சோழ மன்னர்கள் என்பதனால் சோழ மன்னரைக் குறிப்பிடுவதற்கென 'ஆத்திசூடி' என்று பெயர் வந்தது என்று ஒரு சாராரும் கூறுவர்.



பாடத்திட்டத்தில் இடம்பெறும் புதிய ஆத்திசூடி பாரதியார் பாடியது. ஔவையாரைப் பின்பற்றியே பாரதியார் அவர் காலத்துக்குப் பொருந்துவனவாகப் புதிய ஆத்திசூடியைப் பாடியுள்ளார். இவரைப் பின்தொடர்ந்து பாரதிதாசனும் இரண்டு ஆத்திசூடிகள் பாடியுள்ளார். பாரதியின் ஐம்பது ஆத்திசூடி அடிகள் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

**பரம் பொருள் வாழ்த்து**

ஆத்திசூடி யிளம்பிறை யணிந்து
மோனத்திருக்கு முழுவெண் மேனியான்
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத்தாலே உணர்ந்துணராது
பலவகையாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே அதனியல் ஒளியுறு மறிவாம்
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்
அதனருள் வாழ்த்தி அமரவாழ் வெய்துவோம்

1. அச்சந் தவிர்
2. ஆண்மை தவறேல்
3. இளைத்த லிகழ்ச்சி
4. ஈகை திறன்
5. உடலினை உறுதி செய்
6. ஊண் மிக விரும்பு
7. எண்ணுவ துயர்வு
8. ஏறுபோல் நட
9. ஐம்பொறி ஆட்சிகொள்
10. ஒற்றுமை வலிமையாம்
11. ஓய்த லொழி
12. ஔடதங் குறை
13. கற்ற தொழுகு
14. கால மழியேல்
15. கிளைபல தாங்கேல்
16. கீழோர்க் கஞ்சேல்
17. குன்றென நிமிர்ந்துநில்
18. கூடித் தொழில் செய்
19. கெடுப்பது சோர்வு
20. கேட்டிலுந் துணிந்துநில்
21. கைத்தொழில் போற்று
22. கொடுமையையெதிர்த்து நில்
23. கோல்கைக்கொண்டு வாழ்
24. கவ்வியதை விடேல்
25. சரித்திரத் தேர்ச்சிகொள்
26. சாவதற்கஞ்சேல்
27. சிதையா நெஞ்சு கொள்
28. சிறுவோர்ச் சீறு
29. சுமையினுக் கிளைத்திடேல்
30. சூரரைப் போற்று
31. செய்வது துணிந்து செய்
32. சேர்க்கை அழியேல்
33. சைகையிற் பொருளுணர்
34. சொல்வது தெளிந்து சொல்
35. சோதிடந் தனையிகழ்
36. சௌரியந் தவறேல்
37. ஞமலிபோல் வாழேல்
38. ஞாயிறு போற்று
39. ஞிமிறென இன்புறு
40. ஞெகிழ்வ தருளின்
41. ஞேயங் காத்தல் செய்
42. தன்மை யிழவேல்
43. தாழ்ந்து நடவேல்
44. திருவினை வென்று வாழ்
45. தீயோர்க் கஞ்சேல்
46. துன்ப மறந்திடு
47. தூற்றுதலொழி
48. தெய்வம் நீயென்றுணர்
49. தேசத்தைக் காத்தல் செய்
50. தையலை உயர்வு செய்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

**1. அச்சந் தவிர்**

அச்சம் - சமுதாயத்தில் பல்வேறு நிலைகளிலும் ஏற்படும்
அர்த்தமற்ற பயங்கள்
தவிர் - நீக்கு.

**2. ஆண்மை தவறேல்**

ஆண்மை - ஆண்பாலுக்குரிய தன்மைகள் (உடலாலும் மனதாலும்)
தவறேல் - தவறக்கூடாது. விலகக்கூடாது.

**3. இளைத்தல் இகழ்ச்சி**

இளைத்தல் - உடலாலும், மனத்தாலும் தளர்வுறுதல்
இகழ்ச்சி - மிகவும் இழிவானதாகும்.

**4. ஈகை திறன்**

ஈகை - பொருளாதாரத்தால் நலிவுற்றோருக்கு உதவுதல்
திறன் - திறனான செயல் (அறிவுபூர்வமான செயல்).

**5. உடலினை உறுதிசெய்**

உடலினை - நம் உடம்பை
உறுதிசெய் - திடமுள்ளதாக ஆக்கிவை.

**6. ஊண் மிக விரும்பு**

ஊண் - உணவு வகைகள்
மிக விரும்பு - அதிகமாக விரும்பு.

***7. எண்ணுவ துயர்வு***

*எண்ணுவது - சிந்திப்பது, நினைப்பது*
*உயர்வு - உயர்ந்த சிந்தனைகள், தத்துவங்கள், நடைமுறைகள்.*

***8. ஏறுபோல் நட***

*ஏறுபோல் - எருதினைப்போல*
*நட - தன்னம்பிக்கையோடு நடக்கவும்.*

***9. ஐம்பொறி ஆட்சிகொள்***

*ஐம்பொறி - ஐந்து வகையான உணர்ச்சி உறுப்புகள்*
*ஆட்சிகொள் - அவைகளின் செயற்பாட்டை உன் வழியில் நிறுத்துக.*

***10. ஒற்றுமை வலிமையாம்***

*ஒற்றுமை - அனைவரும் ஒருங்கிணைந்து செயற்படல்*
*வலிமையாம் - வலிமையானதாகக் கருதப்படும்.*

***11. ஓய்தலொழி***

*ஓய்தல் - எல்லாம் முடிந்ததாய் நினைத்து ஓய்வாக இருத்தல்*
*ஒழி - அடியோடு நீக்கிவிடு, ஒழித்துவிடு*

***12. ஔடதங் குறை***

*ஔடதம் - உடல், உள நோய்களுக்கான இயற்கை, செயற்கை மருந்துகள்*
*குறை - குறைத்துக்கொள்ள வேண்டும்.*

### *13. கற்ற தொழுகு*

*கற்றது - ஏட்டுக் கல்வியாலும் அனுபவக் கல்வியாலும் நாம் கற்றுக்கொண்ட, அறிந்துகொண்ட படிப்பினைகளின்படி*
*ஒழுகு - நடக்க வேண்டும்.*

### *14. காலம் அழியேல்*

*காலம் - வினாடி, நிமிடம், மணி என்பன உள்ளடக்கிய நாள், வார, மாத, ஆண்டுகள்*
*அழியேல் - வீணாக அழிக்காதே, கெடுக்காதே.*

### *15. கிளைபல தாங்கேல்*

*கிளைபல - உறவினர்கள் பலரையும்*
*தாங்கேல் - தனியொருவனாகச் சுமக்கும் பொறுப்பை ஏற்காதே.*

### *16. கீழோர்க்கு அஞ்சேல்*

*கீழோர்க்கு - மனத்தாலும், செயலாலும் மாசுண்டவர்களுக்கு*
*அஞ்சேல் - அஞ்சாதே, பயப்படாதே.*

### *17. குன்றென நிமிர்ந்துநில்*

*குன்றென - சிறு மலையைப் போன்ற திண்மையுடனும் உறுதியுடனும்*
*நிமிர்ந்துநில் - தன்னம்பிக்கையுடன் தலை நிமிர்த்தி நெஞ்சுயர்த்தி நிற்க வேண்டும்.*

### *18. கூடித் தொழில் செய்*

*கூடி - உழைக்கும் உள்ளமும் உறுதியும் படைத்தோர் அனைவரும் ஒற்றுமையாய் ஒன்றுபட்டு*
*தொழில் செய் - தொழில்களைச் செய்தல் வேண்டும்.*

**19. கெடுப்பது சோர்வு**

கெடுப்பது - கெடுத்து அழிப்பது
சோர்வு - சோம்பல்.

**20. கேட்டிலும் துணிந்து நில்**

கேட்டிலும் - கெடுதல்கள் வந்தபோதும்
துணிந்துநில் - தளராமல் துணிந்து நின்று எதிர்கொள்க.

**21. கைத்தொழில் போற்று**

கைத்தொழில் - கைகளினால் செய்யக்கூடிய சிறு தொழில்களை
போற்று - விரும்பிச் செய்.

**22. கொடுமையை எதிர்த்து நில்**

கொடுமையை - பெருந்துன்பங்களை, தாங்கொணா இன்னல்களை
எதிர்த்து நில் - எதிர்த்து தைரியத்துடன் போராடு.

**23. கோல்கைக் கொண்டு வாழ்**

கோல் கைக் கொண்டு - ஆயுதம் தாங்கி
வாழ் - வாழ்வாயாக.

**24. கல்வியதை விடேல்**

கல்வியதை - விரும்பிப் பற்றியதை, எடுத்துக்கொண்டதை
விடேல் - கைவிட்டுவிடாதே, நழுவவிடாதே.

### 25. சரித்திரந் தேர்ச்சி கொள்

சரித்திரம் - முறையான, உண்மையான வரலாறு
தேர்ச்சி கொள் - தெளிவுடன் அறிந்து கொள்.

### 26. சாவதற்கு அஞ்சேல்

சாவதற்கு - இறப்பதற்கு
அஞ்சேல் - அச்சப்படாதே.

### 27. சிதையா நெஞ்சு கொள்

சிதையா - பிரிந்து போகாத, குழம்பி நிற்காத
நெஞ்சுகொள் - மனத் திண்மையைப் பெறு.

### 28. சீறுவோர்ச் சீறு

சீறுவோர் - வீணான கோபங்களை வளர்த்துக்கொண்டு எதிர்ப்போரை
சீறு - நீயும் எதிர்த்திடு.

### 29. சுமையினுக்கு இளைத்திடேல்

சுமையினுக்கு - சுமத்தப்படுகின்ற பிரச்சினைகளுக்கு
இளைத்திடேல் - பயந்து தளர்ந்து போகாதே.

### 30. சூரரைப் போற்று

சூரரை - மகத்தான வீரச் செயல்களைச் செய்பவர்களை
போற்று - மதித்துப்புகழ்.

**31. செய்வது துணிந்து செய்**

செய்வது - செய்ய நினைக்கிற செயல்களை
துணிந்துசெய் - ஆராய்ந்து, பின் துணிவுடன் மேற்கொள்.

**32. சேர்க்கை அழியேல்**

சேர்க்கை - சேர்ந்து வாழும் முறையை
அழியேல் - அழித்து விடாதே.

**33. சைகையிற் பொருளுணர்**

சைகையின் - உடலுறுப்புகளால் செய்யப்படும் அடையாளங்களின்
பொருளுணர் - உள், வெளிப் பொருள்களை உணர்ந்துகொள்.

**34. சொல்வது தெளிந்து சொல்**

சொல்வது - சொல்லுகின்ற கருத்துக்களை
தெளிந்து சொல் - ஆராய்ந்து தெளிவானதன் பின்னர் சொல்க.

**35. சோதிடந் தனையிகழ்**

சோதிடம் - இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலங்களைக்
கணித்துக் கூறுதல்
இகழ் - அதனை இகழ்ந்திடுக.

**36. சௌரியந் தவறேல்**

சௌரியம் - பல்வேறு நலன்கள்
தவறேல் - தவற விடாதே.

### 37. ஞமலிபோல் வாழேல்

ஞமலிபோல் - நாயினைப் போல்
வாழேல் - வாழாதே.

### 38. ஞாயிறு போற்று

ஞாயிறு - கதிரவன்
போற்று - நலன் கருதிப் புகழ்.

### 39. ஞிமிறென இன்புறு

ஞிமிறென - வண்டினைப் போல
இன்புறு - இன்பமாக இரு.

### 40. ஞெகிழ்வ தருளின்

ஞெகிழ்வது - இளகிப் பேசுதல், உருகிப் போதல்
அருளின் - அன்பு, இரக்கம், கருணை காட்டினால்.

### 41. ஞெயங் காத்தல் செய்

ஞெயம் - அன்பு, உண்மையான நெருங்கிய அன்பு
காத்தல் செய் - காத்துக்கொள்.

### 42. தன்மை இழவேல்

தன்மை - பண்பு நலன்களை
இழவேல் - இழந்துவிடாதே.

### 43. தாழ்ந்து நடவேல்

தாழ்ந்து - அடிபணிந்து, உரிமைகளை விட்டுக்கொடுத்து
நடவேல் - நடந்து கொள்ளாதே.

**44. திருவினை வென்று வாழ்**

திருவினை - பொருள் செல்வத்தை
வென்று வாழ் - வெற்றிகொண்டு வாழ்வாயாக.

**45. தீயோர்க்கு அஞ்சேல்**

தீயோர்க்கு - தீமைகள் செய்பவர்க்கு
அஞ்சேல் - அச்சம் கொள்ளாதே.

**46. துன்பம் மறந்திடு**

துன்பம் - உன்னை வந்தடையும் இன்னல்கள்
மறந்திடு - மறந்து வாழ்க.

**47. தூற்றுதல் ஒழி**

தூற்றுதல் - வீணாக இழித்தும் பழித்தும் பேசுதல்
ஒழி - நீக்கிவிடு.

**48. தெய்வம் நீ என்றுணர்**

தெய்வம் - கடவுள், இறை, ஆண்டவன்
நீ என்றுணர் - நீயே என்பதை உணர்ந்துகொள்.

**49. தேசத்தை காத்தல் செய்**

தேசத்தை - சொந்த நாட்டினை
காத்தல் செய் - பாதுகாத்தலைச் செய்.

**50. தையலை உயர்வு செய்**

தையலை - பெண்களை
உயர்வு செய் - உயர்வாக மதித்து நடத்து.

## கிரகித்தல் பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. இதில் காணப்படும் அறக் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.
2. உமக்குப் பிடித்த பத்து ஆத்திசூடி அடிகளுக்குக் காரணம் கூறுக.
3. ஆத்திசூடி எனப் பெயர் வரக் காரணம் யாது?
4. பரம்பொருள் வாழ்த்துப் பகுதியில் காணப்படும் கடவுளின் பெயர்களைத் தருக.

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

1. புதிய ஆத்திசூடி அடிகளை மனனம் செய்து ஓதுக.
2. தினமும் காலையில் வகுப்பறையில் பழைய, புதிய ஆத்திசூடிகளை உரத்துச் சொல்ல வழிகாட்டுக.

**செயற்பாடு**

ஔவையாரின் ஆத்திசூடியையும் பாரதியாரின் புதிய ஆத்திசூடியையும் தொகுத்து வகுப்பறையில் காட்சிப்படுத்த வழிகாட்டுக.

# 11 கண்ணகி வழக்குரைத்தல்

*காட்சி - 1*

**பாத்திரங்கள்: பாண்டிமாதேவி, தோழியர்**
**இடம்: பாண்டிமாதேவியின் அந்தப்புரம்**
**காலம்: முற்பகல்**

*(பாண்டிமாதேவி ஒரு பீடத்தில் அமர்ந்திருக்கின்றாள். தோழியர் அருகில் அமர்ந்துள்ளனர்)*



ஒரு தோழி:- தேவியாரே! மன்னிக்க வேண்டும். உங்கள் அழகிய முகம் என்றும்போல இல்லை இன்று. சிறிது வாட்டமுற்றிருக்கின்றது. பொலிவிழந்து காணப்படுகின்றது. காரணம் யாதோ? உடல் நலம் இன்மையால் அங்ஙனம் உள்ளதோ? தெரிவித்தால் உடனே ஆவன செய்யலாமே!

பாண்டிமா தேவி:- பாங்கி! நீ கூறுவது உண்மையே. ஆனால் உடலில் நோய் ஒன்றுமில்லை. மனந்தான் நலிவடைந்துள்ளது.

தோழி:- கோப்பெருந்தேவியீர்! வளம் கொழிக்கும் வையை நாட்டுக்கு இறைவியரே! மீனாட்சி சுந்தரர் அருளால் எல்லாச் செல்வங்களையும் பெற்று விளங்கும் உங்கள் மனம் நலிவடையக் காரணம் யாதோ? விருப்பமிருப்பின் அடியாள் மீது அன்பு கூர்ந்து அதனை வெளி யிடுங்கள். இன்றே - இல்லை - இப்போதே அதனை அகற்றற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

பா-தேவி:- உங்களுக்குத் தெரியாமல் மறைக்க வேண்டிய இரகசியம் ஒன்றுமில்லை. இன்று விடியற் காலையில் சில, தீக் கனவுகள் கண்டேன். கடைசிச் சாமத்திற்காணும் கனவு, உடனே பலிக்கும் என்று கனாநூல் வல்லார் கூறக் கேட்டுள்ளேன். அதனாற்றான் என் மனம் கவல்கின்றது.

தோழி:- பாண்டிமா தேவியீர்! நீங்கள் கூறுவது உண்மையே. ஆயினும், ஆண்டவன் அருள் பெற்றவர்களிடத்தில் 'நாள், கோள், வினைப் பயன் என்பன வலுவற்றுப் போகும்' என்ற ஆன்றோர் வாக்குக்கிணங்க, இத்தீக்கனவு யாது செய்ய வல்லது? அக்கனவு இன்னதென விவரிக்கலாமன்றோ?'

பா - தேவி:- பாங்கி, விவரிக்கலாம். அதை நினைக்குந் தோறும் மனம் வேதனையுறுகின்றது. விவரிக் கவும் வாய் நடுங்குகின்றது. ஆயினும்

கூறுவேன் கேள். நான் கண்ட கனவுகள் பல. ஒன்றில் செங்கோலும் வெண்குடையும் நிலத்து வீழ்ந்தன. அரண்மனை வாயில் ஆராய்ச்சி மணியின் குரல் நடுங்கியது. ஒரு கனவில் எட்டுத் திக்குகளும் அதிர்ந்தன. சூ ரி ய னை விழுங்கக் கூடிய இருள் உண்டாயிற்று. மற்றொரு கனவில் இரவில் இந்திரவில் இட்டி ருந்தது. பகலில் விண்மீன்கள் விழுந்தன. ஆதலால் வருவதோர் உற்பாதம் உண்டு. இவற்றை மன்னருக்கு உரைப்போம் வருக.

தோழி:- அங்ஙனமே செய்வோம். ஆரடியங்கே? நம் கோப்பெருந்தேவியார் அரசர் அவைக்குச் செ ல்கின்றார். அதி விரைவில் அட்டமங்கலங்கள் ஏந்தி வாருங்கள்.

ஏவல் மகளிர்:- இதோ வந்துவிட்டோம் அம்மணி.

(திரை விழுதல்)

**காட்சி - 2**

**பாத்திரங்கள்:- பாண்டியன் நெடுஞ்செழியன், கோப்பெருந்தேவி, கண்ணகி, மந்திரிகள், பிரதானிகள், வாயிற்காவலன், ஏவல் மகளிர் முதலியவர்**

**இடம்:- பாண்டியன் அவைக்களம்**
**காலம்:- முற்பகல்**

(பாண்டியன் நெடுஞ்செழியன் அரியணையில் அமர்ந்திருக்கின்றான். பாண்டிமாதேவி சபையை நோக்கி வருகின்றாள். அவளை ஏவல் மகளிர் அட்டமங்கலங்களை ஏந்திக்கொண்டு சூழ்ந்து வருகின்றனர்)

ஏவல் மகளிர்:- பாண்டியரின் பெருந்தேவி வாழ்க!
கோப்பெருந்தேவியார் வாழ்க!

(பாண்டிமாதேவி அரசர் அருகில் வந்து வணங்குகின்றாள்.)

நெடுஞ்செழியன்:- தேவி! மீனாட்சி சுந்தரர் அருளால் மங்களம் உண்டாகட்டும். (தன் அரியணையின் ஒரு புறத்தைச்சுட்டி) இங்கு அமர்க. திடீரென்று நம் அவையின் கண்வரக் காரணம் யாதோ? ஏன் உன் முகம் வாடியிருக்கின்றது? உடல் நலமின்றோ பிற காரணம் யாதேனுமுண்டோ?

கோப்பெருந்தேவி:- நாதரே! அடியாள் இன்று விடியற்காலையில் சில தீக்கனவுகள் கண்டேன். அது முதல் என் உள்ளம் நடுங்குகின்றது. நம் செங்கோலும், வெண்கொற்றக் குடையும் நிலத்தில் வீழ்ந்தன. அரண்மனை வாயிலில் ஆராய்ச்சி மணியின் குரல் நடுங்கியது.

நெடுஞ்செழியன்:- ஆ! என்ன செங்கோலும் குடையும் நிலத்தில் வீழ்ந்தனவா? அமைச்சர் பெருமக்களே, கேட்டீர்களா கோப்பெருந்தேவி கூறியதை!

(அத்தருணத்தில் அவைக்கு வெளியே நின்ற வாயில் காவலனைக் கண்ணகி அணுகி)

கண்ணகி:- வாயிலோயே! வாயிலோயே! அறநெறி மறந்த அரசனின் வாயிலோயே! 'கணவனை இழந்தாள் ஒருத்தி, கையிற் சிலம்பொன்று ஏந்தி வந்து வாசலில் காத்திருக்கின்றாள்' என்று நீதி கெட்ட நெடுஞ் செழியனுக்கு அறிவிப்பாயாக!

காவலன்:- (அரசனை அணுகி) அரசர் பெருமானே! வாயிலில் வந்திருக்கிறாள் ஒருத்தி. அவள் எருமைக் கடாவை வாகனமாகக் கொண்ட கொற்றவையும் அல்லள், பிடாரியும் அல்லள், பத்திரகாளியும் அல்லள், அவள் கண்கள் கோபக் கனலைக் கக்குகின்றன. கணவனை இழந்தவளாம். கையிற் சிலம்பொன்று ஏந்தியுள்ளாள்.

நெடுஞ்செழியன்:- அவள் வருக; அவளை விரைவில் உள் விடுக.

(கண்ணகி சபையில் வந்து மன்னன் முன் நிற்கின்றாள்)

நெடுஞ்செழியன்:- பெண்ணே, ஏன் கண்ணீர் சொரிகின்றாய்? நீ யார்?

கண்ணகி:- நான் புகார் நகரில் வாழ்கிறேன். அவ்வூர்ப் பெருங்குடி வணிகர் மாசாத்துவன் என்பவரின் புதல்வி. கோவலருக்கு மனைவியான். அவர் ஊழ்வினையால் உமது நகரில் வந்து, என் காற்சிலம்பொன்றை விலைப்படுத்த விரும்பி, உம்மாற் கொலையுண்டார். என் பெயர் கண்ணகி.

நெடுஞ்செழியன்:- நன்று! கள்வனைக் கொல்லுதல் நீதி தானே?

கண்ணகி:- தீரக் கேட்டறியாமல் கொலைக் கட்டளையிட்டுக் கோவலரைக் கொன்றமையால், உமது நீதி முறைமை கெடுவதாயிற்று. அதனைக் காட்டுவேன். என் சிலம்பின் அரி மாணிக்கம்.

நெடுஞ்செழியன்:- என் தேவியுடைய சிலம்பின் பரல் முத்தே. (உடனே இரண்டு சிலம்புகளும் கொண்டு வந்து வைக்கப்படுகின்றன. கண்ணகி தன் காற்சிலம்பை எடுத்துத் தரையின் மீது வீசி எறிகிறாள். அது உடைகிறது. அதனுள் இருந்தவை அரிய மாணிக்கம் என்பதை அரசன் காண்கிறான்)

ஆ! என்னே! என் மதி! என்னே என் முறை! அந்தோ! பொற்கொல்லன் பொய்யுரை கேட்ட யானோ அரசன்! யானே கள்வன். என் அருமரபு என்னால் பழியுற்றதே! என் ஆயுள் கெடுவதாக!

(அரசன் அரியணையிற் சாய்ந்து மரண மடைகின்றான். அதைக் கண்ணுற்ற பாண்டிமா தேவி அவன் மீது வீழ்ந்து மரண மடைகின்றாள்)

(திரை விழுதல்)

### ◆ அரும்பதங்கள்

பாங்கி - தோழி
உற்பாதம் - தீங்கு (தீமை)
பொற்கொல்லன் - தங்க நகை செய்பவன்
கொற்றவை - துர்க்கை
கனல் - தீ

### கிரகித்தல் பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. இப்பாடத்தில் வரும் கதா பாத்திரங்களைத் தருக.
2. பாண்டிமாதேவி கண்ட கனவு யாது?
3. வாயிற்காவலன் கண்ணகி பற்றி அரசனிடம் கூறுவது யாது?
4. அரசனிடம் கண்ணகி தன்னை எவ்வாறு அறிமுகப்படுத்துகிறாள்?
5. இப்பாடத்தின் மூலம் நீர் பெற்றுக்கொள்ளும் படிப்பினை யாது?

### மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

1. சிலப்பதிகாரம் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுக.
2. வகுப்பறையில் இந்நாடகத்தைப் பாத்திரமேற்று நடிக்க வழிகாட்டுக.
3. இந்நாடகத்தைச் சிறு கதையாகக் கூற வழிகாட்டுக.

## பந்தி அமைத்தல்

ஒருவர் தாம் கூற வந்த கருத்தைத் தெளிவாக எடுத்துரைப்பதற்கு பந்தியமைப்பு முக்கியமாகின்றது. கருத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் வாசிப்போர் மனதில் கருத்துக்கள் இலகுவில் பதியவும் பந்தி யமைப்பு அவசியமாகின்றது.

### பந்தி ஒன்றை அமைப்பதற்கான படிமுறை

★ குறித்த விடயம்பற்றிய குறிப்புக்களை வாக்கியங்களாக எழுதுதல்
★ வாக்கியங்களை ஒழுங்குபடுத்தல்
★ ஒழுங்கமைந்த முறைக்கேற்ப வாக்கியங்களை இணைத்தல்
★ வாசகர் மனத்தில் பதியும்படியான பந்தியை அமைத்தல்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## பந்தியின் பண்புகள்

★ தலைமைப் பொருளைக் கொண்டிருத்தல்
★ துணைக் கருத்துக்களைக் கொண்டிருத்தல்
★ கருத்துத் தொடர்பைக் கொண்டிருத்தல்

## பந்தி ஒன்றில் தவிர்க்கப்பட வேண்டியவை

★ கூறியது கூறல்
★ மிகைப்படக் கூறல்
★ முன்னுக்குப் பின் முரணாகக் கூறல்
★ சொல்ல வந்த பொருளைத் தவிர்த்து வேறு ஒரு பொருளைப் பற்றிக் கூறல்

**பயிற்சி**

*(அ) பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி ஒரு பந்தியாக எழுதுங்கள்:*

1. ஒருவரது வாழ்வின் அரிய சாதனையை வெளிப்படுத்தும் பகுதிகளைக் கூறின.
2. பண்டைய காலத்தில் குறைந்த அடிகளையுடைய பல தனிப்பாடல்கள் புலவர்களால் பாடப்பட்டன.
3. சுவைமிக்க நிகழ்ச்சிகளை வருணித்தன.
4. இலக்கிய வளம் மிக்க மொழி.
5. அடிப்படைகளைத் தொகுத்து தொகை நூல்களாக பிற்காலப் புலவர்கள் அமைத்தனர்.
6. தமிழ்மொழி இனிய மொழி.
7. அவை உணர்ச்சிகளை வெளிப்படுத்தின.
8. அவையே எட்டுத்தொகை நூல்களாயின.


*(ஆ) பின்வரும் தொனிப்பொருளில் பந்திகளை எழுதுக.*

1. சூழல்
2. சூழலைப் பாதுகாத்தல்

# 12 செய்தித் தாள்கள்

## முன்னுரை

அறிவியலின் வளர்ச்சியினால் இன்று உலகமே சுருங்கியிருக்கின்றது. உலகத்தில் எங்கோ ஒரு மூலையில் நடைபெறுகின்ற நிகழ்ச்சியும் உடனுக்குடன் அனைத்துலகத்தவரும் அறிந்துகொள்ளும் வசதிகள் நிறைய ஏற்பட்டுள்ளன. வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள் முதலியவை மூலம் செய்திகள் விரைந்து பரவுகின்றன. இந்தக் கட்டுரையில் செய்தித் தாள்களின் தோற்றம், வளர்ச்சி, பயன்கள் முதலியவை குறித்து அறிவோம்.



## தோற்றம்

ஆங்கிலத்தில் செய்திகளைக் குறிக்க நியூஸ் என்ற சொல் உள்ளது. அந்தச் சொல்லில் உள்ள ஒவ்வோர் எழுத்தும் ஒவ்வொரு சொல்லை உணர்த்துவதாகக் கூறுவர். N என்பது வடக்கு (North), E என்பது கிழக்கு (East), W என்பது மேற்கு (West), S என்பது தெற்கு

(South) என்று நான்கு திசைகளையும் குறிப்பதாகக் கூறுவர். உலகின் முக்கிய நான்கு திசைகளிலும் நடைபெறும் செய்திகளைத் தருவதால் (News Papers) செய்தித் தாள்கள் என்று காரணப் பெயர் வந்ததாகச் சொல்வர்.


தேச நேசன்
(THESA-NESAN)

உலகத்தின் முதல் செய்தித் தாள், கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் இத்தாலி நாட்டில் தோன்றியது என்பர். கி.பி. 1633 ஆம் ஆண்டில் இங்கிலாந்திலும், 1835 இல் இந்தியாவிலும் செய்தி இதழ்கள் வெளிவந்தன. இங்கிலாந்திலிருந்து வெளியான பொது அறிவுச் செய்தி இதழ் பப்ளிக் இன்டெல்லிஜன்ஸ் (Public Intelligence) என்பதாகும். இந்தியாவில் அரசினர் ‘கெஜட்’ (Gazette) என்ற செய்தி இதழை வெளியிட்டனர். அதன் பின்னர் பல நாடுகளிலும் பற்பல செய்தி இதழ்கள் தோன்றின.

ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த ஜான் கூட்டன்பர்க் என்ற அறிஞர் அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். காகிதம் செய்யும் முறை கண்டுபிடிக்கப்பட்டு அது பெரிதும் வளர்ச்சியுற்ற நிலையில் செய்தித் தாள்கள் ஆங்காங்கே சிறப்பாக வெளிவரலாயின.

ஆரம்ப காலங்களில் செய்திகளை மட்டுமே தெரிவித்து வந்த இதழ்கள், கால வளர்ச்சியில் பலதுறை அறிவுகளையும் மக்களுக்குத் தெரிவிக்கும் வகையில் வெகுவாக வளர்ச்சியடைந்தன. உலக நடப்புகளை அறிவிப்பதுதான் செய்தித்தாள்களின் முக்கிய குறிக்கோள் என்று இன்றளவும் கருதப்பட்டாலும் அறிவியல், இலக்கியம், அருங்கலைகள், ஆன்மிகம், விளையாட்டு, வேடிக்கை, பொழுது போக்கு என்று பல்துறைகளைப் பற்றியும் தாங்கிவரும் ஏடுகளாகச் செய்தித்தாள்கள் விரிவான நோக்கத்தைப் பெற்றுள்ளன. இன்றைய எல்லா நாட்டுச் செய்தித் தாள்களும் கட்டுரை, கவிதை, நாடகம், ஆராய்ச்சி என்று பல வடிவங்களுக்குமுரிய இலக்கியப் பணிகளைச் சிறப்பாக ஆற்றி வருகின்றன. சமயக் கருத்துக்களைச் சாற்றி இறை பக்தியையும், ஆன்ம ஒருமைப்பாட்டையும் வளர்த்து வருகின்றன.

நாடகம், சினிமா, கேளிக்கை போன்றவற்றைப் பற்றி விளக்கியும் விமர்சனம் செய்தும் மக்களுக்குப் பொழுதுபோக்கு அம்சங்களை அளித்து வருகின்றன. வீரம், விளையாட்டு, வெற்றி, சாதனை போன்ற விஷயங்களைப் பற்றியும் மக்களுக்குச் செய்தித்தாள்கள் வெளியிட்டு வருகின்றன. செய்தித் தாள்களைப் படிப்பதன் மூலம் நம் நாடு தொடர்பான செய்திகளையும் வேறு பல நாட்டுச் செய்தி களையும் அறிய முடிவதால், படிப்பவரின் உலகியலறிவு நாளும் பெருகி வளரும். இன்றைய நாளில் செய்தித்தாள் மக்களின் அன்றாடத் தேவைகளில் முக்கிய ஒன்றாகிவிட்டது. தாய் மொழியில் வெளியாகும் செய்தித் தாளோடு ஆங்கில செய்தித் தாளையும் வாங்கிப் படிக்கும் பழக்கம் பெரும்பாலாரிடம் உள்ளது. செய்தித் தாளை காசு கொடுத்து வாங்கிப் படிக்க வசதியில்லாதவர்கள் அக்கம்பக்கத்தில் இரவல் வாங்கியாவது படிக்கிறார்கள். மற்றும் சிலர் பக்கத்தில் உள்ள வாசிகசாலைக்குச் சென்று படித்துச் செய்திகளை அறிந்துகொள்கிறார்கள். மொத்தத்தில் அன்றாடச் செய்தி களைப் படிக்கத் தவறிவிடுகின்ற நிலையில் அதை ஒரு பெரிய இழப்பாகவே கருதுகின்ற நிலைமை உருவாகியிருக்கின்றது.

## செய்தித்தாளின் பயன்கள்

உலகத்தில் ஒரு மூலையில் நடைபெறும் ஒரு சிறிய நிகழ்ச்சியை அடுத்த சில மணி நேரங்களுக்குள் செய்தித்தாள்கள் மூலமாக அகில உலகமும் அறிந்துகொள்ள முடிகிறது. செய்தித்தாள்கள், சினிமா, நாடகம், இசை போன்ற கலைகளின் வளர்ச்சிக்கும் பெரும் பங்கு ஆற்றுகின்றன. பலவித கலைகளைப் பற்றிய விமர்சனங்களாலும் கலைகள் தரமான, ஆக்கபூர்வமான, வளர்ச்சி பெறுவதோடு கலைஞர்கள் முன்னேற்றமடையவும் முடிகின்றது. மொழி வளர்ச்சிக்கும் புதிய புதிய ஆராய்ச்சி உத்திகளுக்கும் கூடச் செய்தித்தாள்கள் பேருதவி புரிகின்றன என்று கூறலாம்.

பலநாட்டு அரசியல் முறைகளை அறிவதோடு, உலக அரசியலைப் பற்றிய ஒட்டுமொத்தமான அறிவையும் பெறுவதற்குச் செய்தித்தாள்கள் பெருந்துணை புரிகின்றன. உலக அமைதிக்கும் அது உதவி புரிகின்றது.

சிந்தனையாளர்கள், அறிவியல் ஆராய்ச்சியாளர்கள், ஆன்மிக வாதிகள், அரசியல்வாதிகள் முதலானோரின் பேச்சுகளும் எழுத்துகளும் செய்தித் தாள்களில் வெளியிடப்படுகின்றன. அவற்றைப் படிப்பவர் பயனடையலாம். அரசாங்க அறிவிப்புகள், அறிக்கைகள், எச்சரிக்கைகள், விளம்பரங்கள் போன்றவற்றைப் பொதுமக்கள் செய்தித் தாள்களின் வாயிலாக அவ்வப்போது அறிந்துகொள்ள முடிகிறது.

பஞ்சம், வெள்ளம், விபத்து, போர் போன்றவை ஏற்படுகின்றபோது, செய்தித் தாள்கள் அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் பாலமாக அமைந்து ஆவன செய்கின்றன. செய்தித் தாள்களில் இடம்பெறும் வாசகர்குரல், மக்கள் மேடை, ஆசிரியருக்குக் கடிதம் போன்றவை வாயிலாக, பொதுமக்கள் தங்கள்தேவைகளையும், குறைபாடுகளையும், கோரிக்கைகளையும், விமர்சனங்களையும் அரசாங்கத்துக்கு எடுத்துக்கூற முடிகின்றது. அரசாங்கமும் அதிகாரிகளும் செய்தித்தாள்களின் வாயிலாக வெளியாகும் மக்கள் குரலுக்கு மதிப்பளித்து, குறைகளைக் களையவும், நிவாரணப் பணிகளில் ஈடுபடவும், அரசியல் திட்டங்களைப் பற்றிய பொதுமக்களின் கருத்துக்களையும் ஆலோ சனைகளையும் அறிய முடிகின்றது.

## முடிவுரை

இவ்வாறு, மக்களுக்குப் பலதுறை அறிவினையூட்டும் ஆசானாகவும், பொதுமக்களுக்கும் அரசுக்கும் இடையே அமைந்த நல்லுறவுப் பாலமாகவும், காலத்தின் கண்ணாடியாகவும், விவாத மேடையாகவும் இன்னும் பலவாறெல்லாம் பணியாற்றிவரும் செய்தித் தாள்கள் கடமையுணர்வோடும் பொறுப்புணர்வோடும் பணியாற்றி நாட்டின் முன்னேற்றத்துக்கு உறுதுணையாக விளங்குகின்றன. இத்தகு சிறப்புக்குரிய செய்தித் தாள்களின் வளர்ச்சிக்கு நாம் உதவ வேண்டும். செய்திகளைப் படித்துச் சீர்தூக்கிச் செயல்பட்டு வாழ்வில் செம்மை நிலை அடைவோமாக!

**எஸ். ஆர். கோவிந்தராசன்**

◆ **அரும்பதங்கள்**

உத்திகள் - வழிமுறைகள்
களைதல் - நீக்குதல்

**கிரகித்தல் பயிற்சி**

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. செய்திகளைத் தெரிவிக்கும் ஊடகங்கள் எவை?
2. உலகின் முதல் செய்தித் தாள் எங்கே எப்போது தோற்றம் பெற்றது?
3. செய்தித்தாளில் வெளிவரும் வேறு விடயங்கள் யாவை?
4. செய்தித்தாளின் பயன்கள் நான்கு தருக.
5. செய்தித்தாளின் பணிகள் நான்கு தருக.

**மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்**

1. எமது பாவனையிலுள்ள செய்தித் தாள்கள் பற்றி கலந்துரையாடுக.
2. செய்தித் தாள்களின் வகைகளை வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
3. செய்தித் தாளில் பிரசுரிப்பதற்கான ஆக்கம் ஒன்றை எழுத வழிப்படுத்துக.

# 13 செய்ந்நன்றி அறிதல்



தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமை செய்ந்நன்றி எனப்படும். இனியவை கூறி இல்லறம் வழுவாதார்க்கு செய்ந்நன்றி அவசியம் என்பதால் இனியவை கூறல் என்ற அதிகாரத்தின் பின் வைக்கப்பட்டது.

1. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
   வானகமும் ஆற்றல் அரிது

**செய்யாமல் செய்த உதவிக்கு** - தனக்கு முன் ஓர் உதவி செய்யாதிருக்க ஒருவன் பிறருக்குச் செய்த உதவிக்கு, **வையகமும் வானகமும் ஆற்றல் அரிது** - மண்ணுலகும் விண்ணுலகும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஒத்தல் அரிது.

கருத்துரை - முன் ஓர் உதவியும் செய்யாதிருக்க, தனக்குப் பிறன் செய்யும் உதவிக்கு ஈடாக மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் கொடுத்தாலும் போதாது.

2. காலத்தினால் செய்த நன்றி சிறிதுஎனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது

***காலத்தினால் செய்த நன்றி*** - ஒருவனுக்கு இறுதி வந்த எல்லைக்கண் ஒருவன் செய்த உபகாரம், ***சிறிது எனினும் ஞாலத்தில் மாணப் பெரிது*** - தன்னை நோக்கச் சிறியதாயிருந்தது ஆயினும் அக்காலத்தை நோக்க நிலவுலகத்தினும் மிகப் பெரிது.

*கருத்துரை* - ஒருவன் காலத்தால் செய்த உதவி சிறியதாயினும் அது உலகினும் பெரிது.

3. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது

***பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்*** - இவர்க்கு இது செய்தால் இன்னது பயக்கும் என்று ஆராய்தல் இலராய்ச் செய்த உதவியாகிய ஈரமுடைமையை ஆராயின், ***நன்மை கடலின் பெரிது*** - அதன் நன்மை கடலினும் பெரிது ஆகும்.

*கருத்துரை* - பயனை எதிர்பாராமற் செய்த உதவியின் நன்மை கடலினும் பெரிதாகும்.

4. தினைத்துணை நன்றி செயினும், பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரிவார்

***தினைத்துணை நன்றி செயினும்*** - தமக்குத் தினையளவிற்றாய உபகாரத்தை ஒருவன் செய்தானாயினும், ***பனை துணையாக்கொள்வர் பயன் தெரிவார்*** - அதனை அவ்வளவிற்றாக் கருதாது பனை யளவிற்றாகக் கருதுவர் அக் கருத்தின் பயன் தெரிவார்.

*கருத்துரை* - தினை அளவு உதவி செய்தாலும் அதனைப் பனை அளவாகக் கொள்வர் பெரியோர்.

5. உதவி வரைத்தன்று உதவி; உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து

**உதவி வரைத்து அன்று** - கைம்மாறான உதவி காரணத்தாலும் பொருளானும் காலத்தானும் ஆகிய மூவகையானும் முன்செய்த உதவியளவிற்று அன்று. **உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து** - அதனைச் செய்வித்துக்கொண்டவர் தம் அமைதி அளவிற்று.

கருத்துரை - உதவிக்கு அளவில்லை. அது பெற்றுக்கொண்டவர் தகுதியின் அளவை உடையதாகும்.

6. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்புஆயார் நட்பு

**துன்பத்துள் துப்பு ஆயார் நட்பு துறவற்க** - துன்பக் காலத்துத் தனக்குப் பற்றுக்கோடாயினாரது நட்பை விடாதொழிக. **மாசு அற்றார் கேண்மை மறவற்க** - அறவொழுக்கங்களில் குற்றமற்றாரது கேண்மையை மறவாதொழிக.

கருத்துரை - குற்றமற்றவர் நட்பை மறக்கக் கூடாது. துன்பக் காலத்தில் உதவியவரின் நட்பை விடலாகாது.

7. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தம்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு

**தம்கண் விழுமம் துடைத்தவர் நட்பு** - தம்கண் எய்திய துன்பத்தை நீக்கினவருடைய நட்பினை, **எழுமை எழுபிறப்பும் உள்ளுவர்** - எழுமையினையுடைய தம் ஏழு பிறப்பினும் நினைப்பர் நல்லோர்.

கருத்துரை - துன்பத்தைப் போக்கினவரின் நட்பை ஏழு பிறப்பிலும் நினைப்பர் பெரியோர்.

8. நன்றி மறப்பது நன்றன்று நன்று அல்லது
அன்றே மறப்பது நன்று

**நன்றி மறப்பது நன்று அன்று** - ஒருவன் முன் செய்த நன்மையை மறப்பது ஒருவற்கு அறன் அன்று. **நன்று அல்லது அன்றே மறப்பது நன்று** - அவன் செய்த தீமையைச் செய்த பொழுதே மறப்பது அறன்.

கருத்துரை - ஒருவர் செய்த உதவியை மறப்பது அறம் அன்று. அவர் செய்த தீமையை அன்றே மறப்பதே தருமம் ஆகும்.

9. கொன்று அன்ன இன்னா செயினும், அவர் செய்த
ஒன்று நன்று உள்ளக்கெடும்

**கொன்று அன்ன இன்னா செயினும்** - தமக்கு முன் ஒரு நன்மை செய்தவர் பின் கொன்றால் ஒத்த இன்னாதவற்றைச் செய்தாராயினும், **அவர் செய்த நன்று ஒன்று உள்ளக் கெடும்** - அவையெல்லாம் அவர் செய்த நன்மை ஒன்றையும் நினைக்க இல்லையாம்.

கருத்துரை - நன்மை செய்தவர் கொன்றாற் போலும் தீமை செய்தாலும் முன் செய்த நன்மையை நினைத்தால் தீமையெல்லாங் கெடும்.

10. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுஉண்டாம் உய்வு இல்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுஉண்டாம்** - பெரிய அறங்களைச் சிதைத்தார்க்கும் பாவத்தின் நீங்கும் வாயில் உண்டாம். **உய்வு இல்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு** - ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்த மகனுக்கு அஃது இல்லை.

கருத்துரை - எவ்வகைத் தருமங்களை அழித்தவர்களுக்கும் தப்ப வழியுண்டாம். செய்ந்நன்றி மறப்பவர்க்கு கடைத்தேற வழியேயில்லை.

◆ **அரும்பதங்கள்**

| | | | |
|---|---|---|---|
| வையகம் | - உலகம் | ஞாலம் | - உலகம் |
| தினை | - சிறிய தானிய வகை | மாசற்றார் | - குற்றமற்றவர் |
| கேண்மை | - நட்பு | விழுமம் | - துன்பம் |
| இன்னா | - தீமை | | |

கிரகித்தல் பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. செய்ந்நன்றி அறிதல் என்றால் என்ன?
2. இவ்வதிகாரம் எவ்வதிகாரத்தின் பின் வைக்கப்பட்டுள்ளது?
3. செய்யாமல் செய்த உதவி பற்றி வள்ளுவர் என்ன கூறுகின்றார்?
4. எதனை மறக்க வேண்டும், எதனை மறக்கக் கூடாது என வள்ளுவர் கூறுகின்றார்?
5. செய்ந்நன்றி மறந்தவரின் நிலை யாது?
6. இவ்வதிகாரத்தில் உதவி பற்றிக் கூறியுள்ளவற்றைத் தருக.

மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்


1. திருக்குறள்களை மனனம் செய்து ஓதுவதற்கு வழிகாட்டுக.
2. திருவள்ளுவர் பற்றிய குறிப்புரை எழுதுவதற்கு விளக்கமளிக்குக.
3. திருக்குறளின் கருத்துக்களை தமது சொந்த மொழிநடையில் கூற வழிகாட்டுக.

**பயிற்சி**

1. தரப்பட்டிருக்கும் குறள்களைச் சந்தி பிரித்து மீண்டும் எழுதிக் காட்டுக.
2. திருக்குறள் பற்றிய பேச்சொன்றை எழுதிக்காட்டுக.

# 14 சேர். ஐசாக் நியூற்றன்

இங்கிலாந்திலே ஊல்ஸ்தோப் என்னும் கிராமத்திலே அப்பிள் மரங்கள் நிறைந்த தோட்டமொன்று இருந்தது. அக்கிராமத்தில் வசித்த ஆங்கில இளைஞன் ஒருவன் ஒருநாள் அத்தோட்டத்தின் மரநிழலில் அமர்ந்து சிந்தனையில் மூழ்கியிருந்தான். அப்பொழுது அப்பிள் பழமொன்று அவனருகில் விழுந்தது. பழுத்த அப்பிள் பழங்கள் இவ்வாறு விழுவதை அவன் முன்னரும் பலமுறை பார்த்திருக்கிறான். ஆனால் இன்று அது அவனுடைய ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டியது.



பழமும் ஏனைய பொருள்களும் கீழ்நோக்கி விழுவதேன்? அவை மேல் நோக்கி ஏன் செல்லவில்லை? என்ற விசாரணை அவன் உள்ளத்தில் உதித்தது. அவ்விசாரணைக்கு விடை காண அவன் பல ஆராய்ச்சிகள் செய்தான். ஈற்றில், புவியீர்ப்பு அதற்குக் காரணமெனக் கண்டறிந்தான். அவனே ஐசாக் நியூற்றன் என்னும் விஞ்ஞானி.

ஆயிரத்து அறுநூற்று நாற்பத்திரண்டாம் ஆண்டு நத்தார் தினத்தன்று நியூற்றன் பிறந்தார். நத்தார் தினப் பரிசாக அவர் உலகுக்குக் கிடைத்தாரென்று அறிஞர் பாராட்டுகின்றனர். அவர் தாயின் வயிற்றில் இருந்தபோதே அவரது தந்தை இறந்துவிட்டார். அதனால் அக்குடும்பம் வறுமையால் வாடியது. தாயார் மறுமணஞ் செய்தபடியால், இரண்டாவது வயது முதல் நியூற்றன் தமது பாட்டியாருடனேயே வளர்ந்து வந்தார்.

இளமைப் பருவத்தில் நியூற்றன் காற்றாடி, நீர்க்கடிகாரம் போன்றவை செய்யும் முயற்சியிலே பெரும் பொழுதைக் கழித்தார். படம் வரைவதிலும் வாசிப்பதிலும் ஆர்வமுடையவராக இருந்தார். பதினான்காவது வயதில் நியூற்றன் மீண்டும் தாயாருடன் வாழச் சென்றார். விவசாயம் அவர்களது குடும்பத் தொழிலாகையால் அத்தொழிலில் மகனுக்குப் பயிற்சியளிக்கவே தாய் விரும்பினார். ஆனால், நியூற்றனோ தோட்டத்தில் வாசிப்பார், சிந்திப்பார் அல்லது ஆக்கபூர்வமான விளையாட்டில் ஈடுபடுவார். ஈற்றில் அவரது ஆர்வத்தையும் ஆற்றலையும் கண்டு, கல்வி பயில்வதற்காக அவரைக் கேம்பிரிட்சு பல்கலைக்கழகத்திற் சேர்த்தனர். நியூற்றன் தமது இருபத்திரண்டாவது வயதிலே பட்டதாரியாகி, இருபத்தாறாவது வயதிலே கணிதப் பேராசிரியரானார்.

விஞ்ஞான வளர்ச்சிக்காக அவர் செய்த சேவைகள் பல. அவர் புவியீர்ப்புக் கொள்கையைக் கண்டறிந்து விளக்கினார். இருட் டறையினுட் சூரிய ஒளிக்கற்றையைச் சிறு துவாரம் வழியாகப் புக விட்டுப் பல பரிசோதனைகள் செய்தார். அவற்றால், சூரிய ஒளியில் ஏழு நிறங்கள் உண்டு என்பதைக் காட்டினார். அவரது அரிய சேவை களைப் பாராட்டுமுகமாக அவருக்கு சேர் என்ற பட்டம் வழங்கப்பட்டது.

சிந்தனையில் மூழ்கித் தம்மையே மறந்திருப்பது நியூற்றனது இயல்பு. ஒருநாள் மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது, கண்துஞ் சாது தமது பணியில் அவர் ஈடுபட்டிருந்தார். அவரது உணவு,

மேசையிலே உண்ணப்படாமலே இருந்தது. உணவை உண்ணாது அவர் கருமமே கண்ணாயிருந்தார். அங்கே வந்த நியூற்றனின் நண்பர் ஒருவர் குறும்பு செய்ய எண்ணி, உணவைத் தாமே உண்டு வெறும் பாத்திரங்களை விட்டுச் சென்றார். நெடுநேரங் கழித்து மிக்க பசியுடன் நியூற்றன் உணவை நாடி வந்தார். அங்கே உணவு இல்லை. வெறும் பாத்திரங்களே இருந்தன. அவற்றைப் பார்த்த அவர், நான் உணவு உண்ணவில்லை என்றல்லவா எண்ணினேன். நான் முன்னரே உணவை அருந்திவிட்டேன் என்று கூறித் திரும்பிச் சென்றார்.

நியூற்றன் தற்பெருமை இல்லாதவர். தமது சாதனைகள் மிகமிக அற்பமானவை என்றே எண்ணினார். அதனால் தமக்கு முன் வாழ்ந்த விஞ்ஞானிகளை அவர் போற்றினார்.

### ◆ அரும்பதங்கள்

மெய் - உடல்
துஞ்சாது - தூங்காது
அற்பமானவை - சிறியவை

**கிரகித்தல் பயிற்சி**

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. நியூற்றன் எங்கே வாழ்ந்தார்?
2. நியூற்றன் முதலில் எதனைக் கண்டுபிடித்தார்?
3. நியூற்றன் எப்போது பிறந்தார்?
4. சூரியஒளியில் ஏழு நிறங்கள் உண்டு என்பதை எவ்வாறு கண்டுபிடித்துக் காட்டினார்?
5. அவர் தமது பணியில் எவ்வாறு ஈடுபட்டிருப்பார்?

**செயற்பாடு**

கண்டுபிடிப்பாளர்களையும் அவர்களது கண்டுபிடிப்புகளையும் தேடித் தொகுத்து வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

# 15 புகழ்ச்சி இகழ்ச்சியை அளித்த கதை

பெருங்குடி என்னும் ஊரில் மழவராயன் என்ற பெயருடைய ஒருவன் இருந்தான். அவன் அவ்வூரில் இருந்த பெரும்புலவர் ஒருவரிடம் திருக்குறள், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் முதலிய பல நூல்களைப் படித்துக் கொண்டான். அதனால் அவனுக்கு அறிவு ஓரளவு மிகுதிப்பட்டது. ஆயினும் பிற இலக்கியங்களையும் இலக்கணத்தையும் கற்காத படியால் ஊரார்கள் மழவராயனை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. அறிவு மிகுதிப்பட்டு அது பலருக்கும் பயன்படத்தக்க முறையில் பயன்பட்டு எல்லோராலும் நன்கு உணரப்பட்டால் மதிப்புத் தானே உண்டாகும். இந்த உண்மையை மழவராயன் உணர்ந்து கொள்ளவில்லை. அவன் 'என்ன இந்த ஊர் மக்கள்; ஒன்றுந் தெரியாதவர்களாக இருக்கிறார்கள். நல்ல நூல்களைப் படித்த நம்மை எவரும் ஒரு பொருட்டாக மதிக்கவில்லையே' என்று உள்ளம் புழுங்கினான்.

உள்ளம் புழுங்கிய மழவராயன் பேசாமல் இருக்கவில்லை. பலரிடமும் தான் கல்வி கற்றுள்ளதைப் பற்றியும் தனக்கு அறிவு முன்பு இருந்ததைவிடக் கற்றபிறகு மிகுதியாக இருத்தலைப் பற்றியும் தன்னைத்தானே மிகுதியாகப் புகழ்ந்து பேசிக்கொண்டான். தன்னாற் புராணச் சொற்பொழிவுகள் செய்ய முடியுமென்றுங் கேட்பதற்குத் தக்க மனிதர்கள் அவ்வூரில் இல்லையென்றும் தான் புராணச் சொற்பொழிவு செய்தால் கேட்பவர்கள் ஒன்றும் விளங்காமல் விழிப்பார்கள் என்றுந் தன்னுடைய மனம் போனவாறு பேசினான். மழவராயன் கூறியதைக் கேட்ட மற்றவர்கள் 'மழவராயன் ஏதோ சிறிதேனும் கல்வி கற்றிருக்கிறான் என்று எண்ணிக் கொண்டிருந் தோமே பெரிய முட்டாளாகவன்றோ இருக்கிறான்' என்று எள்ளி நகையாடினார்கள். புகழ்ச்சியை விரும்பிய மழவராயனுக்கு ஏற் பட்டது இகழ்ச்சிதான். ஒருவன் தன்னுடைய பெருமையை

மிகுதிப்படுத்திக் கொள்ளுமாறு தன்னைத் தானே புகழ்ந்து பேசுதல், விளக்கில் தீச்சுடரை மிகுதிப்படுத்துவதற்கு அதனில் தண்ணீரை ஊற்றித் தூண்டிவிட்டாற் போன்றதாம் என்பது மழவராயனிடம் உண்மையாக முடிந்துவிட்டது.

### கிரகித்தல் பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. இப்பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கிய நூல்கள் யாவை?
2. மழவராயனுக்கு ஏற்பட்ட கவலை யாது?
3. ஊரார்கள் மழவராயனை ஏன் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை?

### மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

1. இது போன்று படிப்பினையூட்டும் வேறு கதைகளைச் சேகரிக்குக.
2. மழவராயன் என்ற கதாபாத்திரம் பற்றிக் கலந்துரையாடுக.
3. நன்கு கற்ற பெரியோர்களின் பெயர்களைப் பட்டியற்படுத்தி அவர்களின் பண்புகள் பற்றிக் கலந்துரையாடுக.
4. கல்வியின் சிறப்புப் பற்றி கலந்துரையாடி கட்டுரை எழுத மாணவர்களை வழிப்படுத்துக.

**பயிற்சி**

*கீறிட்ட இடங்களை நிரப்புக*

*(பெருமை, இலக்கண இலக்கியங்களை, சிறிதேனுங், புகழ்ந்து, பெருங்குடி)*

1. *மழவராயன் ............................... கல்வி கற்றிருக்கின்றான்.*
2. *அவன் தன்னைப் ............................... பேசிக்கொண்டான்.*
3. *மழவராயன் ............................... எனும் ஊரில் வாழ்ந்தான்.*
4. *............................... முறையாகக் கற்கவில்லை.*
5. *நல்ல நூல்களைக் கற்றால் ............................... உண்டாகும்.*

# 16 ஈசலும் புற்றும்

கறையான்கள் ஒன்று சேர்ந்து பல நாட்கள் உழைத்து ஒரு நல்ல வீட்டைக் கட்டி முடித்தன. அந்த வீட்டுக்கு பல வாயில்கள் அமைத்தன. கோபுரம் போன்றிருந்த அந்த வீட்டின் வாயில்கள் வானை நோக்கி அங்காத்திருந்தன. சில வாயில்கள் நிலத்திலும் அமைந்திருந்தன. வீட்டினுள்ளே சிறியதும், பெரியதுமான பல அறைகள் இருந்தன.

கறையான்கள் அந்த வீட்டில் வாழ்ந்தன. முட்டையிட்டன. குஞ்சு பொரித்தன. இவ்வாறு சில கறையான்கள் பரவலாகப் பெருகின. வேலை செய்யாமல் நீண்ட நாட்கள் உண்டு கொழுத்த கறையான்கள் பலவற்றிற்குச் சிறகுகள் முளைத்தன. அவை ஈசல்கள் என அழைக்கப்பட்டன. அந்தச் சிறகு முளைத்த கறையான்கள் தம்மை ஆள்பவராக நினைத்தன. சிறகு முளைக்காத கறையான்களை அடிமைகளாக நடத்தின. ஈசல்கள் கறையான்களிடம் வேலை வாங்கின. அவை உழைக்காது உண்டு மேலும் கொழுத்தன. இதனால் துன்பப்பட்ட கறையான்கள் கிளர்ந்தெழுந்தன.



‘‘நீங்களும் நாங்களும் ஒரே இனம். சிறகு முளைத்துவிட்டால் நீங்கள் பெரியவர்களா?’’ என்று கேட்டன.

‘‘இதைக் கேட்க உங்களுக்கு உரிமை இல்லை. நீங்கள் அடிமைகள். சொன்னதைச் செய்யுங்கள்’’ என்று ஈசல்கள் கறையான்களை அடக்கின. உரிமை கேட்ட கறையான்கள் நாள்தோறும் ஈசல்களால் கடித்துக் குதறப்பட்டன.

‘‘நீங்கள் செய்வது அநியாயம்’’ என்று வாதாடிய கறை யான்களை ஈசல்கள் பாய்ந்து பாய்ந்து தாக்கின.

‘‘உங்களைப் போல நாங்கள் அற்ப கறையான்களல்ல. நாங்கள் உங்களைவிட எல்லாவற்றிலும் உயர்ந்தவர்கள். சிறகு முளைத்தவர்கள்’’ என்று பெருமை பேசின.

‘‘அப்படியானால் நல்லது. நீங்கள் உயர்ந்தவர்களாகவே இருங்கள். நாங்கள் போய் வேறு வீடு கட்டிக்கொள்கிறோம்’’ என்று கூறிய கறையான்கள் அந்த புற்றைவிட்டுப் புறப்பட்டன.

‘‘நீங்கள் போவதா? எங்களை விட்டா? அது நடவாது. நீங்கள் அடிமைகள். காலம் முழுக்க எங்களுக்கு அடங்கிக் கிடந்து உழைக்க வேண்டியவர்கள்’’ என்று கூறிய ஈசல்கள் கறையான்களைத் தடுத்துத் தாக்கத் தொடங்கின. கொழுத்த ஈசல்களின் தாக்குதலுக்கு இலக்கான கறையான்கள் பல துடி துடித்து இறந்தன.

‘‘நாங்கள் போய்விட்டால் உங்களால் வாழ முடியாது. நாங்கள் போய்விட்டால் உங்களால் உணவு தேட முடியாது. அதுதான் எங்களைப் போகவிடாமல் தடுக்கின்றீர்கள். தன்மானமிருந்தால் எங்களை விட்டுவிட்டு நீங்கள் வாழுங்கள். வாழ்ந்து பாருங்கள்’’ என்று எதிர்த்துப் பேசிய கறையான்களை ஈசல்கள் கடித்துக்குதறி இழுத்து நிலத்தில் தள்ளி ஏறி மிதித்தன.

இவ்வாறு அந்த வீட்டில் வாழவும் முடியாது, ஓடிப்போகவும் முடியாது கறையான்கள் பட்ட துன்பம் சொல்லில் அடங்காது. தன்மானமுள்ள கறையான்கள் எதிர்த்து நின்று செத்து மடிந்தன. எஞ்சிய கறையான்கள் அடங்கியொடுங்கி அடிமைகளாக உழைத்தன.

ஈசல்களோ அப்பாவிக் கறையான்களின் உழைப்பை உண்டு கொழுத்துக் கிடந்தன. உல்லாச உலா வந்தன. காலம் ஓடியது. கோடை முடிந்தது. மாரி மலர்ந்தது. தலை மழை கண்ட விவசாயி வயலுக்கு வந்தான். வரம்பு கொத்தி மண் வைக்கத் தொடங்கினான். வயல் வெளியில் நான்கு வரம்புகளின் சந்திப்பில் கோபுரம் போல எழுந்து நின்ற புற்றினைக் கண்டான்.

'அடடா! எப்போது இந்தப் புற்று எழுந்தது?' என்று வியந்தான். 'எத்தனைப் பாம்புகள் இந்தப் புற்றில் இருக்குமோ?' என்று பயந்தான். அடுத்த கணம் மழைபெய்து இளகிப் போயிருந்த அந்தப் புற்றை அவனது கூரிய மண்வெட்டி பதம் பார்த்தது.



தமது வீடு சிதைபடுவதை உணர்ந்த அடிமைக் கறையான்கள் அந்த வீட்டின் நிலவறைகளில் ஓடி ஓடி ஒளிந்தன. இதைக் கண்ட ஈசல்கள் ''பயந்தாங் கொள்ளிகளே'' என்று பரிகசித்தன. ''நீங்கள் ஓடி நிலவறைகளில் பதுங்கிக்கொண்டால் தப்பி விடுவீர்களா? அந்த

கூரிய மண்வெட்டி நிலவறைகளையும் தகர்த்துப் பாயும்'' என்று சிரித்த ஈசல்கள், சிறகுகளை அசைத்த வண்ணம் எழுந்தன.

''கறையான்களே நீங்கள் அழிந்துபோக வேண்டியதுதான். சிறகுகள் இருந்தால் எங்களைப்போல பறந்து தப்பிக்கொள்ளலாமே! பாவம் என்ன செய்வீர்கள்? இப்போது சொல்லுங்கள் யார் உயர்ந்தவர்கள்? நாங்களா நீங்களா? இதோ பாருங்கள் நாங்கள் பறக்கிறோம்! உயர உயரப் பறக்கிறோம்'' என்று ஆரவாரித்தவாறே ஈசல்கள் எல்லாம் பறக்க ஆரம்பித்தன.

இருண்டு வந்த மழை சோவெனப் பொழிய ஆரம்பித்தது. விவசாயி மண்வெட்டியைத் தூக்கியவாறே வீட்டை நோக்கி ஓடினான்.

பறந்த ஈசல்கள் மழையிற்பட்டு சிறகொடிந்து வீழ்ந்தன. எஞ்சிய ஈசல்களைப் பருந்தும், குருவிகளும் கவ்வி விழுங்கின. சிறகொடிந்து நிலத்தில் வீழ்ந்து நகர்ந்த ஈசல்கள் கொக்குகளுக்கும் கோழிகளுக்கும் இரையாகின.

மழை ஓய்ந்தது
இருள் கலைந்தது
ஒளி பிறந்தது

அந்தக் கறையான்கள் புதிய இடத்தில் புதிய கோபுரத்தை கட்டிக் கொண்டிருந்தன.

உழைப்பு
உழைப்பு
அதுதான்
புதுமையின் பிறப்பு

என்று அவை பாடிக் கொண்டிருந்தன.

**திமிலைத்துமிலன்**

◆ **அரும்பதங்கள்**

| | |
|---|---|
| வரம்புகள் | - எல்லைகள், கட்டுப்பாடுகள் |
| சாத்வீகம் | - அஹிம்சை முறை, வன்முறையற்ற |
| சத்தியாக்கிரகம் | - அஹிம்சை முறைப் போராட்டம் |
| கிளர்ந்தெழுதல் | - வீறுகொண்டு எழுதல் |
| அங்காத்திருத்தல் | - வாய்திறந்து மேல்நோக்கி இருத்தல் |
| அலங்கோலம் | - ஒழுங்கின்றி இருத்தல் |

**கிரகித்தல் பயிற்சி**

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. கறையான்கள் வீடு கட்டுவதற்காகத் தெரிவு செய்த இடம் எது?
2. கறையான்கள் முட்டை இட்டுக் குஞ்சு பொரிப்பதற்கான அறையை எப்படி அழைப்பர்?
3. கறையான்கள் ஈசலிடம் எவ்வாறு நீதி கேட்டன?
4. கறையான்களை வெளியேற ஈசல்கள் அனுமதிக்காமை பற்றி கருத்துக் கூறுக.
5. இறுதியில் ஈசல்களுக்கு என்ன நடந்தது?

**மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்**

1. ஈசல்கள் எவ்வாறு உருவாகின என்பதை ஆசிரியரிடம் கேட்டறிக.
2. ஈசல்களின் செயற்பாட்டினைச் சுருக்கமாக எழுதுக.
3. கறையான்களுக்கும், ஈசல்களுக்கும் இடையே நடைபெற்ற உரையாடலை வகுப்பறையில் செய்துகாட்ட வழிப்படுத்துக.
4. இப்பாடத்தில் இடம்பெறுகின்ற படிப்பினைகள் சிலவற்றை எழுதுக.
5. மாணவர்களைத் தொகைக்கேற்ப குழுக்களாகப் பிரித்து இப்பாடத்தில் இடம்பெறும் சம்பவங்களை ஏற்ற முகபாவம், தொனி வேறுபாடு என்பவற்றுடன் நடித்துக்காட்டும்படி செய்க.

# மொழி வளம்

## ஒலிபேதங்கள்

| | | |
|---|---|---|
| மழை | அலை | உழை |
| வளை | களை | முளை |
| வழி | வெளி | அழி |
| கறை | அறை | நிறை |
| குலை | தலை | வேலை |

## அடுக்குத்தொடர்

தனித்துப் பொருள் தரக்கூடிய சொற்கள் இரட்டித்து வரும் பொழுது அது அடுக்குத்தொடர் எனப்படுகின்றது.

ஓடி ஓடி
உயர உயர
பாய்ந்து பாய்ந்து
புதிய புதிய
தொகை தொகையாக

**பயிற்சி**

பின்வரும் அடுக்குத் தொடர்களைக் கொண்டு வாக்கியம் எழுதுக.

அஞ்சி அஞ்சி
ஊதா ஊத
கொதிக்கக் கொதிக்க
பழகப் பழக
குமுறிக் குமுறி

**ஆக்கத்திறன் செயற்பாடு**

வாசிகசாலையில் காணப்படும் சிறுவர் கதைப் புத்தகங்களைக் கொடுத்து நன்றாக வாசிக்கச் செய்து கதை ஒன்றை உருவாக்குக.

**மேலதிக செயற்பாடு**

1. நீர் வாசித்த சிறிய கதைப் புத்தகங்களில் இருந்து எடுக்கப்பட்ட ஐந்து அடுக்குத் தொடர்களைக் கொண்டு வாக்கியம் எழுதுக.

**அல்லது**

2. நீர் வாசித்த சிறுகதைப் புத்தகங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் போன்றவற்றை எழுதுக.

# 17 ஒழுக்கம் உயர்வளிக்கும்

அதிபர் அவர்களுக்கும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் அன்பான மாணவர்களுக்கும் காலை வணக்கம். நான் உங்கள் முன் ஒழுக்கம் உயர்வளிக்கும் என்ற தலைப்பில் உரையாற்றப் போகின்றேன்.

மாணவர்களாகிய நாங்கள் நல்லொழுக்கங்களை பின்பற்றிச் சிறந்து விளங்க வேண்டும். இன்றேல் எங்களுக்குப் பெருமையிராது.

'ஒழுக்கம் விழுப்பந் தரும்' என்பது வள்ளுவர் வாக்கு. மரம் கனி தரும், மாடு பால் தரும் என்பது போல ஒழுக்கம் விழுப்பந் தரும் என்று குறள் கூறுகின்றது. விழுப்பம் என்பது சிறப்பு, இதனால் நாம் சிறப்படைய வேண்டுமானால் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தல் இன்றியமையாத ஒன்றாகும்.

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை என்பது வள்ளுவர் கருத்து. இது படிப்பால், பட்டத்தால், பதவியால், பணத்தால் ஒருவன் மேன்மை அடைய முடியாது. ஒழுக்கம் ஒன்றினால் தான் மேன்மையடைய முடியும் என்பதை வலியுறுத்துகின்றது. ஆம். ஒழுக்கத்தை இழந்தவர்கள் எவ்வளவு படித்தாலும், எத்தகைய பட்டம் பெற்றாலும், எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும், எவ்வளவு பணம் பெற்றிருந்தாலும் என்ன பயன்?

உயிரைக் காப்பாற்றுவதில் நாம் அனைவரும் அதிக கவனம் எடுத்துக் கொண்டிருக்கின்றோம். அதைவிட ஒழுக்கத்தைக் காப் பாற்றுவதில் அதிகமாகக் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது வள்ளுவர் கருத்து, இதை அவர்,

‘ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்’ என்று அரைக் குறளால் கூறுகிறார்.

ஒழுக்கத்தை இழந்தவர்கள் எவராலும் மதிக்கப்பட மாட்டார்கள். அவர்கள் இகழப்படுவார்கள். அது மட்டுமல்ல. அவர்கள் அடைய வேண்டாத பழியையும் அடைய வேண்டி நேரிட்டுவிடும் என்று வள்ளுவர் எச்சரிக்கை செய்கின்றார். இழுக்கத் தின் எய்துவர்பழி என்று கூறவில்லை. ‘இழுக்கத்தின் எய்துவர் எய்தாப்பழி’ என்பதே அவர் வாக்கு. இதனால் ஒழுக்கம் தவறியவன் தான் செய்யாது, பிறர் செய்த பழியையும் ஏற்க வேண்டிவரும் எனத் தெரிய வருகிறது.

பைபிளில் பத்துக் கட்டளைகள் இருப்பது போல திருக்குறளில் பத்துக் கட்டளைகள் இருக்கின்றன. இவை பத்தும் ஒழுக்கத்தை பெறத் துணை செய்வன. அவை

பொய்யைச் சொல்லாதே, புலாலை உண்ணாதே
கள்ளைக் குடியாதே, களவை நினையாதே
காமம் கொள்ளாதே, கொலையைச் செய்யாதே
சூதை விரும்பாதே, சிற்றினம் சேராதே
புறங் கூறாதே, பொறாமை யடையாதே

இவை பத்தையும் வெவ்வேறு சொற்களால் கூறியிருப்பது எண்ணி எண்ணி வியக்கக்கூடிய ஒன்று. மாணவர்களாகிய நாங்கள் இவற்றைப் பின்பற்றி நடந்தால் மக்கட் சமூகத்தில் நாங்கள் உயர்ந்து காணப்படுவோம். ஆகவே ஒழுக்கம் உயர்வளிக்கும் என்பதைக் கேட்டு மனத்தில் வைத்து நடந்தீர்களானால் நீங்களும் உயர்வடைவீர்கள் என நம்புகிறேன். என் உரையை அமைதியாகக் கேட்ட அனைவருக்கும் அன்பின் பணிவு. நன்றி வணக்கம்.

## கிரகித்தல் பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. மனிதன் மேன்மையை எவ்வாறு பெறுகின்றான்?
2. மரம் கனி தருவதைப் போல் ஒழுக்கம் எதனைத் தரும்?
3. மனிதன் எவற்றால் மேன்மை அடைய முடியாது?
4. ஒழுக்கம் பற்றி கூறப்பட்டுள்ள திருக்குறள்கள் இரண்டு தருக.
5. இகழ்ச்சிக்கு ஆளானோர் யார்?

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

1. இதுபோன்ற வேறு சொற்பொழிவுகளைச் சேகரிக்குக.
2. திருக்குறளில் ஒழுக்கமுடைமை எனும் அதிகாரத்தை எழுதுக.
3. உமது பாடசாலையில் நடைமுறைப் படுத்தப்படும் சட்டதிட்டங்கள் பற்றிக் கலந்துரையாடுக.
4. குறித்த சொற்பொழிவில் குறிப்பிடப்பட்டுள்ள நற் பண்புகளைக் குறிப்பிடுக.
5. திருக்குறளில் பத்துக் கட்டளைகள் எனக் கூறப்பட்டுள்ள விடயங்களை பட்டியற்படுத்துக.

**செயற்பாடு**

1. ஒழுக்கம் தொடர்பாக வள்ளுவர் கூறிய ஏனைய குறட் பாக்களைத் தேடி எழுதுக.
2. மாதிரிச் சொற்பொழிவு ஒன்றினை நிகழ்த்துவதற்கு வழிகாட்டுக.

# 18 மரங்கள் வாழ்க! மாநிலம் வாழ்க!

மரஞ்செடி கொடியால் மண்ணில் வாழ்வு
  மனிதர்கள் இதனை உணர்வது அறிவு
அறஞ்செயல் நல்ல மரம்செடி வளர்ப்பு
  அனைவரும் இதனை உணர்வது சிறப்பு

உடுத்தும் ஆடை தருவது எதுவோ?
  உண்ணும் உணவுகள் தருவது எதுவோ?
படுக்கும் பாய்கள் தருவது எதுவோ?
  பலவகை மரங்கள் செடிகொடி அன்றோ?

அரிசியும் பருப்பும் கொடுப்பது எதுவோ?
  அறுசுவை உண்டி அளிப்பது எதுவோ?
தரணியில் வாழ நற்றுணை எதுவோ?
  தருக்களும் செடிகளும் கொடிகளும் அன்றோ!

மாங்காய் தேங்காய் கொடுப்பது எதுவோ?
  மதுரக் கனிகள் கொடுப்பது எதுவோ?
நீங்காது நம்மைக் காப்பது எதுவோ?
  நிழல்தரு மரங்கள் செடிகொடி அன்றோ?

வாழ்க மரங்கள் செடிகொடி வாழ்க!
  வானம் பொழிந்து மாநிலம் வாழ்க!
தாழ்வில்லாத தருமம் வாழ்க!
  தானமும் தவமும் தழைத்து வாழ்க!

**பரலி சு. நெல்லையப்பர்**

குறிப்புரை:

பரலி சு. நெல்லையப்பர் பாரதியாரின் புகழை உலகறியச் செய்தவர். அவர் பாரதியாரால் 'தம்பி' என அழைக்கப்பெற்றவர். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் பாரதியாரின் பாடல்களைத் துணிவுடன் நூலாக வெளியிட்டுப் பரப்பியவர். வ.உ. சிதம்பரனார் நிறுவிய சுதேசிக் கப்பல் நிறுவனத்தில் பணியாற்றியவர். 1908 இல் சிதம்பரனாருடன் சிறை சென்றவர். புதுச்சேரியில் 'சூரியோதயம்', 'இந்தியா', 'விஜயா', 'கர்மயோகி' எனும் இதழ்களில் பாரதியாருடன் சேர்ந்து பணியாற்றியவர்.

## அருஞ்சொற்பொருள் விளக்கம்

**மண்ணில்** - உலகில், **உணர்வது** - தெரிந்துகொள்வது, **அறுசுவை** - ஆறு சுவை (இனிப்பு, கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு), **உண்டி** - உணவு, **அளிப்பது** - கொடுப்பது, **தரணி** - உலகம், **நற்றுணை** - நல்ல துணை, **தருக்கள்** - மரங்கள், **மதுரம்** - இனிமை, **வானம்** - (இங்கு மழை என்பது பொருள்), **மாநிலம்** - பெரிய உலகம், **தாழ்வில்லாத** - குறைவில்லாத, **தருமம்** - அறச்செயல்கள், **தழைத்து** - செழித்து, **தானம்** - கொடை கொடுத்தல், **தவம்** - மனத்தைக் கட்டுப்படுத்தல்.

## சொற்களைப் பிரித்தறிதல்

| | | | | |
|---|---|---|---|---|
| மரஞ்செடி | - | மரம் | + | செடி |
| அறஞ்செயல் | - | அறம் | + | செயல் |
| நற்றுணை | - | நல் | + | துணை |
| மதுரக்கனிகள் | - | மதுரம் | + | கனிகள் |
| தாழ்வில்லாத | - | தாழ்வு | + | இல்லாத |

## கிரகித்தல் பயிற்சி

(அ) 1. பின்வரும் சொற்களுக்குப் பொருள் கூறுக
உண்டி, தரணி, தருக்கள், மதுரம், மண்ணில், வானம்

2. பிரித்து எழுதுக
நற்றுணை, தாழ்வில்லாத, அறஞ்செயல்

(ஆ) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.
1. எதனை உணர்வது அறிவு?
2. எதனை உணர்வது சிறப்பு?
3. கவிஞர் எவை வாழ்கவென வாழ்த்துகிறார்?

(இ) பாடலில் கூறப்பட்டுள்ளவாறு மரஞ்செடி கொடிகளால் மக்கள் பெறும் நன்மைகளைத் தொகுத்து எழுதுக.

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

1. 'உலகம்' என்னும் பொருள் தரும் சொல்லை இப்பாடலில் இருந்து எடுத்து எழுதுக.

2. கீழ்க்காணும் தொடர்களை விளக்கி எழுதுக
எடுத்துக்காட்டுக்கள்
★அறுசுவை - இனிப்பு, கசப்பு, புளிப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு
★முத்தமிழ் - இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்

விளக்கி எழுத வேண்டிய தொடர்கள்
1. இருதிணை 2. மூவேந்தர் 3. முக்கொடி 4. நானிலம்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

# 19 குறும்பா

வல்லரசின் செய்கையினைக் கண்டு
        வல்லரசு வீசியது குண்டு
நல்லபடி நம் மனிதர்
        நச்சரிப்புத் தீர்ந்துவிடத்
தொல்லுலகை ஆள்கிறது நண்டு

**மஹாகவி**

**தகரம்**

குப்பன்வாழ் லயத்தினது கூரை
        குளமாக்கும் வீட்டைமழைத் தாரை
தப்பாது இங்கு வந்த
        தகர மெல்லாம்ஓ ரிரவில்
அப்போதே அடையும் கொழும்பூரை

**குறிஞ்சித்தென்னவன்**

**விசா**

நாடுவிட்டு நாடு சென்றால் தம்பி
        நல்ல நிலை வருமென்று நம்பி
வீடு வாசல் ஈடு வைக்க
        விசாவின்றி வெளிக்கிட்டான்
கோடு ஏறி எண்ணுகிறான் கம்பி

## பெருமை

கந்தவனம் காலமாகி விட்டார்
        கைதடியார் கடமைகளைச் செய்தார்
ஐந்து பிள்ளை கனடாவில்
        ஆறாமவன் அபுதாபி
இந்தவகை பெருமையவர் கொண்டார்

## அலுவலகம்

அலுவலகம் வந்ததுமே அரட்டை
        அலசிடுவார் ஊர்வம்புத் திரட்டை
வலுவிழந்து போகும்வரை
        வாயோய்வதில்லை எங்கள்
குலசிங்கம் பின்விடுவார் குறட்டை

**பா. சிவபாலன்**

◆ ***அரும்பதங்கள்***

லயம் - வரிசையாகக் கட்டப்பட்ட குடியிருப்புகள்
அரட்டை - வீண்பேச்சு
ஈடுவைத்தல் - அடகு வைத்தல்
கோடு - நீதிமன்றம்

### கிரகித்தல் பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. ஒவ்வொரு குறும்பாவினதும் மையக் கருத்தைத் தருக.
2. வீடு ஏன் குளமாகின்றது?
3. அலுவலகத்திலே குலசிங்கம் என்ன செய்வதாகக் கூறப்படுகின்றது?
4. கம்பி எண்ணுதல் என்றால் என்ன?
5. கந்தவனத்தின் பிள்ளைகள் எங்கே வாழ்கின்றனர்?

### மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

1. ஒவ்வொரு குறும்பாவிலும் கூறப்படும் கருத்துக்கள் பற்றி கலந்துரையாடுக.
2. இவை போன்ற குறும்பாக்களை எழுத மாணவர்களை வழிப்படுத்துக.
3. குறும்பாக்களைச் சேகரித்து நூல் ஒன்று தயாரிக்கச் செய்க.
4. குறும்பா ஆசிரியர்கள் பற்றியும் அவர்களது வேறு ஆக்கங்கள் பற்றியும் கலந்துரையாடுக.

# 20 கம்பரிற் பாலர் கல்வி

மாலை நேரம் ஆகின்றது. பள்ளியிலிருந்து சின்னஞ்சிறிய சிறுவர்கள் வருகின்றார்கள். அவர்கள் பச்சைப் பாலர்கள். மிக மிக பச்சையான பாலன் முன்னுக்கு வருகிறான். அந்தப் பச்சைக்குப் பெயர் இராமன். இராமனும் தம்பிமாரும் பள்ளியிலிருந்து வருகிறார்கள்.

**'வீரனும் இளைஞனும் வெறிபொழில் களின்வாய்**
**ஈரமொ டுரைதரும் முனிவர ரிடைபோய்ச்**
**சோர்பொழு தணிநகர் துறுகுவர் எதிர்வார்'**

வீரன் இராமன், இளைஞர் தம்பிமார், அவர்களுடைய பள்ளிக்கூடம் காட்டுப் பள்ளிக்கூடம் நகரத்தைச் சூழ்ந்திருக்கிறது நாடு. நாட்டுக்கு அப்பாலே காடு. காடுகளுக்குள்ளே நல்ல மரச் சோலைகளுக்குக் கீழேதான் பள்ளிக்கூடம். பள்ளிக்கூட உபாத் தியாயர்கள் **'ஈரமொடுரைதரு முனிவரர்'** நெஞ்சிலே ஈரமுள்ள - அன்பு கசிந்து ஒழுகுகின்ற - வசிட்டர் முதலிய முனி சிரேஷ்டர்கள் தாம் இராமன் போன்றவர்களைப் படிப்பிக்கின்றவர்கள். இராமனுந் தம்பிமாரும் நகரங்கடந்து, நாடு கடந்து நடந்துபோய்க் காட்டுப் பள்ளியிற் படித்துவிட்டு, மாலை நேரத்தில் நகரை நோக்கி வருகின்றார்கள்.

வழியிலே நாட்டிலுள்ள குடியான சனங்கள் எதிர்வர். இந்தக் குழந்தைகளாகிய பச்சைப் பாலகர்களை எதிர்கொள்ளுபவர்கள் போல எதிரே வருவார்கள். வேறு வழியிற் செல்லுபவர் கூட - வேறு அலுவல்களில் ஈடுபட்டிருப்பவர்கூட - அந்தப் பரிசுத்த பாத்தி ரங்களான பாலர்களைக் கண்டதும், கன்றுகளை நோக்கி வருகின்ற பசுக்கள் போல அக்குழந்தைகளை எதிர்வர். அந்தக் குழந்தைகளை

நோக்கிக்கொண்டு எதிர்வருவதில் அவர்களுக்குப் பெரிய ஆசை, ஒருமுறை எதிர்செல்லும் ஆசையால் வேறொரு வழியால் வந்து எதிர்வர். எதிர் வருகிறவர்கள் அத்தனை பேரும்,

'கார்வர அலர்பயிர் பொருவுவர் களியால்'

கார் காலம் வரத் தளிர்த்துக் களிக்கின்ற நெற்பயிர்போல, அகமும் முகமும் ஒருங்கு மலர்ந்து களி கொள்ளுகின்றார்கள்.

'எதிர்வரும் அவர்களை யெமையுடை யிறைவன்
முதிர்தரு கருணையின் முகமலர் ஒளிரா
எதுவினை இடரிலை இனிதுநும் மனையும்
மதிதரு குமரரும் வலியர்கொல் எனவே'

எதிரில் வருகின்ற குடிசனங்கள் எத்தனை முறை திரும்பித் திரும்பி வந்தாலும், எங்கள் இறை ஆகிய இராமன், சூரியோதத்தைக் கண்ட தாமரை மலர்போல முகம் மலர்ந்து பிரகாசிக்கின்றான். கருணையாகிய இனித்த தேன் கனிந்து அவன் முக மலரினின்றும் ஒழுகுகின்றது. 'எப்படி முயற்சிகள்! ஷேமந்தானே? வீட்டுப் பக்கமும் நல்ல சௌக்கியமே! மதிக்கத்தக்க புத்தி கூரிய உங்கள் புதல்வர்கள், கல்வியிலும், ஆண்மையிலும் மிக்க சாமர்த்தியமானவர்களாய் இருப் பார்களே!' என்றெல்லாம் சுகநலம் விசாரிக்கின்றான். இப்படி விசாரிக் கின்றவன் யாவன்? **குழந்தையாகிய இராமன், இளவரசு.** எப்படிப் பட்டவர்களை விசாரிக்கிறான்! பெண்களும் ஆண்களுமான சாதாரண குடிசனங்களை விசாரிக்கின்றான். எந்த சந்தர்ப்பத்தில் விசாரிக்கின்றான்? பள்ளியில் இருந்து வரும்போது சனங்களை சந்திக்குந்தோறும் விசாரிக்கின்றான். இனி அந்த வசனங்களைப் பாருங்கள்.

அஃதைய நினைஎம தரசென உடையேம்
இஃதொரு பொருளல எமதுயி ருடன்ஏழ்
மகிதலம் முழுதையும் உறுகுவை மலரோன்
உருபகல் அளவென உரைநனி பகர்வார்

'அப்பனே, நீதான் எங்களுக்கு இராசா. எங்களுக்கு என்ன குறை? இனி நீ அடிக்கடி எங்கள் சுகங்களை விசாரிக்க வேண்டா. நாங்கள் நித்திய சுகசீவிகளாய் வாழ்ந்து வருகிறோம். அதுகிடக்க, நாங்கள் எங்கள் உயிரையும் ஏழுலகங்களையும் உன்னுடைய பாதங்களுக்கே அர்ப்பணிக்கின்றோம். கற்பகாலம் வரையும் நீ எங்களை ஆண்டு அரசு புரிவாயாக!' என்று உரையாடுவார்கள் அந்தச் சனங்கள். அம்மட்டோ!

**ஏழையர் அனைவரும் அவர்தட முலைதோய்**
**கேழ்கிளர் மதுகையர் கிளைகளும் இளையார்**
**வாழிய என அவர் மனன்உறு கடவுட்**
**டாழ்குவர் கௌசலை தயரதன் எனவே**

பெண்கள் ஆண்கள் யாவரும் 'இந்த அரசிளங் குழந்தைகள் நீடுவாழல் வேண்டும். நமது குல தெய்வங்கள் திருவருள் பொழிய வேண்டும்' என்றெல்லாம் வாழ்த்துகிறார்கள். பிரார்த்திக்கிறார்கள். பெற்றோராகிய கௌசலையும் தசரதனும் அந்தக் குழந்தைகளையிட்டு எப்படிப் பிரார்த்திப்பார்களோ, அப்படிப் பிரார்த்திக்கிறார்கள் குடிசனங்கள்.

குடிசனங்களின் வாழ்த்திலே குழந்தைகள் வளர்பிறை போல வளர்ந்து வருகிறார்கள். அவர்களுடைய ஆன்மா மரநிழலிலே வசிட்ட முனிவரின் கல்விப் போதனையில் விருத்தியடைகின்றது. வில்வித்தைகள் மல்வித்தைகள் தாமும் அவர்களுக்குச் சொல்லி வைப்பவர் வசிட்டர்.

வசிட்டருடைய பல்கலைக்கழக மாணவராகிய இராமனுக்கு ஒருநாள் பரீட்சை ஆரம்பிக்கின்றது. அது வாய்மொழிப் பரீட்சை. அவனுடைய சிறிய தாய் கைகேயி. அவள் சொல்லுகிறாள். 'ஏ இராமா! நீ காட்டை ஆள், உன் தம்பி பரதன் நாட்டை ஆளட்டும். இது உன் தந்தையின் விருப்பம்'.

'அம்மா, தந்தையாரின் விருப்பம் என்றும் தாங்கள் சொல்ல வேண்டுமா? தாங்கள் காலாலே காட்டுவதை யான் தலையாலே செய்வேனே! என் பின்னவன் பெற்ற செல்வம் யான் பெற்ற செல்வம் அன்றோ!' என்கிறான் இராமன். பரதனை நினைந்து அவனுக்கு மகிழ்ச்சி பொங்குகின்றது. தாய் சொற்படி காட்டுக்குப் புறப்படு கின்றான். சீதையும் இலக்குமணனுந் தொடர்கின்றார்கள். பரீட்சையிற் பூரண வெற்றி அடைகின்றான் இராமன்.

இந்தப் பரீட்சைக்கு முன்னமே ஒரு பெரிய பரீட்சையில் இராமன் தேறியிருக்கின்றான். அது நாடு நகரங்களிலே உள்ள வர்களுக்குத் தெரியாது. காட்டிலே நடந்தது. விசுவாமித்திரரின் வேள்வியைக் காவல் செய்ததற்குப் போனபோது நடந்தது. விசு வாமித்திரர் இலக்குமணர்களை அழைத்துக்கொண்டு காட்டுக்குட் பிரவேசிக்கின்றார். தாடகை ஆலகால விடம்போல் வாயைத் திறந்து கொண்டு வருகின்றாள். விசுவாமித்திரருக்கு அச்சம் உண் டாகிறது. 'இராமா, உனது பாணந்தான் உயிர்களுக்குத் தஞ்சம்', என்கின்றார் விசுவாமித்திரர். இராமனுக்கோ அம்பிலே தொட கை கூசுகின்றது. தாடகை கொடியவள் ஆனாலும்

'பெண்ணெனை மனத்திடை பெருந்தகை நினைந்தான்'

'இவள் ஒரு பெண்ணாயிற்றே! இவள்மேலே யோசனையின்றித் திடீரென்று அணுகுண்டுப் பிரயோகம் செய்யலாமா?' என்று சற்றே தாமதித்தான் அந்த இராமன்.

'அடே இராமா,

ஆறிநின்றது அறன், நன்று'

என்று விசுவமித்திரரே இராமனைப் பாராட்டுகிறார். அவன் தாமதித்ததும் சிந்தித்ததும் தருமம் ஆயின. அவனுக்கு இத்தருமம் எங்கு இருந்து வந்தது. எந்தக் கலாசாலைப் படிப்பிலிருந்து வந்தது? சற்றே சிந்தியுங்கள்.

இராவணன் சீதையைக் களவு செய்தவன். யுத்தத்திலே படைகளை இழந்து வெறுங்கையோடு வெட்கித் தலைகுனிந்து இராமன் எதிரில் நிற்கின்றான். இராமன் ஒரே ஒரு பாணத்தால் அவனைக் கொன்று ஒழிக்கலாம், ஆனால் அந்த இராமன், 'இராவணா, தவித்த முயல் அடிப்பது தருமம் அன்று. இன்று போய்ப் போர்க்கு நாளை வா!' என்கிறான். இந்த வார்த்தை இராமனுக்கு எப்படி வந்தது? யோசியுங்கள்.

**இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**

## கிரகித்தல் பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. இராமனுடைய சகோதரர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
2. ஈர மொடுரைதரு முனிவரர் என்பதன் கருத்து யாது?
3. இராமன் மக்களை எவ்வாறு விசாரிக்கிறான்?
4. மக்கள் இராமனை எவ்வாறு வாழ்த்துகின்றனர்?
5. இராமன் எதிர்கொண்ட வாய்மொழிப் பரீட்சை யாது?
6. இப்பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உவமைத் தொடர்கள் மூன்றைத் தருக.

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

1. இராமாயணத்தில் மாணவர்களுக்குத் தெரிந்த ஏனைய பகுதிகள் பற்றி கலந்துரையாடுக.
2. இராமாயணத்தில் குறிப்பிடப்படும் முக்கியமான கதாபாத்திரங்களின் பண்புகள் பற்றிக் கூறுக.
3. பெண்களை மதிப்பவன் இராமன் என்பதைப் பற்றிக் கலந்துரையாடுக.
4. இப்பாடப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள செய்யுள் பகுதிகளுக்கான கருத்துப் பற்றிக் கலந்துரையாடுக.
5. உவமைத் தொடர்களும் அவற்றின் பொருளும் உள்ளடங்கியதாக நூல் ஒன்று தயாரிக்க.

**பயிற்சி**

கீறிட்ட இடங்களை நிரப்புக.

(தாடகை, மக்களுக்கு, முனி சிரேட்டர்கள், மரச் சோலைகளின் கீழ், படைகளை இழந்து)

1. பள்ளிக்கூடம் ............................... அமைந்திருந்தது.
2. இராமனுக்கு ............................... கல்வி கற்பித்தனர்.
3. இராமன் ............................... இறைவனாகத் தெரிந்தான்.
4. ............................... ஆலகால விடம்போல் வந்தாள்.
5. இராவணன் ............................... வெறுங் கையோடு சென்றான்.

ஒத்த சொல் தருக.

1. இளைஞர்
2. முனிவர்
3. கார்காலம்
4. சாமர்த்தியம்
5. போதனை

# சொற்புணர்ச்சி

இரண்டு சொற்கள் பொருள் மாறுபடாத வகையில் இணைவது சொற்புணர்ச்சி எனப்படுகின்றது. அதில் முதற் சொல்லை நிலைமொழி என்றும் அதனோடு சேரும் சொல்லை வருமொழி என்றும் கூறுவர்.

எடுத்துக்காட்டு

1. வெண்டி + காய் = வெண்டிக்காய்
2. மணல் + வீடு = மணல்வீடு
3. கடல் + நீர் = கடல்நீர்

இங்கு இரண்டு சொற்கள் பொருள் மாறுபடாத வகையில் இணைந்துள்ளன. இவற்றை சொற்புணர்ச்சி என்பர்.

**செயற்பாடு**

இவ்வாறான பத்து சொற் புணர்ச்சிகளை ஈசலும் புற்றும் என்ற பாடத்தில் இருந்து தெரிந்து எழுதுக.